

# பண்டார வன்னியன்

கலைக் கழகப்
பரிசு பெற்ற
வரலாற்று நாடகம்





மணிமேகலைப் பிரசுரம்

கலாநிதி முல்லை மணி

## வே. சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டார வன்னியன்

(வரலாற்று நாடகம்)

கலாநிதி 'முல்லைமணி'
வே. சுப்பிரமணியம் S.L.E.A.S.

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண்.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
WebSite : www.tamilvanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | ☞ | *பண்டார வன்னியன்* |
| ஆசிரியர் | ☞ | முல்லைமணி |
| மொழி | ☞ | தமிழ் |
| முதற் பதிப்பு (இந்தியா) | ☞ | 2006 |
| உரிமை | ☞ | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ☞ | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | ☞ | கிரௌன் சைஸ் (12½ x 18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ☞ | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ☞ | 140 |
| அட்டைப்பட ஓவியம் | ☞ | ஐஸ் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | ☞ | கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ் ✆ 23725639 |
| அச்சிட்டோர் | ☞ | ஸ்கிரிப்ட் ஆஃப்செட் சென்னை - 94. |
| நூல் கட்டுமானம் | ☞ | தையல் |
| வெளியிட்டோர் | ☞ | **மணிமேகலைப் பிரசுரம்** சென்னை - 17. |

நூலின் இந்திய விலை : **ரூ. 40.00**

நூலின் இலங்கை விலை : **ரூ. 150.00**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்

பீரங்கி வாய்க்கஞ்சா வன்னி வீரன்
பெருங்கதையை நாடகமாய் யாத்த உந்தன்
ஆர்வந்தான் அளப்பரிதோ அன்றி வன்னி
அன்னைதன் புகழரிதோ அறியேன் ஆனால்
கார்கொண்டு விளைவளிக்கும் வன்னி நாட்டின்
வரலாறு இருள்மூழ்கி இருந்த காலை
ஆரிந்தப் புகழ் செய்தார் ஆராய்ச்சிக்கு
அடியெடுத்தாய் முல்லைமணி தொடர்க! வாழ்க!!

**நா. சுப்பிரமணியன்**
(நிலீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரது ஏனைய நூல்கள்

**அரசிகள் அழுவதில்லை** (சிறுகதைத் தொகுதி 1977)

**மல்லிகை வனம்** (சமூக நாவல் 1985) - சென்னை சோமு புத்தக நிலைய வெளியீடு

**ஒட்டுசுட்டான் தான் தோன்றி ஈஸ்வரர் பாமாலை** - 1976

**நெடுங்கேணி வில்வையடிப் பிள்ளையார் பாமாலை** - 1977

**காவத்தை நீலகாமம் முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்** - 1978

**தமிழ் மொழிப் பயிற்சி** - 1975

**வன்னியர் திலகம்** (வரலாற்று நாவல் - 1998)

**இலக்கியப் பார்வை** (இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு - 1999)

**கமுகஞ்சோலை** (பாரம்பரிய வரலாற்று நாவல் 2000)

**வன்னியியற் சிந்தனை** (கட்டுரைத் தொகுப்பு 2001)

**மழைக்கோலம்** (சமூக நாவல் 2002)

**கொண்டு வந்த சீதனம்** (சிறுகதைத் தொகுப்பு 2005)

### அச்சில்

**வன்னியின் கதை** (ஆய்வு நூல்)

**நினைவுச் சரங்கள்** (எழுத்தும் வாழ்க்கையும்)

இவர் இலங்கை தேசிய சாகித்திய விருதுகளையும் வடக்குக் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இலக்கிய விருதுகளையும், இலங்கைக் கலைக்கழகப் பரிசினையும் சுவீகரித்துள்ளார்.

**- மணிமேகலைப் பிரசுரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## கலாநிதி. சு. வித்தியானந்தன்

இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் துணைப்பேராசிரியர்

ஒரு நாட்டின் வேரிலுள்ள பகைமைநீக்கி
உட்புறத்தில் புத்தொளியைச் சேர்ப்பதற்கும்
பெருநாட்கள் முயன்றாலும் முடியாஒன்றைப்
பிடித்தபிடி யில்பிடித்துத் தீர்ப்பதற்கும்
பெருநோக்கம் கொள்வதற்கும் பிறநாட்டார்கள்
நாடகங்கள் சினிமாக்கள் செய்வார்; என்தன்
திருநாட்டில் பயனற்ற நாடகங்கள்
சினிமாக்கள் தமிழர்களைப் பின்னேதள்ளும்.

மேற்கண்ட பாடலிலே தமிழ்நாட்டு நாடகங்களின் கீழ் நிலை கண்டு வருந்திய பாரதிதாசன், அதே வேளையில் நாடகத்தால் எய்தற்கூடிய நன்மைகளையும் சுட்டிக்காட்டுகிறார். சக்திமிக்க நாடகக் கலை மூலம் மக்களுக்கு அவர்தம் வரலாற்றுப் பெருமையை உணர்த்தலாம்; அவர்களுடைய சிந்தையிற் சிறந்த நினைவுகளை விதைக்கலாம்; இன்பம் ஏற்படுத்தலாம்; அவர்களைச் செயலூக்கம் மிகுந்தவராக ஆக்கலாம்.

பண்டார வன்னியன் என்னும் வரலாற்று நாடகத்தில், மக்கள் நலனை மனதுட் கொண்டு தேசப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுடன் ஆண்ட தலைவன் ஒருவனை அவனது நற்பண்புகள் மக்களுக்கு விளங்குமாறு நேருக்கு நேர் நிறுத்தியிருக்கிறார் ஆசிரியர் திரு.வே. சுப்பிரமணியம் அவர்கள். அது மட்டுமன்று, அந் நல்ல தலைவனது முயற்சிகளுக்குப் பங்கம் விளைத்த சக்திகளையும், மனிதர்களையும் மக்கள் முன் நிறுத்தி அவர்கள் மீது வெறுப்பினை உண்டாக்கியிருக்கின்றார். நல்ல தலைவர்களை மக்கள் விரும்பவும், இனங்கண்டு கொள்ளவும், நல்ல தலைவர்கள் தோன்றவும் இத்தகைய நாடகங்கள் இக்கால கட்டத்தில் உதவும். அத்துடன் மக்களிடையே நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும், சொந்தக் கலாசாரப் பற்றும் வளரவும் இவ்வரலாற்று நாடகம் உதவும்.

வரலாற்று மாணவர்களாலேயே சரியாக அறியப்படாதிருக்கும் வன்னி இராச்சியத்தின் முக்கியத்துவத்தினையும், ஆங்கில ஆதிபத்தியத்துக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்திய பண்டாரவன்னியனின் முக்கியத்துவத்தையும் புலப்படுத்துகின்றது 'பண்டாரவன்னியன்' நாடகம். இந்நாடகத்தை ஆசிரியர் சிக்கல் இல்லாது தெளிவாக ஆக்கியிருப்பதன் மூலம் தான் மேற்கொண்ட நோக்கங்களை மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றியிருக்கின்றார். வன்னிப் பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும் இலங்கைத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும், தேசப் பற்றும், உரிமைக் குரலும் ஓங்க இந்நாடகம் பயன்படும். வன்னி நாட்டுத் தலைவனொருவனின் சிறந்த வாழ்க்கையை நாடகமாக்கியிருக்கும் ஆசிரியர், ஒடுங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச மனப்பான்மைக்கு முக்கியத்துவம் கொடுக்காது, தேசிய நோக்குடன் தேசப் பகைப் புலத்திற் பண்டாரவன்னியனின் சிறப்பைத் தீட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

முல்லைமணி அவர்கள் வரலாற்று குறிப்பினை நூலின் முற்பகுதியிற் சேர்த்திருக்கின்றார். இது நூலின் மதிப்பினை இன்னும் ஒரு படி உயர்த்துகின்றது. நாடகம் எழுத உதவிய நூல்களைப் பற்றிய விபரம் இவரது பரந்த அறிவினுக்கும் முயற்சிக்கும் ஏற்ற சான்று.

*1964*-ம் ஆண்டு இலங்கைக் கலைக்கழகம் நடாத்திய நாடகப் போட்டியில் பண்டாரவன்னியன் நாடகம் இரண்டாம் பரிசினைப் பெற்றது. திரு. வே. சுப்பிரமணியம் தொடர்ந்து பல நாடக நூல்களைப் படைத்து ஈழத்தின் சிறந்த நாடக ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ இறைவன் அருள் செய்வாராக.

**சு. வித்தியானந்தன்**

**பல்கலைக் கழகம்,**
**பேராதனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## ஈழத்தமிழ் நாடகத் தந்தை
## கலையரசு க. சொர்ணலிங்கம்

பண்டாரவன்னியன் நாடகம் முல்லைத்தீவில் முள்ளியவளை இயல் இசை நாடகக் கலாமன்றத்தினராலும் தெல்லிப்பழையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்களாலும் நடிக்கப்பட்டதை நான் பார்த்திருக்கிறேன். இந்நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது இது போன்ற நாடகங்களையே தற்காலத்தில் உள்ளவர்கள் பார்த்து உணரும்படி நானே நடித்துக் காட்ட வேண்டுமென்ற ஆசையே பிறக்கிறது.

இந்நாடக ஆசிரியரின் வசன நடை நமது உள்ளங்களில் எத்தகைய உணர்ச்சி எழுச்சிகளை உண்டு பண்ணுகிறது? எமது முன்னோர்களுள் உயிர் போனாலும் தன்மானம் காக்கும் வீரர்கள் இருந்திருக்கிறார்கள். அதே வேளையில் இப்போது இருப்பது போல் உத்தமர்களுடன் நண்பர்கள் போல் நடித்து அவர்களுக்குத் துரோகஞ் செய்து தாம் முன்னேற வழிதேடும் நயவஞ்சகர்களும் இருந்து தான் இருக்கிறார்கள். இத்தகைய துரோகிகளால்தான் நாம் நம் சுதந்திரத்தை இழந்தோம்.

இந்நாடகத்தின் ஆசிரியர் முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களால் இயற்றப்பட்ட வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களையும் பார்த்திருக்கிறேன். இவர் நாடக ஆசிரியரொருவருக்கு இருக்க வேண்டிய மொழியறிவு, கலைஞானம், மேடை அனுபவம் என்பவற்றை நிறையப் பெற்றுள்ளார் என்பது தெரிகிறது. இந்நாடகத்தில் அவர் உபயோகிக்கும் விறுவிறுப்பான வசனங்கள் கருத்துச் செறிவுடையனவாக இருப்பது மட்டுமன்றி கேட்போரது உள்ளங்களை துரிதமாகச் சிந்திக்கத் தூண்டுவனவாகவும் உள்ளன. நாடகத்தின் நோக்கத்தை நன்றாக உணர்ந்து நமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க கூடியவாறு எழுதப்பட்டுள்ளது இந்த நாடகம். இந்நாடகத்தைத் தற்காலத்துக்கு மிகவும் உபயோகப்படக்கூடிய நாடகம் என்றே கூறலாம். இதுபோன்ற நாடகங்களை இந்நூலாசிரியரும் மற்றுமுள்ளோரும் இயற்றி நடித்துவருவாராயின் நமது கலையும் பண்பாடும் உயர்வடையும் என்பதற்கு ஐயமில்லை.

நவாலி
மானிப்பாய்

**க. சொர்ணலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அந்நியருடன் இறுதி மூச்சுவரை அயராது போரிட்ட அடங்காப்பற்றின் காவலன் பண்டாரவன்னியனுக்கு எதிரிகளே நினைவுச் சிலை எழுப்பினர். நினைவுச் சிலை அமைந்த கிராமம் கற்சிலையின் பெயராலேயே கற்சிலைமடு என அழைக்கப்படுகின்றது. கவனிப்பாரற்றுக் கடுந்தவம் புரிந்து கொண்டிருக்கும் கற்சிலை கூறும் செய்தியே பண்டாரவன்னியன் வரலாற்றாராய்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது. இதன் பின்னணியிலேயே இந்நாடகம் பிறந்தது. சுமார் பத்து ஆண்டுகளாக வன்னிநாட்டுக் காட்டிலும், ஏட்டிலும், கொழும்பு, நூதனசாலை நூல் நிலையத்திலும் தேடிச் சேர்த்த பல தகவல்கள் நாடகத்தை எழுத அடிப்படையாக இருந்தன. இதனால் வரலாற்று ஆராய்ச்சி முற்றுப் பெற்றுவிட்டதென்பது எம் கருத்தன்று. அறிஞர்களும் வரலாற்று மாணவர்களும் முயற்சி செய்யின் புதிய பல தகவல்களும், கருத்துகளும் பிறக்கலாம். இந்நூல், சிறப்பாக இதில் சேர்க்கப்பட்டிருக்கும் வரலாற்றுக் குறிப்பு - வன்னி மன்னர்களின் வரலாற்றை ஆராய்பவர்களுக்குத் தூண்டுகோலாய் அமையுமெனின் எமது நோக்கம் நிறைவேறியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறும் இலக்கியமும் வெவ்வேறு நோக்கமும் தன்மையும் கொண்டவை. உள்ளதை உள்ளபடி உணர்ச்சிக் கலப்பின்றிக் கூறமுயல்வது வரலாறு. உள்ளதை உள்ளம் உணர்ந்தபடி உணர்ச்சியும் கற்பனையும் கலந்து அமைவது இலக்கியம். எமது நூல் வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட நாடக இலக்கியமேயன்றி வரலாறல்ல என்பதை விமர்சகர்கள் மனத்திற் கொள்ள வேண்டும். பெருமளவு வரலாற்றுப் பாத்திரங்களும் சில கற்பனைப் பாத்திரங்களும் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றன. இதில் தோன்றும் காக்கைவன்னியன் சங்கிலி மன்னன் காலத்தில் வாழ்ந்த காக்கைவன்னியனிலும் வேறுபட்டவன். கைலாயவன்னியனும், பெரியமெயினாரும், மாரியும் கற்பனைப் பாத்திரங்கள். ஏனையவை வரலாற்றில் இடம் பெறுபவை. நாடகத்திற்குத் தேவையெனக் கருதப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களும், கற்பனையும் கலந்தே இந்நாடகம் உருவாக்கப்பட்டது.

1964இல் இலங்கை கலைக்கழக நாடக எழுத்துப் போட்டியில் பரிசு பெற்ற பண்டாரவன்னியன் நாடகம் இப்பொழுது தான் நூல் வடிவு பெறுகிறது. நாடகம் உருவாகும் போது பல பெரியார்களும் நண்பர்களும் பல்வேறு விதத்தில் உதவிபுரிந்துள்ளனர்.

வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும், கொழும்பு அரச கரும மொழித் திணைக்கள உதவி ஆணையாளராகவும் இருந்த திரு. ந. சிவராசா அவர்கள் ஆக்கபூர்வமான பல ஆலோசனைகளைத் தந்துதவியவர்; இலங்கைக் கலைக்கழகத்திற்கு இந்நாடகத்தை அறிமுகஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவைத்தவர். நாடகத்தையும் என்னையும் நாடறியச் செய்தவர். அன்னாருக்கு என் உள்ளங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று மூலாதாரங்களைச் சேகரிக்கத் திருவாளர்கள் கனகையன் B.A. (Lond.) அவர்களும், சி. முத்தையா B.A. (Lond.) அவர்களும் உதவி புரிந்தனர். வன்னி நாட்டில் வழங்கிவரும் கர்ண பரம்பரைக் கதைகள் பலவற்றை எமக்குக் கூறியவர் இளைப்பாறிய வரவுப் பரிசோதகரும் பழம்பெரும் நாடக ஆசிரியருமாகிய திரு.சி. உ. நடனசபாபதி அவர்கள். திரு. நா. சுப்பிரமணிய ஐயர் B.A. (Hons) அவர்கள் அச்சுப் படியைத் திருத்தி அரும்பணி புரிந்தவர். இத்தனை அன்பர்களதும் உதவி இல்லையெனில் இந்நூல் சிறப்புடன் அமைந்திருக்காது.

தகவல் தேட்டம், நாடகத்தின் அமைப்பு முறை, தயாரிப்புக் குறிப்பு எழுதுதல், மேடையேற்றல் போன்ற பல துறைகளிலும் அளப்பரிய சேவை செய்தவர் பல ஆண்டுகள் நாடகத்துறையில் பழுத்த அனுபவம் பெற்ற ஆசிரியமணி அப்பச்சி மகாலிங்கம் அவர்கள். கவிதை, சிறுகதை, நாடகம் என்னும் இலக்கியப் பணிகளில் பல பரிசில்கள் பெற்ற ஆசிரியமணியவர்களின் ஊக்கமும், உதவியுமே என்னை எழுத்தாளன் ஆக்கியது. அவருக்கு இதயபூர்வமான நன்றி.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையை அலங்கரிக்கும் துணைப் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் அரியதோர் அணிந்துரை தந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் நூலை அணி செய்தமைக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவன்.

ஈழத் தமிழ் நாடகத்தின் தந்தை கலையரசு க. சொர்ணலிங்கம் அவர்கள் பண்டாரவன்னியன் நாடகத்தைப் பலமுறை மேடையில் பார்த்தவர். அன்னார் எம் நூலுக்குச் சிறந்ததோர் வாழ்த்துரை எழுதியுதவியமைக்கு என் மனப்பூர்வமான நன்றி.

உடனிருந்து ஊக்கந் தந்த நண்பர் நாடகத் துறைக்கு என்னை இழுத்துச் சென்ற உண்மைக் கலைஞர் முள்ளியவளை இயல் இசை நாடகக் கலாமன்றத்தின் பொதுச் செயலாளர் சிவநேசன் வே. கந்தையா அவருக்கு இதயபூர்வமான நன்றி.

இருநூறுக்கு மேற்பட்ட தடவைகளில் வவுனியா மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் மேடையேற்றப்பட்ட இந்நாடகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நடிகர்கள் இதுவரை நடித்துள்ளனர். அத்தனைபேருக்கும் நன்றி.

இந்நூலைச் சிறப்புற வெளியிடும் சென்னை மணிமேகலைப் பிரசுரத்தாருக்கு உள்ளங்கனிந்த நன்றி.

வணக்கம்.

**"முல்லைமணி"**

நாவலர் வீதி,
முள்ளியவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுக்குறிப்பு

தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கும் ஒரு சமுதாயம் தன் கடந்த கால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பது வழக்கம். அப்படிப் பார்க்கும்போது விடுதலைக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்ந்த ஆட்சித் தலைவர்களை நினைவு கூர்வது வரலாற்று நியதி. இங்ஙனம் பெருமிதத்துடன் நினைவு கூரப்படும் மாவீரனே வன்னி நாட்டின் இறுதி மன்னனாகத் திகழ்ந்த குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆவான். இன்று பண்டரவன்னியன் ஈழத்தமிழினத்தின் அடையாளமாகவும் விடுதலை வேட்கையின் குறியீடாகவும் போற்றப்படுகிறான். ஈழத்தில் மட்டுமன்றி தென்னிந்திய தமிழகத்திலும் அமெரிக்க, ஐரோப்பிய, அவுஸ்திரேலிய நாடுகளிலும் பண்டாரவன்னியன் நாமம் பேசப்படுகின்றது.

இந்த மாபெரும் வன்னித் தலைவன் பற்றி மிகக் குறைந்த தகவல்களே எமக்குக் கிடைக்கின்றன. ஐரோப்பிய ஆட்சியாளரின் ஆவணங்கள் ஒருதலைப்பட்சமானவை. செவிவழித் தகவல்கள் கற்பனை கலந்தவை. இவற்றிலிருந்து சரியான வரலாற்றுத் தகவல்களைப் பெறுவதும் கடினமான பணியாகும். பின்வரும் நூல்களிலிருந்தும் கட்டுரைகளிலிருந்தும் தொட்டம் தொட்டமாகக் கிடைக்கும் தகவல்களிலிருந்தே பண்டாரவன்னியன் வரலாற்றை ஓரளவு கட்டியெழுப்ப முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Nallamappana Vanniyan and the Grant of a Mudaliyarship, Rev. Father S. Gnanaprakasar, 1936.
2. An historical, political and statistical account of Ceylon, and its dependencies, Charles Pridham, 1849.
3. Ceylon an account of the island, J.E. Tennant, 1859.
4. Manual of Vanni District, J.P. Lewis, 1895.
5. Vanni and the Vanniyas (S. Navaratnam, 1960).
6. யாழ்ப்பாணச் சரித்திரம், 1933, முதலியார் செ. இராசநாயகம்.
7. யாழ்ப்பாணச் சரித்திரம், 1933, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை.
8. Manual of North Central Province, 1899, R.E. Ivers.
9. யாழ்ப்பாணச் சரித்திரம், பிரிட்டிஷ் காலம், 1934, முதலியார் செ. இராசநாயகம்.
10. List of Inscription on Tomstone and Monuments in Ceylon with an obutuary of persons uncommemorated, 1913, J.P. Lewis.
11. பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம், 1970, முல்லைமணி.
12. அடங்காப்பற்று பண்டாரவன்னியன் வரலாறு (2002), அருணா செல்லத்துரை.
13. வன்னி நாட்டின் வரலாறு சில அவதாதனங்கள் (1996), பேராசிரியர் பொ. பூலோகசிங்கம், மருதநிலா கட்டுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*14.* செவிவழிச் செய்திகள்.

*15.* வன்னியியற் சிந்தனை, முல்லைமணி *(2001).*

**இளமைக் காலம்**

பண்டார வன்னியன் இளமைக்காலம் பற்றிய சரியான தகவல்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை.

வண. சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் 'நல்லமாப்பாணரும் ஒரு முதலியார் பதவி வழங்கலும்', என்னும் கட்டுரையை 1936இல் றோயல் ஏசியேற்றிச் சபைக்குச் சமர்ப்பித்தார். இக்கட்டுரையை கந்தையா வைத்தியநாதன் (பிற்காலத்தில் சேர் பட்டம் பெற்றவர்) சபையில் வாசித்துள்ளார். இக்கட்டுரையில் வண்ணார் பண்ணை நவிண்டிலில் வாழ்ந்த பனங்காம வன்னியரின் பரம்பரையில் வந்த பிரசித்தி பெற்ற பெருமகனார் ஒருவரிடமிருந்து பெற்ற தகவல்களின் அடிப்படையில் பனங்காம வன்னியர் பரம்பரை அட்டவணையொன்றைத் தந்துள்ளார். இதன்படி பனங்காமம் தொன்பிலிப் நல்ல மாப்பாணனின் (பிறப்பு 1645) மகள் குழந்தை நாச்சியின் மகனே பண்டார வன்னியன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, கி.பி. 1645இல் பிறந்த நல்லமாப்பாணனின் பேரன் 1811 வரை வாழ்ந்திருக்க முடியாது. இதே அட்டவணையில் எல்லைக் காவேத நல்லநாச்சனின் (பிறப்பு 1730) கணவன் நல்லமாப்பாணன் என்னும் வன்னித் தலைவனின் பெயர் இடம் பெறுகிறது. இவனின் முழுப்பெயர் தொன் ஜூவான் குலசேகர நல்ல மாப்பாணன் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை அவர்கள் 1933ஆம் ஆண்டு வெளியிட்ட 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் நூலில் நல்ல மாப்பாணருடைய பரம்பரை பின்வருமாறு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

நல்ல மாப்பாண முதலியார்

+

எல்லைக்காவேத நல்ல நாச்சியார் (1730)

↓

கதிரை நாச்சி, குஞ்சி நாச்சியார், அருமைத்தாய், வள்ளிநாச்சி கந்தையா வன்னியனார்

கதிரை நாச்சி + முகமாலை வைரமுத்து வன்னியனார்

அருமைத்தாய் + கதிரித்தம்பி வனியனார்

வள்ளிநாச்சி + தியாக வன்னியனர்

↓

மகள்

+

கதிர்காம வன்னியன்

↓

வண்டர் வைரமுத்து (1813 - 1901)

இந்த அட்டவணையிலுள்ள நல்லமாப்பாண முதலியாரை தொன் ஜுவான் குலசேகர நல்ல மாப்பாணர் என இனங்காணலாம். வைரமுத்து வன்னியனாருடைய மகனே பண்டார வன்னியன் எனக் கொள்ளலாம். பேரன் குலசேகர நல்ல மாப்பாணரின் பெயருடன் தந்தை வைரமுத்துவின் பெயரையும் சேர்த்தே குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் என வழங்கப்படுகிறது. எனவே பண்டாரவன்னியனுடைய தாய் குழந்தை நாச்சி அல்ல கதிரை நாச்சி எனக் கொள்வதே பொருத்தம். கதிரை நாச்சியின் பிறப்பு 1745 எனக் கொண்டால் பண்டார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியன் 1765 வரையில் பிறந்திருக்க வேண்டும். 1783ஆம் ஆண்டு வரையில் வன்னிபப் பதவி பெற்றிருக்க வேண்டும்.

ஒல்லாந்தருக்கும் பண்டாரவன்னியனுக்குமான தொடர்பு சாயவேர் திறையாகக் கொடுப்பது பற்றியது.

**ஒல்லாந்தர் காலம் 1658 - 1795**

ஒல்லாந்தர் காலத்தில் பண்டார வன்னியன் முள்ளியவளை, மேற்பற்று வன்னிமைகளுக்குப் பொறுப்பான வன்னித் தலைவனாக இருந்திருக்கிறான். வன்னியர்கள் பொதுவாக பரம்பரையாகவே பதவி வகித்தனர். இப்பதவிகளை ஒல்லாந்தர் தாமே வழங்கியதாகக் கூறிக் கொள்வதன் மூலம் வன்னி மீதுள்ள மேலாண்மையை பிரகடனப் படுத்தினர்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளைத் துணிகளுக்குச் சாயமூட்டும் தொழில் ஒல்லாந்தர் காலத்தில் பிரபலமாக இருந்தது. சாயத் தயாரிப்புக்குப் பலவகையான வேர்கள் பயன்படுத்தப்பட்டன. றுயினாஸ் என்னும் தாவரத்தின் விதை பேர்சியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு யாழ்ப்பாணம், வன்னிப்பிரதேசங்களில் பயிரிடப்பட்டது. சாயவேர் கிண்டியெடுக்கும் வேலைக்குக் குறைந்த ஊதியத்தில் மக்கள் நியமிக்கப்பட்டனர். இதனை சரிவரச் செய்யத் தவறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதனால் யாழ்ப்பாணச் சனங்களில் பலர் வன்னிக்கு சென்று பண்டாரவன்னியனிடம் அடைக்கலம் புகுந்தார்கள். ஒல்லாந்தர் பண்டாரவன்னியனைச் சாயவேர் தருமாறு வற்புறுத்தினர். இக்கட்டளையை பண்டாரவன்னியன் அலட்சியம் செய்தான். அச்சமயம் ஒல்லாந்தருடைய படை பலமற்றிருந்தது. தவிர யுத்தத்திற்கெனச் செலவு செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்திலும் குறைவான லாபத்தையே அவர்கள் பெறக் கூடியதாக இருந்தது.

ஒரு சமயம் பண்டாரவன்னியன் நுவரகளவியாவைச் சேர்ந்த சிங்கள வன்னியரின் உதவியுடன் முல்லைத்தீவிலிருந்த ஒல்லாந்தரின் கோட்டையைத் தாக்கினான்.

1782இல் வன்னிக்குப் பொறுப்பான அதிகாரியாக நியமிக்கப்பட்ட கப்ரன் தோமஸ் நாகெல் சிறிய படைப்பிரிவொன்றுடன் வன்னிக்கு வந்து சேர்ந்தான். முல்லைத்தீவில் நகரமொன்றை அமைத்து அதில் தனது தலைமையகத்தை நிறுவினான். பாதுகாப்பிற்கெனக் கோட்டையொன்றையும் 1783இல் கட்டுவித்தான். கோட்டையைத் தாக்கிய பண்டாரவன்னியன் பதவி இழக்க நேரிட்டது.

**ஆங்கிலேயர் காலம் (1796 - 1948)**

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தின் இறுதியில் வன்னியரின் ஆதிக்கம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு முற்றாகவே இல்லாமல் போய்விட்டது. 1790இல் தொன்ஜுவான் குலசேகர நல்லமாப்பாணன் ஒல்லாந்தரால் இராசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு சிறைப்பிடிக்கப் பட்டான். அவனுக்கு 12,000 இறைசால் அபராதம் விதிக்கப்பட்டது. தண்டப் பணம் செலுத்தும் வரை அவனைக் கொழும்பில் சிறை வைத்திருந்தனர். நல்ல மாப்பாண வன்னியரின் மனைவி எல்லைக் காவேத நல்ல நாச்சியார் தனது கணவரை மீட்கும் வரை நீராடுவதில்லையென்றும் உண்ணா விரதம் இருப்பதென்றும் சபதம் செய்திருந்தார். இதனை அறிந்த வைத்திலிங்கச் செட்டியார் கொழும்புக்குச் சென்று தண்டப் பணத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டி நல்ல மாப்பாணரை மீட்டு வந்தார் (ஏ. முத்துத்தம்பிப் பிள்ளை - யாழ்ப்பாணச் சரித்திரம், 1933).

ஆங்கிலேயர் வன்னியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது வன்னித் தலைவர்கள் எவரும் பதவியில் இருக்கவில்லை. மிகப் பரந்த வன்னிப் பெரு நிலப்பரப்பை முல்லைத்தீவில் இருந்து நிர்வாகம் செய்ய முடியவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காலத்தில் வன்னியில் கொந்தளிப்பான அமைதியற்ற நிலையே காணப்பட்டது. வன்னித் தலைவர்களின் ஆட்சிக்குப் பழக்கப்பட்ட மக்கள் அந்நியர் ஆட்சியை விரும்பவில்லை. இதனால் வன்னியின் ஒரு பிரிவுக்குப் பொறுப்பாக ஆற்றலுள்ள வன்னியன் ஒருவனை நியமிக்க வேண்டிய தேவை ஆங்கிலேயருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இதனால் பிரித்தானிய அரசு பண்டாரவன்னியனை நுவரகலவியாவியாவின் எல்லைப்புறத்திலுள்ள வன்னிப் பிரதேசத்துக்கு வன்னிபமாக நியமித்தது (ஜே.பி. லூயிஸ், வன்னி மாவட்டக் கைநூல்) 1803 ஆம் ஆண்டு கண்டியரசனுக்கும் பிரித்தானியருக்குமிடையே யுத்தம் மூண்ட போது பண்டாரவன்னியன் மீண்டும் கிளர்ச்சி செய்தான். அவன் ஆங்கிலேயரைத் தனது நாட்டிலிருந்து தொலைத்துப் போடுவதாகச் சபதம் செய்தான். அவன் படை நடத்திச் சென்று வன்னி முழுவதையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். கொட்டியாரத்தைக் கைப்பற்றி அங்கு சில தமிழ் வீரர்களை நிலைகொள்ளச் செய்தான். கண்டி அரசனின் உதவியுடன் ஆனையிறவுக்கூடாக இவனது படை ஊடுருவி குடாநாட்டிலும் தாக்குதல்களை நடத்தியது. ஆனையிறவுப் பக்கத்திலிருந்த மூன்று கோட்டைகளையும் பண்டாரவன்னியன் தனதாக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான் என முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் 'யாழ்ப்பாணச் சரித்திரம் பிரிட்டிஷ் காலம்' (1934) என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்.

1803 ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி நுவரகளாவிய திசாவை குமாரசிங்க வன்னியன் தலைமையில் வந்த படைப்பிரிவின் உதவியுடன் முல்லைத் தீவில் இருந்த அரசாங்க இல்லத்தையும் கோட்டையையும் தாக்கிக் கைப்பற்றினான். பலமற்ற படையுடன் அங்கிருந்த கப்ரின் டிறிபேக் பின்வாங்க நேரிட்டது. இவர்களை ஏற்றிச் செல்ல முல்லைத் தீவுக்கு வந்த வள்ளங்களில் தனது படையுடன் தப்பி ஓடினான். (J.P. Lewis) 'முல்லைத் தீவுக் கோட்டையில் காவலாயிருந்த கப்பித்தானும் (Captain Driberg) சிப்பாய்களும் மீன் வள்ளங்களிலேறி யாழ்ப்பாணத்துக்கு ஓடினார்கள் என முதலியார் இராசநாயகம் குறிப்பிடுவதே பொருத்தமானது. இவர்களை ஏற்றிச் செல்ல வேறு வள்ளங்கள் முல்லைத்தீவுக்கு வந்திருக்க முடியாது.

முல்லைத் தீவைப் பிடித்த பண்டார வன்னியன் தனது மைத்துனனான திசாவை குமாரசிங்க வன்னியனைப் பொறுப்பாக நியமித்தான். ஆனால் ஆங்கிலேயருக்குச் சார்பான பல முதலியார்மார் அங்கிருந்தனர். இதனால் குமாரசிங்க வன்னியன் அங்கு நீடித்திருக்க முடியவில்லை.

''முதலியார்மார் கொடுத்த பிரச்சினைகள் காரணமாக திசாவை அங்கிருந்து வெளியேறிவிட்டார். நான் மீண்டும் சென்று அங்குள்ள மக்களுடன் சேர்ந்து கோட்டையை கைப்பற்றுவேன்'' எனப் பண்டார வன்னியன் கூறியிருந்தான் (ஜே.பி. லூயிஸ்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவை விட்டுப் பண்டார வன்னியனும் படையும் வெளியேறும் போது அங்கிருந்த சக்கரவண்டிகளில் பொருத்தப்பட்ட மூன்று பீரங்கிகளை எடுத்துச் சென்றிருந்தனர். மேலும் ஐந்து பீரங்கிகள் முல்லைத்தீவில் எஞ்சியிருந்தன (ஜே.பி. லூயிஸ்) பண்டாரவன்னியன் படையினர் பாவிக்க முடியாத பீரங்கிகள் சிலவற்றை இழுத்துச் சென்றனர் என ஜே.சி. ரெனன்ட் கூறுகிறார். அவை பதுவில் குள வயல் வெளியில் எரிக்கப்பட்டன. பீரங்கிகள் பற்றிய ரெனன்டின் குறிப்பு ஆங்கிலேயர் தமது நற்பெயரைக் காப்பதற்காகும்.

**மும்முனைத் தாக்குதல்**

பண்டாரவன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையைத் தாக்கியதுடன் வன்னிப்பிரதேசம் முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததால் இலங்கையில் தமது ஆதிக்கம் அஸ்தமித்து விடுமோ என்ற அச்சம் ஆங்கில நிர்வாகத்துக்கு ஏற்பட்டிருக்கவே எப்படியும் வன்னியை மீண்டும் கைப்பற்றுவதற்கு முயற்சி செய்தனர். இதன் பேறாக வன்னிமீது மும்முனைத் தாக்குதலை நடத்த ஏற்பாடு செய்தனர்.

திருகோணமலையில் இருந்து கப்டன் எட்வேட் மெட்சின் தலைமையில் சென்ற படை முல்லைத்தீவைக் கைப்பற்றியது. குமாரசேகர முதலியாரும் இன்னும் சிலரும் பண்டார வன்னியனுக்கு உதவியதற்காக இராசத்துரோகக் குற்றம் காட்டப்பட்டுத் தூக்கில் இடப்பட்டனர். முல்லைத்தீவிலிருந்து வட்டுவாகலுக்குச் செல்லும் வீதியில் பொது வேலைத் திணைக்கள வளவில் இருந்த மரத்திலேயே அவர்கள் தூக்கில் இடப்பட்டனர். மரம் தற்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதவிடத்தும் அந்த இடம் தூக்குமரத்தடி என அழைக்கப்படுகின்றது (ஜெ.பி. லூயிஸ்).

குமாரசேகர முதலியாரின் பூட்டனாரே வன்னிமாவட்டக் கைந்நூல் எழுதப்பட்ட காலத்தில் (1895) கரைதுறைப்பற்று முதலியாராக இருந்தார்.

இரண்டாவதாக யாழ்ப்பாணத்திலிருந்து லெப்ரினன் ஜோண் ஜுவெல் தலைமையில் 19ஆவது றெஜிமென்ற் படைப்பிரிவு அனுப்பப்பட்டது. அவர்கள் கிளர்ச்சியாளர்களின் எதிர்ப்பைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்தது. இப்படையினர் பல வீடுகளை எரித்தனர்; கால்நடைகளைக் கொள்ளையடித்தனர்.

முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றியபின் பண்டாரவன்னியன் ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியிலுள்ள கிராமம் ஒன்றில் (கற்சிலைமடு) தங்கியிருந்தான். அங்கு தனது படைகளைப் பலப்படுத்தினான். கற்சிலை மடுவில் இவனுக்குச் சொந்தமான 46 வீடுகள் இருந்தன. அவ்வீடுகளில் அவனுடைய ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்தன.

1803 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் நாள் அதிகாலை 5 மணியளவில் கப்ரின் டிறிபேக்கின் தலைமையில் மன்னாரிலிருந்து சென்ற படைப்பிரிவு கற்சிலை மடுவிற்குச் சென்று எதிர்பாராத விதமாகத் தாக்குதலை மேற்கொண்டது. பண்டார வன்னியனிடம் கண்டிப் பீரங்கியொன்று இருந்தது. முல்லைத் தீவில் கைப்பற்றிய பீரங்கிகளும் இருந்தன. தாக்குதல் சற்றும் எதிர்பாராத வேளையில் நடைபெற்றதாலும் மழைகாலமாகையாலும் பீரங்கிகளை இயக்க முடியாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால் வாளும் வேலும் கொண்டே போர்புரிய வேண்டியேற்பட்டது. தாக்குதலை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியாத நிலையில் பண்டார வன்னியன் பின்வாங்க நேரிட்டது.

"யுத்தம் நடந்த இடத்தைக் கிராமவாசி ஒருவர் எனக்குக் காட்டினார். சில புளியமரங்களின் மத்தியில் அவ்விடம் இருந்தது. அந்தப் புளிய மரங்கள் பண்டாரவன்னியன் - டிறிபேக் யுத்தத்தைப் பார்த்திருக்கக் கூடிய வயதை உடையனவாக இருந்தன" என 1895ஆம் ஆண்டு ஜே.பி. லூயிஸ் என்னும் சிவில் சேவையாளர் எழுதிய வன்னி மாவட்டக் கைநூலில் (Manual of Vanni District) குறிப்பிட்டுள்ளார்.

**போரில் உபயோகித்த ஆயுதங்கள்**

பண்டாரவன்னியனிடம் பீரங்கிப்படை இருந்தது என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். ஆகக் குறைந்தது நான்கு பீரங்கிகளாவது இருந்திருக்க வேண்டும். கற்சிலை மடுவில் கண்டி மன்னனது முத்திரை பொறித்த பீரங்கியொன்றை பண்டாரவன்னியனிடமிருந்து கைப்பற்றியதாக ஆங்கில அறிக்கை கூறுகின்றது. முல்லைத்தீவிலிருந்து பண்டாரவன்னியன் கைப்பற்றிய மூன்று பீரங்கிகளும் பயன்படுத்த முடியாதவை என ரெனென்ட் கூறுவது தமது தோல்வியை மூடிமறைக்கும் நோக்கிலேயே. மூல்லைத்தீவுப் போரிலும் பண்டார வன்னியன் பீரங்கிகளைப் பயன்படுத்தியிருக்கிறான். ஆயுதந் தாங்கிகள் 55, ஈட்டிகள் 12, வாள் 2, ஆயுதம் வைக்கும் பீப்பா, இரண்டு கூடைகள் நிரம்பிய ஆயுதங்கள் என்பவற்றைத் தாம் கைப்பற்றியதாக ஆங்கில அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றது. பண்டார வன்னியன் உடைமைகள் நிரம்பிய 46 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பீரங்கிக் குண்டு ஒன்றின் நிறை 1½ இறாத்தல்.

**பிந்திய தாக்குதல்கள்**

1803இல் தோற்கடிக்கப்பட்ட போதும் பண்டாரவன்னியன் தன் எதிர்ப்பைக் கைவிடவில்லை. 1810 மே மாதம் கண்டிப் பிரசைகள் சிலரது உதவியுடன் கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் தன் எதிர்ப்பைக் காட்டினான். இவன் படையில் 15 வீரர்களே இருந்தனர். எனினும் ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள் தமக்கு விடப்பட்ட சவாலாகவே இத்தாக்குதலைக் கருதினர். பண்டாரவன்னியன் வவுனியாவுக்கு அண்மையிலுள்ள கிராமம் ஒன்றைக் கொள்ளையடித்ததாக ஆங்கில அறிக்கையொன்று கூறுகின்றது. இந்த அறிக்கை பண்டாரவன்னியன் விடுதலை வேட்கையுடையவன் என்பதற்கு மாறாகக் கொள்ளைக்காரன் என வர்ணிப்பதில் ஆச்சரியமில்லை. தமிழகத்தில் விடுதலை முரசு கொட்டிய வீரபாண்டிய கட்ட பொம்மனையும் கொள்ளைக்காரன் என்றே பிரித்தானிய நிர்வாகம் வர்ணித்தது. இந்திய விடுதலை இயக்கத்தையும் இதுபோன்ற தேசிய போராட்டங்களையும் வழி நடத்திய தலைவர்களுக்கு ஆங்கில ஆளும் வர்க்கம் கொடுத்த பெயர் கொள்ளைக்காரர் என்பதே (முல்லைமணி, வன்னியியற் சிந்தனை).

கற்சிலை மடுப் போருக்குப் பிறகு மேற்பற்று கிழக்கு கதிர்காம நாயக முதலியார் (இவர் வன்னிபப் பதவியை வசித்ததாக முதலியார் செ. இராசநாயகம் கூறுகின்றார்) பண்டார வன்னியனின் திட்டங்கள் பற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் பற்றியும் வருமான முகவராக இருந்த (Revenue Agent) ரேணருக்கு அவ்வப்போது அறிவித்து வந்தார். 1809 ஆம் ஆண்டு முல்லைத்தீவிலிருந்து ஒன்றரை மைல் தொலைவிலுள்ள வட்டுவாகல் என்னும் இடத்தில் பண்டார வன்னியன் இருந்ததாக கதிர்காம நாயக முதலியார் கடிதம் எழுதியுள்ளார்.

பண்டாரவன்னியன் படையெடுப்புக்கு அஞ்சி எல்லைப் பகுதியான வெடிவித்தகல், வவுனியா ஆகிய இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. இலங்கை றெஜிமென்றைச் சேர்ந்த முதலாம் இரண்டாம் படைப்பிரிவுகளுடன் பீரங்கிகளும் நிறுத்தப்பட்டன. பீரங்கிகளை இயக்கக்கூடிய றோயல் ஆட்டிலறியைச் சேர்ந்த ஆங்கில அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். படைப்பிரிவுக்குப் பொறுப்பாக சுதேசிகளே நியமிக்கப்பட்டிருந்தனர். 1810 செப்டம்பரில் பண்டாரவன்னியன் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் வன்னியைத் தாக்கவிருப்பதாக வன்னிப் பகுதி வருமான முகவர் ரேணருக்கு கதிர்காம நாயக முதலியார் செய்தி அனுப்பியிருந்தார். வன்னியின் பாதுகாப்புப்படை மேலும் அதிகரிக்கப்பட்டது. திருகோணமலை யாழ்ப்பாணம் படைப்பிரிவுகளிலிருந்து கூடுதலான வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

1810 ஆம் ஆண்டு ஒக்டோபர் 9ஆம் திகதி கதிர்காம நாயக முதலியார் தனது இரண்டாவது அறிக்கையை அனுப்பினார்.

கண்டித் திசாவையும் பதவியா, தாமரைக்குள வன்னியனார்களும், பொதுமக்களும், கலாவி மாவட்டத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார வன்னியனுடன் ஒன்று சேர்ந்துள்ளனர். எமது ஒற்றர்களின் தகவலின் படி எதிர்வரும் நாட்களில் அவர்கள் பெரிய விகாரையில் இடம் பெறும் விழாவில் கலந்து கொண்ட பின்னர் வாக்கொலவி கட்ட வந்தப் பதவிக்கு வந்து அங்கே வீடுகளைக் கட்டத் தீர்மானித்துள்ளனர். முல்லைத்தீவுக் கோட்டையைத் திரும்பவும் கைப்பற்றப் போகிறீர்களா எனத் திசாவைமார் பண்டாரவன்னியனிடம் கேட்டனர். அதற்குப் பண்டாரவன்னியன் "ஒருமுறை கோட்டையை நான் கைப்பற்றினேன். ஆங்கிலேயருக்குச் சார்பான முதலியார் அங்கிருந்தமையால் நான் அங்கு நிறுத்திய திசாவை அங்கிருந்து திரும்ப வேண்டி ஏற்பட்டது. முதலியார்கள் எம்மைப் பற்றித் தகவல் அனுப்பிக் கொண்டேயிருக்கிறார்கள். எனவே எதிர்காலத்தில் அவர்களை நம் பக்கம் இழுத்துவிட்டால் மக்களின் உதவியுடன் முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்ற முடியும்" எனக் கூறியதாக அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஐந்து அல்லது ஆறு வீரர்களுடன் தனது மாவட்டத்துக்குத் திரும்பினான். பண்டார வன்னியன் குழுவைச் சேர்ந்தவனும் முல்லைத்தீவுச் சிறையிலிருந்து தப்பியோடியவனுமாகிய பரியாரிவேலன் என்பவன் வன்னிக்கு அனுப்பப்பட்டுள்ளான். இதனால் இப்பகுதியில் கிளர்ச்சி ஏற்படலாம் எனவும் கலெக்டருக்குச் செய்தி அனுப்பப்பட்டிருந்தது.

பண்டார வன்னியன் கண்டி திசாவைமாருக்குக் கூறியது போல் பெரும் தாக்குதலில் ஈடுபடவில்லை. 1811 இல் பண்டார வன்னியன் மீண்டும் தாக்குதலை மேற்கொண்டான். உடையாவூரில் நடைபெற்ற கடும் சமரில் பண்டாரவன்னியன் படுகாயமடைந்தான். இவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனது படைவீரர்கள் பனங்காமத்துக்கு எடுத்துச் சென்றனர். அடுத்த நாளே இவனது ஆவி பிரிந்தது.

**பண்டாரவன்னியன் ஆள்புலம்**

பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் காலத்தில் (1658 - 1785) முள்ளியவளை மேற்பற்று வன்னியனாக ஆட்சிபுரிந்துள்ளான். ஒல்லாந்தர் இவனைப் பதவி நீக்கம் செய்ததாகக் கூறுகின்றனர். அப்படியாயின் 1795இற்கு முன்பே இவன் வன்னியிலிருந்து அகற்றப்பட்டிருக்க வேண்டும். ஆங்கில நிர்வாகம் பனங்காமப் பிரதேசத்துக்கு வன்னிபமாக நியமித்துள்ளது. 1803இல் வன்னிப் பிரதேசம் முழுவதையும் இவன் சிறிது காலம் ஆட்சி புரிந்துள்ளான்.

**காக்கை வன்னியன்**

பண்டார வன்னியனைக் காக்கை வன்னியன் காட்டிக் கொடுத்தான் என்பது செவிவழிச் செய்தியாகும். போர்த்துக்கேயர் காலத்தில் (1621 - 1658) யாழ்ப்பாணத்தை ஆண்ட சங்கிலி மன்னனையும் (1519 - 1561) காக்கை வன்னியனே காட்டிக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. எனது பண்டார வன்னியன் நாடகத்திலும் காக்கை வன்னியனே காட்டிக் கொடுத்ததாக எழுதியுள்ளேன். ஆனால் காக்கை வன்னியன் என ஒருவன் வரலாற்றில் இல்லை எனப் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் கூறுகின்றார். பண்டார வன்னியனுக்கு எதிராக கதிர்காம நாயக முதலியாரே தீவிரமாகச் செயற்பட்டு வந்ததாக வரலாறு கூறுகின்றது. இவரையே காக்கை வன்னியன் என மக்கள் அழைத்திருக்கலாம். செவிவழிச் செய்தியில் கதிர்காம நாயக முதலியாருக்குப் பதிலாக காக்கை வன்னியன் என்னும் பெயரே வழங்கி வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“யாழ்ப்பாண வைபவ மாலைக்காரர் முதன் முறையாக ஒரு காக்கை வன்னியனை உருவாக்கியுள்ளார். நம்பிக்கைத் துரோகம் செய்தவனாகக் காக்கை வன்னியன் இடம் பெறுகிறான். சங்கிலிக்கும் பரநிருப சிங்கத்துக்குமிடையே வைபவமாலைக்காரர் தரும் காக்கை வன்னியன் பிரம்மா படைக்காத படைப்பு; பெற்றோர் இடாத பெயர். காகோ (Cago) என்ற போர்த்துக்கீச மொழிச் சொல்லுக்கு கொன்னையன் என்று பொருள். போர்த்துக்கீச வரலாற்றுக் குறிப்புக்கள் இரண்டு காகோமாரைக் குறிப்பிடுகின்றன. ஒருவன் புவிராச பண்டாரத்தின் மாப்பிள்ளையும் தளபதியுமாவான். மற்றவன் எதிர்மன்ன சிங்கன் (1591-1617) அரசகேசரியின் சகோதரன். வன்னியன் அல்லாதவனை வன்னியனாக்கி காகோ என்பதைக் காக்கை என விளங்கிக் கொண்டு மயில்வாகனப் புலவர் தோற்றுவித்த கிருஷ்டியை என்னவென்று கூறுவது” எனப் பேராசிரியர் பொ. பூலோக சிங்கம் கூறுவது மனங் கொளத்தக்கது (மருதநிலா - வடக்குக் கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர் 1996).

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய ‘சங்கிலி’ நாடகத்தில் காக்கை வன்னியன் ஊர்காவல் துறைத் தலைவன் எனக் குறிப்பிடப்படுகிறான். யாழ்ப்பாணத்தில் ஒரு வன்னியன் எப்படிப் பதவி பெற்றான் என்பது சிந்தனைக்குரியது. எனது பண்டாரவன்னியன் நாடகத்தில் இடம்பெறும் காக்கைவன்னியன் கர்ண பரம்பரைக் கதையை அடியொற்றியது. உண்மையில் கதிர்காம நாயக முதலியாரே பண்டாரவன்னியனைக் காட்டிக் கொடுத்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டி மன்னன் தொடர்பு

கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராச சிங்கனுடன் பண்டாரவன்னியன் நட்புறவு கொண்டிருந்தான். ஸ்ரீ விக்கிரமராச சிங்கன் என்பது சிம்மாசனப் பெயர். இயற்பெயர் கண்ணுச்சாமி. சிங்கள இராச்சியத்தை ஆட்சிபுரிந்த தமிழ்மன்னன் இவன். இருவரும் பரஸ்பரம் படையுதவி புரிந்துள்ளனர். கோட்டை இராச்சியமும், யாழ்ப்பாண இராச்சியமும் அந்நியர் ஆதிக்கத்தில் வந்துவிட்டபோதும் கண்டி இராச்சியமும் வன்னிக் குறுநில அரசுகளுமே சுதந்திரமாக இயங்கின. ஆங்கில தேசாதிபதி நோர்த் கண்டிமீது படையெடுத்தும் கைப்பற்ற முடியவில்லை. பண்டாரவன்னியன் படைத்துணை கண்டியரசனுக்கு இருந்ததே நோர்த்தின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. வன்னியை அடிமைப்படுத்தினாலேயே கண்டியைப் பிடிக்கலாம் என்று நோர்த் கருதினர். இதனாலேயே தேசாதிபதியின் கவனம் பண்டாரவன்னியன் மீது திரும்பியது. பகீரதப் பிரயத்தனத்தின் பின்பே பண்டார வன்னியனைத் தோற்கடிக்க முடிந்தது. 1811 ஆம் பண்டாரவன்னியன் மறைவுக்குப் பின்னர் 1815 ஆம் ஆண்டிலேயே கண்டி ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டது.

## பண்டாரவன்னியன் காதலி

இளைஞனான பண்டாரவன்னியன் ஒட்டுசுட்டானுக்கு அண்மையிலுள்ள காதலியார் சம்மளங்குளத்தில் வாழ்ந்த குருவிச்சி நாச்சியைக் காதலித்தான் என்றும் போருக்குப் போகும் போது நெடுநாள் பழுதடையாமலிருக்கும் பொரி விளாங்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தீன் பண்டத்தைக் குருவிச்சிநாச்சி கொடுத்து அனுப்பினாள் என்றும் போரில் வெற்றி வாகை சூடித் திரும்பிய பின்னர் திருமணம் செய்வதாகப் பண்டார வன்னியன் உறுதியளித்திருந்தான் என்றும் போரில் அவன் வீரமரணம் எய்தியதை அறிந்து குருவிச்சி நாச்சியார் நச்சுத்தன்மை வாய்ந்த கார்த்திகைக் கிழங்கை அரைத்து உண்டு பச்சைத் தென்னோலைப் பன்னாங்கில் படுத்துக்கிடந்து உயிர் நீத்தாள் என்றும் கர்ண பரம்பரைக் கதையொன்றுண்டு. பேராற்றின் ஒரு கிளையான குருவிச்சை ஆறு சம்மளங் குளத்தை ஊடறுத்துச் செல்கிறது. குருவிச்சி நாச்சியின் பெயராலேயே இது அழைக்கப்படுகின்றது என்பர். ஊர்ப் பெயரின் முன்னொட்டான காதலியார் என்பதும் பண்டாரவன்னியின் காதலியையே குறிக்கும் என்பர். இக்கதையை டொக்டர் எஸ்.வி. பரராசசிங்கம் அவர்கள் வவுனியா பண்டாரவன்னியன் விழாமலரில் (1982) எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். தெல்லிப்பளை த. சண்முகசுந்தரம் அவர்கள் 'குருவிச்சி நாச்சி சலிப்பு' என்னும் நாட்டார் கதைப்பாடலை 1983இல் பதிப்பித்துள்ளார். இப்பாடலும் இதே கதையைக் கூறுகின்றது.

**நினைவுக் கல்வெட்டு**

கப்டன் வொன் டிறிபேக் பண்டாரவன்னியனைத் தோற்கடித்ததைக் குறிக்கும் கல்வெட்டொன்று கற்சிலை மடுவில் காணப்படுகின்றது. யுத்தம் நடந்த இடத்தை ஒரு முதியவர் காட்டியதாகக் குறிப்பிடும் ஜே.பி. லூயிஸ் (Mannual of Vanni District 1895) 1895 இல் இக்கல்வெட்டைப் பார்த்ததாகக் குறிப்பிடவில்லை. 1803இலேயே இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதாக நம்பப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்க வேலைத் திணைக்கள ஓவசியர் ஒருவரே இக்கல்வெட்டைத் தற்போதிருக்கும் இடத்தில் நிறுவியதாக முதியோர் ஒருவர் கூறியிருந்தார். காட்டில் எங்கோ மண்ணில் புதைந்திருந்த கல்வெட்டை ஓவசியர் கண்டெடுத்து நிறுவியிருக்க வேண்டும் என்றே கருதப்பட்டது.

அண்மைக்கால ஆய்வின் போதே கல்வெட்டின் உண்மை தெரிய வந்துள்ளது. அருணா செல்லத்துரையே முதன் முதலில் தமிழில் கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட விபரத்தைத் தந்துள்ளார் (அடங்காப்பற்று பண்டாரவன்னியன் வரலாறு 2002) ஜே.பி. லூயிஸ் அவர்கள் 1913இல் List of Inscription on Tomstones and Monuments in Ceylon with an obituary of persons uncommemorated என்னும் நூலை வெளியிட்டுள்ளார். அதில் கல்வெட்டைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

In the Villiage clearing under some large tamarind trees which are probably old enough to have witnessed the fight is a stone erected by Mr. R.A.G. Festing, Assistant Goverment Agent 1904 - 1905 to mark the place where captain F.W. Von Driberg defeated Pandara Vanniya 1803.

1904-1905 காலப்பகுதியில் முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபராக இருந்த ஆர்.ஏ.ஜி. வெஸ்ரிங் அவர்களே இக்கல்வெட்டைப் பொறித்தவர் ஆவர். யுத்தம் நடைபெற்று 101 ஆண்டுகளுக்குப் பின்னரே இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்டது.

கல்வெட்டுவாசகம் ஆங்கிலத்தில் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Here Abouts Captain Von Driberg defeated Pandara Vawniya, 31st october 1803.

இதையடுத்த இடத்திலேதான் கப்டன் வொன் டிறிபேர்க் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான், *1803* ஒக்டோபர் *31.*

**பண்டாரக்குளம்**

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியில் ஒட்டுசுட்டானிலிருந்து ஐந்துமைல் தொலைவில் உள்ள பண்டாரக்குளமே பண்டாரவன்னியனின் இராசதானியாக இருந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. பண்டாரவன்னியனைத் தோற்கடித்ததற்குப் பரிசாக பண்டாரக் குளம் கிராமம் டிறிபேக்கிற்குக் கொடுக்கப்பட்டது. இக்கிராமமும் குளமும் டிறிபேக்கின் சந்ததியார்கள் வசம் *1865* வரை இருந்தது. பண்டாரக்குளத்தில் தற்போது கிறிஸ்தவர்கள் குறைவாக இருந்த போதும் பெரியதொரு கிறிஸ்தவ ஆலயம் காணப்படுகிறது. இது டிறிபேக்கின் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம்.

**கலை இலக்கியத்தில் பண்டார வன்னியன்**

அந்நியரைச் சாடி அடிமைத் தளையறுக்க
முன்னின்றாய் வன்னி முழுதாண்ட - மன்னவனே
பாடுகின்றோம் உன்னைப் பணிகின்றோம் உன்கதையை
நாடகமாய் ஆடி நயக்கின்றோம் - மேடையிலே
சொற்பொழிவு செய்து சுவைக்கின்றோம் உன்னுருவைக்
கற்பனையில் கண்டு களிக்கின்றோம் - அற்புதந்தான்
எவ்வாறு நீயிவ் விருநூறாண்டானபின்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வா றிறவா(து) இருக்கின்றாய் - ஒவ்வாத
ஆட்சி அகற்றி அடிமை விலங்கொடித்து
மீட்சி பெறவிழையும் வீரர்விடு - மூச்சில் நீ
வாழுவாய்! உன்னை வணங்கும் இனமொருநாள்
மீளுமாம் காணும் விடிவு!

- *கவிஞர் சோ. பத்மநாதன் - பண்டாரவன்னியன் நினைவு விழா மலர், 1989*

*பண்டாரவன்னியன் பற்றிய தனிப்பாடல்களில் ஒன்றே மேலே தரப்பட்டுள்ளது.*

*பண்டாரவன்னியனைத் தமிழ் கூறு நல்லுலகெங்கும் அறிமுகப்படுத்தியது எனது பண்டாரவன்னியன் நாடகமே. 1960களில் வன்னிப்பிரதேசத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியைத் தொடர்ந்து வன்னிநாடு பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாகப் பண்டார வன்னியன் கதையைப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்வதற்காக இந்த நாடகம் எழுதப்பட்டது. இந்த நாடக நூல் நான்கு பதிப்புகளைக் (1970, 72, 99, 2000) கண்டது. இலங்கையின் பல பாகங்களிலும் கனடா, சுவிஸ், லண்டன், பிரான்ஸ், றஸ்ஸியா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளிலும் நடிக்கப்பட்டு வருகின்றது. இக்கதை முல்லை மோடியில் அமைந்த நாட்டுக் கூத்தாகவும் ஆடப்படுகின்றது. எனது நாடகத்தை அடியொற்றி காவலூர் கவிஞர் ஞா.மா. செல்வராசா அவர்கள் தென்மோடி நாட்டுக் கூத்தாக எழுதினார். இதனை காவலூர் புனித அந்தோனியார் கல்லூரிப் பழைய மாணவர்கள் 1975இல் கொழும்பில் மேடையேற்றினர். நாட்டுக் கூத்துப் பிரதி காவலூர் புனித அந்தோணியார் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினால் 2002இல் நூலாக வெளியிடப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர் மு. கருணாநிதி எனது நாடகத்தை அடியொற்றி பாயும் புலி பண்டாரக வன்னியன் என்னும் நீண்டதொரு நாவலை வெளியிட்டுள்ளார். இந்த நாவலில் குரிவிச்சி நாச்சியை ஈடிணையற்ற வீராங்கனையாகச் சித்திரிக்கின்றார். கண்டி இராச்சியத்தின் அரசுரிமைக்காக நடைபெற்ற சூழ்ச்சிகளையும் இறுதியில் கண்ணுச்சாமி அரசனாவதையும் கண்ணுச்சாமிக்கும் பண்டார வன்னியனுக்குமிடையிலான நட்புறவையும் மிக விரிவாகச் சித்திரிக்கின்றார்.

கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தின் பண்டாரவன்னியன் காவியத்தை (2005) நூலாக வெளியிட்டுள்ளார். கவிஞர் முருக சூரியன் வன்னிபம் என்னும் குறுங்காவியத்தை 1969இல் தட்டச்சில் பொறித்து வெளியிட்டுள்ளார்.

இங்ஙனம் மேடை நாடகமாக, நாட்டுக்கூத்துகளாக, நாவலாக, காவியமாக தமிழ் கூறு நல்லுலகெங்கும் அறிமுகப்படுத்த வேண்டிய மாபெரும் வீரனாக பண்டாரவன்னியன் திகழ்கிறான்.

பண்டாரவன்னியன் நாமம் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஈழத்தமிழரின் விடிவிற்கு நிச்சயம் வழிகோலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நாடகம் எழுத உதவிய நூல்கள்

1. Manual of Vanni - J.P. Lewis.
2. Vanni and the Vanniyas - C.S. Nayaratnam.
3. Ceylon under western rule - Horace Perera.
4. Ceylon under the British - Colvin R. desilva.
5. Europe in the nineteenth & twentieth century - Grant and Temperly.
6. யாழ்ப்பாணச் சரித்திரம் - முதலியார் இராசநாயகம்.
7. யாழ்ப்பாண வைபவமாலை - மயில்வாகனப் புலவர்.
8. இலங்கையின் சுருக்க வரலாறு - எச். டபிள்யூ. கொடிறின்றன்.
9. திருக்குறள் பரிமேலழகர் உரை.
10. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண நூல் பதிப்புரை - டாக்டர் உ.வே. சாமிநாதையர்.
11. வளமிகு வன்னிநாடு (கட்டுரை) -முதலியார் குலசபாநாதன்.
12. வன்னிநாட்டின் கடைசி மன்னன் (கட்டுரை) - வே. கணபதிப்பிள்ளை.

### வேறு ஆதாரங்கள்

13. கற்சிலைமடுவிலுள்ள பண்டாரவன்னியன் நினைவைக் குறிக்கும் சிலைக் கல்.
14. கர்ணபரம்பரைக் கதைகள் - கூறியவர் சி.உ. நடனசபாபதி அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடக பாத்திரங்கள்

1. பண்டாரவன்னியன் - வன்னிநாட்டின் கடைசி மன்னன்
2. கைலாயவன்னியன் - பண்டாரவன்னியனின் சகோதரர்
3. பெரிய மெயினார் - பண்டாரவன்னியனின் சகோதரர்
4. நல்ல நாச்சன் - பண்டாரவன்னியனின் சகோதரி
5. பெருவன்னிச்சி - பண்டாரவன்னியனின் தாய்
6. குமாரசிங்கவன்னியன் (புலவர் புவியழகன்) - நல்ல நாச்சனின் காதலன்
7. காக்கை வன்னியன் - கரிக்கட்டுமூலை அரசன், பண்டாரவன்னியனைக் காட்டிக் கொடுத்தவன்.
8. வொன் அங்கிள் பீக் - ஒல்லாந்த தேசாதிபதி (1794 - 96)
9. கப்டன் வொன்டிறிபேக்- ஆங்கிலத் தளபதி, முல்லைத் தீவுக் கோட்டையில் பண்டாரவன்னியனால் தோற்கடிக்கப்பட்டவன்; கற்சிலை மடுவிற் பண்டார வன்னியனைத் தோற்கடித்தவன்.
10. லெப்டினன்ட் யுவெல் - யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிநாடு நோக்கி வந்த படைப்பிரிவின் தளபதி.
11. எட்வேட் மெட்ச் - திருகோணமலையிலிருந்து வன்னிமீது படை எடுத்த சேனைத் தலைவன்.
12. நோர்த் - ஆங்கிலத் தேசாதிபதி (1798 -1805)
13. மாரி - நல்லநாச்சனின் தோழி

அதிகாரி, தூதுவர், படைவீரர், பொதுமக்கள் முதலியோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைக்குப் பின்...

இலங்கையில் வீரஞ் செறிந்த மன்னர்களாகத் திகழ்ந்தவர்கள் வன்னியர்கள். வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், கிழக்கே திருக்கோணமலை மாவட்டத்தையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும், தெற்கே அருவி ஆற்றையும் எல்லையாகவுடைய பகுதியை இவர்கள் ஆட்சி புரிந்தனர். இவர்களுடைய வீரத்தைக் கண்டு போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் அஞ்சினர். ஆங்கிலேயருக்கு அதிக தொல்லை கொடுத்தவர்கள் வன்னியரே. வன்னி நாட்டை அந்நியர் அடிமைப்படுத்தவிடாது அஞ்சாது போரிட்டவன் **பண்டாரவன்னியன்.** ஈழத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாகத் திகழ்ந்து ஆங்கிலேயரை ஈழத்து மண்ணிலிருந்து அகற்ற வேண்டுமெனச் சபதஞ்செய்து இறுதி மூச்சுவரை போரிட்ட வன்னிநாட்டின் கடைசி மன்னன் பண்டாரவன்னியன் ஆட்சிக்காலத்தில் ஒருநாள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டார வன்னியன்

## காட்சி – 1

பண்டார வன்னியன் அரண்மனை, நடுவில் உயரமான சிங்காசனம் வெறுமையாகவுள்ளது. சிங்காசனத்தின் பின்புறத்தில் கவர்ச்சிகரமான ஆலவட்டக் குடை. சிங்காசனத்தின் இருபுறங்களிலும் சாமரை வீசும் பெண்கள்.

சிங்காசனத்தின் இருபுறங்களிலும் சிறிய இரு ஆசனங்கள். வலதுபுற முதல் ஆசனத்திற் பெரிய மெயினாரும், இடதுபுற முதல் ஆசனத்திற் புலவர் புவியழகனும் அமர்ந்திருக்கின்றனர். மற்றைய இரண்டு ஆசனங்களும் வெறுமையாக உள்ளன.

சிங்காசனத்தின் முன்பாக பனங்காமத்தரசி வீரவன்னிச்சி நல்லநாச்சியாரின் உருவப்படமும் வீரவாளும் வைக்கப்பட்டுள்ளன. வெள்ளை, மஞ்சள் நிற மலர்கள் குவியலாக, படத்திற்கு முன்பாகத் தூவப்பட்டுள்ளன.

(திரை உயருகிறது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையின் இடது பக்கத்தால் பண்டாரவன்னியன் அரச உடையுடன் பிரவேசிக்கிறான். அவன் பின்னால் அவன் தங்கை இளவரசி நல்லநாச்சனும் சகோதரன் கைலாய வன்னியனும் வருகின்றனர்.

சபையிலுள்ள காவலர் வாளை உயர்த்தி "வன்னிமன்னன் பண்டாரவன்னியன் வாழ்க" எனக் கட்டியங் கூறச் சபையோர் "வாழ்க" எனக் கூறுகின்றனர். அதே போல் "இளவரசி நல்லநாச்சன் வாழ்க" என்ற ஒலியும் எழுகின்றது.

பண்டாரவன்னியன் சிம்மாசனத்தின் முன்னின்று கையசைத்துத் தன் நன்றியைத் தெரிவித்தபின் அமர்கிறான். அவன் உட்கார்ந்தபின் ஏனையோர் அமர்கின்றனர். வலது புறத்து இரண்டாம் ஆசனத்தில் இளவரசியும், இடது புறத்து இரண்டாம் ஆசனத்தில் கைலாய வன்னியனும் இருக்கின்றனர்.

பெண்கள் சாமரை வீச ஆரம்பிக்கின்றனர்.

பண்டார வன்னியன் எழும்ப ஒரு சேவகன் தாம்பாளத்தில் மலர்களைக் கொண்டு வருகிறான். பண்டார வன்னியன் இரு கைகளினாலும் மலர்களை அள்ளி வன்னிச்சியின் உருவப்படத்தின் முன் தூவி அஞ்சலி செய்துவிட்டுச் சிறிது மௌனத்தின் பின் பேச ஆரம்பிக்கிறான்.

**பண்.வன்** : வன்னிநாட்டின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய திருநாள்; பனங்காமத்தரசி வீரவன்னிச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல நாச்சியாரின் நினைவு நாள்; ஒல்லாந்தப் படைகளை ஓடோட விரட்டியடித்து அடங்காப்பற்றின் சுதந்திரத்தை நிலைநாட்டிய ஒப்பற்ற பெருநாள்; பெண் குலத்தின் ஒளி விளக்கு - வீரத்தின் பிறப்பிடம் - சுதந்திரத்தின் சொரூபம் - மங்காத மங்கையர் திலகம் - வீரவன்னிச்சி நல்லநாச்சியாரை நினைவுகூரும் நன்னாள்.

வீரவனிதையை நினைவுகூரும்போது எமது நரம்புகளிற் சுதந்திர இரத்தம் பொங்கி ஓடுகின்றது. எமது தோள்வலியும் தாள் வலியும் உரமேறுகின்றன. மாற்றாரின் மாபெரும் படைகளோ இடிமுழக்கப் பீரங்கிகளோ எம்மை எதுவுஞ் செய்துவிட முடியாது.

(சற்று நிறுத்தி) ஆனால்... நினைத்தாலே நெஞ்சம் பொருமுகிறது. வீராங்கனை பிறந்த நாட்டிலேதான் வஞ்சனையுள்ளம் படைத்தோன் - தாய் நாட்டைக் காட்டிக்கொடுத்த சதிகாரன் - பூதன் ஆராச்சியும் பிறந்தான். இதை நினைக்கும்போதுதான் எமது இதயம் வெடிக்கிறது. வீரவன்னிச்சி போன்ற பலர் எம்நாட்டிற் தோன்ற வேண்டும். பூதன் ஆராச்சி போன்றவர்கள் ஒழிய வேண்டும். வீரவனிதைக்கு நாம் செலுத்த வேண்டிய அஞ்சலி நமது நாட்டைச் சுதந்திர பூமியாக நிலைக்கச் செய்வதே! (புலவர் பக்கம் பார்க்கிறான்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலவர் புவியழகன் : (எழுந்து)**

வன்னியதன் புகழ்பூத்த வளமார்ந்த
பெரும் பதியாம் பனங்கா மத்தில்
முன்ன மிருந்தரசோச்சி முதியபெரும்
பதியதனின் உள்ளே அன்று
அந்நியர்கள் நுழையாது காத்துந்தன்
வீரத்தை யவர்க்குக் காட்டி
மன்னுபுகழ் பெற்றிட்ட மாதரசே
பணிகின்றோம் வாழி! வாழி!!

அறங்காத்த தமிழரசி அந்நியராம்
ஒல்லாந்த நாட்டார் நம்மைப்
புறங்காட்டி ஓடிடவே செய்தெங்கள்
வன்னியதன் மானங் காத்த
திறம்பாடி வன்னிச்சி வளையாத
செங்கோலின் சீர்மை பாடி
உறங்காத நின்புகழை யாம்பாடி
ஏத்துகின்றோம் வாழி! வாழி!!

**பண். வன் :** *புலவர் புவியழகனாரே! வீரவன்னிச்சி நல்ல நாச்சியாரின் தீரத்தைச் சொல்லிலே வடித்துச் சுவையுடன் தந்திருக்கிறீர்கள். நன்றி! மகிழ்ச்சி பொங்கும் நற்செய்தியொன்று (தங்கையைக் காட்டி) இன்று எனது தங்கை நல்லநாச்சனின் பிறந்த நாளுங்கூட.*

**கை.வன் :** *இன்னுமொரு நற்செய்தி. இன்று தொடக்கம் புலவர் புவியழகன் எமது அரண்மனைப் புலவர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** ஆமாம், அத்துடன் என் அருமைத் தங்கையின் ஆசிரியராகவும் பணிபுரிவார். அறிவுக் களஞ்சியமாகிய புலவர் புவியழகனை அரண்மனைப் புலவராகப் பெற்றது வன்னிநாடு செய்த பாக்கியம்.

**புல. புவி :** மன்னர்பிரானின் புகழ் மொழிக்கு அடியேன் ஒருசிறிதும் அருகதையற்றவன். சில்வாழ் நாள் பல்பிணிச் சிற்றறிவினனாகிய என்னையும் ஒருவனாக மதித்து இப்பெரும் பணியை என்னிடம் ஒப்படைத்ததற்கு நன்றி.

*(ஒளி மங்குதல். புலவர் புவியழகன் போதல். மீண்டும் ஒளி)*

**கை.வன் :** அண்ணா, புலவர் புவியழகனைப் பார்க்கும் போது அரசவம்சத்தைச் சேர்ந்தவர்போல் காணப்படுகிறார்.

**பண்.வன் :** தம்பி, நான்கூட அப்படித்தான் நினைத்தேன். பண்டைக்காலத்தில் எத்தனையோ அரசர்கள் புலவர்களாக இருந்திருக்கிறார்களல்லவா?

**பெரி.மெயி :** ஆம் அண்ணா. எது எப்படியிருந்தாலும் புவியழகன் அரண்மனைப் புலவராகக் கிடைத்தது எமது வன்னிராச்சியத்தின் பெரும் பாக்கியம்தான்.

*(அரண்மனைக் காவலன் வருகிறான்.)*

**அ.காவலன் :** மகாராஜா, நாட்டு மக்கள் தங்களைக் காண வந்திருக்கின்றனர். மழை இல்லாமல் பயிர்கள் நாசமாகிவிட்டனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** அப்படியா? தம்பி கைலாயவன்னியா, களஞ்சியத்தில் உள்ள நெல்லைப் பிரித்து அவர்களுக்குக் கொடு. இந்த ஆண்டு அவர்கள் வரி கட்ட வேண்டாம். என்ன? ஏதோ அழுகைக் குரல் கேட்கிறதே!

**அ.காவலன் :** மகாராஜா, நரைமூதாட்டி ஒருத்தியின் அழுகைக் குரல்தான் இது. தனக்கு ஒரே ஒரு மகன்தான் என்றும் வரி கொடுக்கவில்லையென்று காக்கைவன்னியன் காதுக்கை கறணைப் பாவட்டம் தடியடித்துக் கறுத்தான் மடுவுக்கை போட்டுவிட்டான் என்றும் கூறுகிறாள்.

**பண்.வன் :** ஆ...பாவி, வன்னி நாட்டிலும் இப்படியான அக்கிரமங்கள் நடைபெறுகின்றனவா? பெரிய மெயினார்! இப்பொழுதே காக்கை வன்னியனை இங்கு வரச்சொல்.

**பெரி.மெயி :** உத்தரவு. (போகின்றார்)

**அ.காவலன் :** மகாராஜா, கொள்ளைநோய் வந்து எல்லோரும் சாகிறார்கள் என மக்கள் முறையிடுகின்றார்கள்.

**பண்.வன் :** கொள்ளை நோயா? வற்றாப்பளைக் கண்ணகை அம்மனுக்குச் சிறப்புப் பொங்கல் நடத்த வேண்டும். கைலாயவன்னியா, எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்.

**கை.வன் :** உத்தரவு அண்ணா

(காவலன் செல்கின்றான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** தம்பி பெரிய மெயினார், இலங்கை நாராயணன் குளக்கட்டு வேலை எந்த அளவில் முன்னேறியுள்ளது?

**பெரி.மெயி :** இன்னும் இரண்டு திங்களிற் குளக்கட்டு வேலை முடிவடைந்துவிடும்.

**பண்.வன் :** எமது வன்னிநாடு சீரும் சிறப்பும் நிறைந்திருந்த காலம் மாறிப் பஞ்சமும், கொலையும் கொள்ளையும் நிறைந்த நாடாக மாறிவிட்டது. இதற்கெல்லாம் காரணம் நமது ஆட்சி முறையில் ஏதோ குறையிருக்கிறதென்பதுதான். காட்டுவிநாயகருக்கு இலட்சார்ச்சனை செய்யவும், குமாரவேள் கோயிலைக் கட்டி முடிக்கவும் ஏற்பாடு செய். கண்ணகை அம்மனுக்குப் பூசை நைவேத்தியங்கள் குறைவற நடைபெறட்டும். பஞ்சம் நீங்கும்வரை மக்களிடம் வரியறவிட வேண்டாம்.

**பெரி.மெ :** அண்ணா! தங்கள் உத்தரவுப்படியே எல்லாவற்றையும் செய்து முடிப்பேன். குமாரவேள் கோயிலைக் கட்டி முடிப்பதற்குத் தென்பாண்டி நாட்டிலிருந்து சிலைவண்ணச் சிற்பி இன்னும் இரு தினங்களில் வந்துவிடுவார்.

**பண்.வன் :** சிலைவண்ணனின் கலைவண்ணத்தால் சிறந்ததொரு குமாரவேள் கோவில் உருவாகும். சித்திர வேலைப்பாடமைந்த சிற்பங்கள் கோயிலின் கோபுரத்தில் அமைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரி.மெயி :** அண்ணா, தங்கள் கற்பனையில் திகழும் குமாரவேள் கோயில் நிறைவேறும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

**பண்.வன் :** கலைமிளிரும் இந்த ஆலயத்திற்குச் சிறந்ததொரு பெயர் சூட்ட வேண்டும்.

**பெரி.மெயி :** அண்ணா, இதைப்பற்றி நானும் பல நாட்கள் சிந்தித்தேன். எனது எண்ணத்தை...

**பண்.வன் :** தயங்காதே சொல்!

**பெரி.மெயி :** சித்திரவேலாயுதர் கோயில் என அழைக்கலாமோ என்று எண்ணுகின்றேன்.

**பண்.வன் :** (அகமகிழ்வுடன் பெரியமெயினாரின் தோளிற் தட்டி) பிரமாதம்! எனது உள்ளக் கருத்தை அப்படியே கூறிவிட்டாய். கலைமணம் கமழும் கோயிலைக் கட்டிமுடிப்பது உனது பணி.

**பெரி.மெயி :** அண்ணா, கலையார்வம்மிக்க தாங்களும் இதிற் கண்வைத்தாற் கல்லிலே கலைமணம் கமழச் செய்யலாம்.

**பண்.வன் :** தம்பி, குமாரபுரத்தில் அமைக்கப்படும் இக்கோயில் வன்னி மன்னர்களின் கலையார்வத்திற்கு இலக்கியமாக அமையும் என்பது எனது நம்பிக்கை; சரி, போய் ஆகவேண்டியனவற்றைக் கவனி.

**பெரி.மெயி :** உத்தரவு அண்ணா.

(ஒல்லாந்த தூதுவன் வருகிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூதுவன் :** (வணங்கி) மகாராஜா, தேசாதிபதி ஓலை தந்திருக்கிறார்.

**பண்.வன் :** (பெரியமெயினாரைப் பார்த்து) அந்த ஓலையை வாங்கி வாசி.

**பெரி.மெயி :** (ஓலையை வாங்கி) பண்டாரவன்னியனுக்கு ஒல்லாந்த தேசாதிபதி வொன் அங்கிள் பீக் எழுதுவது : "யாழ்ப்பாண இராச்சியம் எமது ஆணையின்கீழ் வந்த காலம் தொடக்கம் வன்னியர்கள் எமக்கு ஆண்டுதோறும் நாற்பத்திரண்டு யானைகளும் நூற்றறுபது மூடை சாயவேரும், இருநூறு மரங்களும் திறையாகக் கொடுப்பது வழக்கம். நீர் திறை கொடுக்காது விடுவதால் எமது மேலரசை அவமதிக்கின்றீர். திறை கொடுக்க மறுத்தால், வன்னிநாடு முழுவதும் எமது நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படும்."

**பண்.வன் :** (ஓலையைப் பறித்து) திறை... யார் யாருக்குத் திறை செலுத்துவது. திறை செலுத்தும் வழக்கம் பண்டாரவன்னியன் சரித்திரத்திலேயே இல்லைத் தூதரே. இதை உமது துரைக்குச் சொல்லும்.

**தூதுவன் :** (வணங்கி) ஆகட்டும் மகாராஜா.

(போகின்றான்)

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 2

### *பண்டாரவன்னியன் அரண்மனை*

*சிம்மாசனத்திற் பண்டாரவன்னியனும், பக்கத்திலுள்ள ஆசனங்களிற் பெரியமெயினார், கைலாயவன்னியன் ஆகியோரும் வீற்றிருக்கின்றனர்.*

*ஒல்லாந்தத் தூதுவன் மண்டபத்தின் இடதுபுற வாசலால் நுழைந்து பண்டாரவன்னியனைச் சிரந் தாழ்த்தி வணங்கி இடுப்பிற் செருகியிருந்த ஓலையைக் கையிலெடுத்துக் கொண்டு பேசுகின்றான்.*

**தூதுவன் :** (வணங்கி) மதிப்பிற்குரிய பண்டாரவன்னிய பூபதியே! தாழ்மையான வணக்கம். துரை அவர்கள் தங்கள் சிநேகிதத்தை வேண்டி நிற்கிறார்கள். தங்களைத் தர்பாருக்கு அழைத்து ஓலை அனுப்பியிருக்கிறார்கள்.

**பண்.வன் :** (ஓலையை வாங்கி) என்ன? துரை என் சிநேகிதத்தை வேண்டி நிற்கிறாரா? ஆச்சரியந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறை செலுத்தாவிட்டால் நேரடி நிர்வாகம் என்று பயமுறுத்திய துரை இப்பொழுது எனது சிநேகிதத்தை வேண்டி நிற்கிறார்!

**பெரி.மெயி :** அண்ணா, இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. தங்களின் சிநேகிதத்தைப் பெற்றுவிட்டால் அவர்கள் தங்களது வியாபாரத்தை விருத்தி செய்யலாம் என்று எண்ணுகிறார்கள் போலத் தோன்றுகிறது.

**பண்.வன் :** அதற்கு நான் ஏன் தர்பாருக்குப் போக வேண்டும்?

**பெரி.மெயி :** அண்ணா, எமது சிநேகிதத்தை வேண்டி ஓலையனுப்பியிருக்கும்போது அதை நிராகரிப்பது அழகல்ல. தர்பாருக்குப் போவதால் எதுவுங் கெட்டுவிடாது.

**பண்.வன் :** தூதுவரே! நீர் போகலாம். முடிவு பின்னர் அறிவிக்கப்படும்.

(தூதுவன் போகிறான்)

**கை.வன் :** இந்த அழைப்பில் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. தங்களைப் பிடிக்கச் சூழ்ச்சியாகவுமிருக்கலாம்.

**பண்.வன் :** சூழ்ச்சி? ஒல்லாந்தரின் திடீர் மனமாற்றத்தில் ஏதோ மர்மம் இருக்கத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கை.வன் :** ஒல்லாந்தர் விரிக்கும் வலையில் நாம் ஏன் போய் விழ வேண்டும்?

**பண்.வன் :** அப்படியென்றால் அழைப்பை நிராகரிக்க வேண்டுமென்று சொல்கிறாயா?

**கை.வன் :** அவர்களுக்கு ஏதும் தேவையென்றால் தங்களிடம் வந்து கேட்பதுதானே.

**பெரி.மெயி :** அண்ணா, அரிப்புக் கோட்டையை நாம் பிடித்துவிடுவோம் என்று அவர்கள் அஞ்சுகின்றார்கள். தவிர, கோட்டை இராச்சியத்திற்குப் போக்குவரத்துச் செய்வதற்கு இடையூறு ஏற்படா வண்ணம் எமது சிநேகத்தை வேண்டியுமிருக்கலாமல்லவா?

**பண்.வன் :** அப்படியும் இருக்கலாம்.

**கை.வன் :** போவதாயிருந்தால் போதிய முன்னேற்பாட்டுடன் போக வேண்டும்.

**பெரி.மெயி :** அண்ணா, தங்களுடன் நானும் ஐநூறு நம்பிமாரும் வருகிறோம்.

**பண்.வன் :** சரி, கொலுவிற்கு வருவதாக ஓலை அனுப்பி வை. வன்னிநாட்டு மக்களின் நன்மை கருதிச் சமாதானமாக வாழவேண்டும்.

**பெரி.மெயி :** ஆகட்டும் அண்ணா.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 3

ஒல்லாந்த தேசாதிபதி வான் அங்கிள் பீக் யாழ்ப்பாணக் கோட்டையிலுள்ள சபை மண்டபத்தில் இருக்கிறார். அவர் உட்கார்ந்த அலங்கரிக்கப்பட்ட ஆசனத்திற்குப் பின்னால் டச்சுக்காரரின் கொடியில் V.O.C. என்ற எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன. தேசாதிபதியின் இருபக்கத்திலும் இரு இராணுவ வீரர் கையில் துப்பாக்கியுடன் நிற்கின்றனர். தேசாதிபதியின் பிரியமான நாய் அவனது காலடியில் படுத்திருக்கிறது.

திரை உயருகிறது.

பண்டார வன்னியன் பூரண இராஜ கோலத்துடன் டச்சுக் காவலாளி ஒருவன் முன்வர மண்டபத்துள் நுழைகிறான்.

**அங்.பீக் :** (இருக்கையிலிருந்து எழுந்து) மதிப்புக்குரிய பண்டாரவன்னிப் பூபதியே! தங்கள் வரவு நல்வரவாகட்டும். இப்படி இந்த ஆசனத்தில் அமருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** தங்கள் வரவேற்புக்கு நன்றி. (இராஜ கெம்பீரத்துடன் ஆசனத்தில் அமருகின்றான்)

**அங்.பீக் :** தங்களுடைய பெயரும், புகழும், வீரமும், தீரமும் திக்கெட்டும் பரந்துள்ளதை நாம் அறிவோம். தங்களிடம் நட்புக்கொள்ள வேண்டும் என்னும் பேரவாவினால் தங்களைக் காண விழைந்தோம். தங்களோடு கருத்துக்களைப் பரிமாறும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**பண்.வன் :** புகழுரைகளை நான் அதிகம் விரும்புவதில்லை. விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னால் போதும்.

**அங்.பீக் :** இந்த யாழ்ப்பாண இராச்சியத்தை ஆளும் பொறுப்பு எங்கள்மீது வந்துவிட்டது. எப்படியோ நீங்கள் ஆளுகின்ற வன்னி இராச்சியமும் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாக அமைந்துவிட்டது.

**பண்.வன் :** (சிறிது கோபத்துடன்) அப்படியிருப்பதனால் வன்னி இராச்சியமும் உங்களுடைய இராச்சியத்துள் இருப்பதாகக் கருதப்படுவதால், திறை செலுத்த வேண்டும் என்று சொல்கிறீர்களாக்கும்.

**அங்.பீக் :** செச்....செச்.... சே அப்படியொன்றுமில்லை. பூபதி அவர்கள் பொறுமையுடன் செவிசாய்த்தருள வேண்டும். வன்னியர்கள் வழக்கமாகக் கப்பங் கொடுத்து வந்தது உண்மைதான். அதையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. எங்களுக்கு வேண்டியது தங்கள் சிநேகந்தான்.

**பண்.வன் :** தேசாதிபதி அவர்களே! தாங்கள் என்மீது காட்டும் மதிப்பிற்கும், அன்பிற்கும் நன்றி. வன்னி இராச்சியத்தின் சிநேகம் தங்களுக்கு என்றென்றும் உண்டு.

**அங்.பீக் :** நண்பர்கள் பரஸ்பரம் உதவி செய்வது சகசம். தாங்கள் ஏதாவது உதவி வேண்டியிருந்தால் தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம். நாம் வேறு தாங்கள் வேறல்ல.

**பண்.வன் :** இப்போதைக்கு எதுவுமே வேண்டியதில்லை.

**அங்.பீக் :** எங்களுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய உதவி ஒன்றுண்டு.

**பண்.வன் :** கேளுங்கள்.

**அங்.பீக் :** எமக்குத் தேவையான சாயவேர் தங்களுடைய இராச்சியத்தில் மலிந்து கிடக்கிறது. தங்களுக்குச் சிரமமில்லையென்றால்...

**பண்.வன் :** எவ்வளவு வேண்டுமென்று சொல்லுங்கள் தாராளமாகத் தருவேன்.

**அங்.பீக் :** நன்றி. தங்கள் உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறோமோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** நண்பர்களாக இருப்பவர்கள் கைம்மாறு கருதித்தான் உதவிபுரிய வேண்டுமென்பதில்லையே.

**அங்.பீக் :** பூபதி... எமது அன்புப் பிணைப்பிற்கு அறிகுறியாக நாம் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்வோம்.

**பண்.வன் :** நண்பர்களுக்கு ஒப்பந்தம் தேவையில்லையே. அப்படித் தாங்கள் விரும்பினால் எனக்கு எதுவித ஆட்சேபணையுமில்லை.

**அங்.பீக் :** எங்களுக்குத் தேவையான சாயவேரும், யானைகளும் தாங்கள் தருவது; தங்களுடைய இராச்சியத்துக்குப் பாதுகாப்பாக எமது படைகள் வன்னிநாட்டு எல்லையிற் தங்களின் சேவையில் நிற்பது.

**பண்.வன் :** (சிரித்து) எமது இராச்சியத்தை நாமே பாதுகாத்துக் கொள்வோம். தங்கள் நல்லெண்ணத்திற்கும், தாராள மனப்பான்மைக்கும் நன்றி. தங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்கின்றேன் சரிதானே?

**அங்.பீக் :** நன்றி. எமது சிநேகம் என்றென்றும் நிலைக்க வேண்டும் என்று நாம் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**பண்.வன் :** சரி, நான் சென்றுவரட்டுமா?

**அங்.பீக் :** போய் வாருங்கள். எமது அழைப்பிற்கிணங்கி இவ்விடம் வந்தமைக்கு எம் நன்றி.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 4

பண்டார வன்னியன் அரண்மனையைச் சேர்ந்த நந்தவனம்.

உயர்ந்த மரங்கள், பலநிற மலர்கள் பூத்துள்ள செடிகள் நிறைந்திருக்கின்றன.

இளவரசி நல்லநாச்சனும் அவளது தோழி மாரியும் நந்தவனத்தின் நடுவில் அமைந்துள்ள உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர்.

திரை உயர்கிறது.

இளவரசி கையில் உள்ள ஏட்டைப் பார்த்தபடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

**மாரி :** இளவரசி, ஏது ஏட்டைக் கையிலே வைத்துக் கொண்டு எங்கெல்லாமோ சிந்தனையை ஓடவிட்டிருக்கிறீர்களே?

**நல்லநாச்சன் :** அப்படியொன்றும் இல்லையடி. படித்த பாடத்தை நினைவில் இருத்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாரி :** திருக்குறள்தானே தாங்கள் படிப்பது?

**நல்.நச் :** ஆமாம்.

**மாரி :** (கேலியாக)

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்."

என்ற குறளைத்தானே தாங்கள் நினைவிலிருத்துகிறீர்கள்.

**நல்.நாக் :** மாரி, உனக்கு எதற்கெடுத்தாலுங் கேலிதான்.

**மாரி :** இல்லை அம்மா, உங்கள் உபாத்தியாயர் புலவர் மாத்திரமல்ல; சிறந்த அழகனும் கூட.

**நல்.நாச் :** ஏனெடி, புலவர் அழகனாயிருக்கக் கூடாதா?

**மாரி :** இருக்கலாம் இளவன்னிச்சி, இருக்கலாம். அதோடு இளைஞராகவும் இருக்கிறாரே அதுதான் ஆபத்து.

**நல்.நாச் :** மாரி ஏனெடி புதிர் போடுகின்றாய்? உன்னுடைய நிகண்டின்படி புலவர் என்றால் முதியவராகத்தான் இருக்க வேண்டுமா?

**மாரி :** இல்லையம்மா, புலவர் அழகராகவும், இளைஞராகவும் இருந்தால் அறத்துப்பாலும், பொருட்பாலும் சுவைக்காது என்று சொன்னேன். அவ்வளவுதான்.

**நல். நாச் :** சும்மா போடி, புலவர் பெருமான் எதைச் சொல்லிக்கொடுத்தாலும் சுவையாகத்தானிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாரி :** புலவர் பெருமான் வருகிறார்; பாடத்தைக் கவனமாகப் படியுங்கள். நான் வருகிறேன்.

(எழுந்து செல்கிறாள்)

(நல்லநாச்சன் ஏட்டைப் படிப்பதுபோற் பாவனை செய்கிறாள்.)

**புனியமு:** இளவரசி, ஏட்டிலே அப்படியே மூழ்கிவிட்டீர்கள் போலிருக்கிறது.

(நல்லநாச்சன் நிமிர்ந்து பார்த்துவிட்டு மௌனம்)

**புனியமு :** அதிகாரம் ஏழு; புதல்வரைப் பெறுதல்... தொடர்ந்து படியுங்கள்...

**நல்.நாச் :** "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்."

**புனியமு :** தான் பெற்ற பொழுதை மகிழ்ச்சியினும் மிக மகிழும்; தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தான் என்று அறிவுடையோர் கூறக் கேட்ட தாய், தாய் மகனை ஈன்றபொழுது அதிக மகிழ்ச்சியடைகின்றாள். அவனைச் சான்றோன் என்று சாதாரண மக்கள் சொல்லும்போது அதனிலும் மகிழ்ச்சியடைகின்றாள். அதனையே அறிவுடையோர் சொல்லிவிட்டாற் தாயின் மகிழ்ச்சிக்கு எல்லையேது?

**நல்.நாச் :** ஐயமொன்றுளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலியழ** : ஐயத்திரிபறக் கற்றல் வேண்டும்; ஐயமுளவேல் கடாவுக.

**நல்.நாச்** : 'சான்றோன் எனக் கண்ட தாய்' என்று கூறாமற் கேட்ட தாய் என்று வள்ளுவர் பெருமான் கூறியதேன்?

**புலியழ** : அருமையான வினா. பெண்ணியல்பாற் தானாக அறியாமையிற் கேட்ட தாய் எனவுங் கூறினார்.

**நல்.நாச்** : அப்படியானாற் பெண்ணுக்குத் தானாக அறியும் அறிவு இல்லையென்கிறீர்களா?

**புலியழ** : அப்படி நான் கூறவில்லை. பரிமேலழகர் கூறுகின்றார். அதைத்தான் நான் கூறுகின்றேன்.

**நல்.நாச்** : அதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? திருவள்ளுவரின் கருத்தும் அதுவாகத் தானிருக்கும் என்று நீங்களும் கருதுகிறீர்களா?

**புலியழ** : வள்ளுவனுக்குத் தெள்ளுரை வகுத்தோர் பதின்மர். அவ்வுரைகளுள் பரிமேலழகர் உரை சிறப்புடைத்து என வையகமே போற்றுகின்றது! அதை நான் எப்படிக் குறை கூறமுடியும்.

**நல்.நாச்**: "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்ற குறளை மிகச் சுவைபடக் கற்றுக் கொடுத்தீர்கள். இப்பொழுதோவென்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வையகம் முழுவதும் பரிமேலழகரைப் போற்றுகிறது. அதனால் அவர் கூறுவதை எப்படி மறுக்க முடியும்' என்று திருப்பிக் கேட்கிறீர்கள். மெய்ப்பொருள் காணும் துணிபு தங்களிடம் இல்லையா?

**புவியழ** : (மகிழ்ச்சி பொங்கச் சிரித்து) ஏது இளவரசி இவ்வளவு கோபம்? பெண்ணினத்திற் குறைகண்ட ஒரே குற்றத்திற்காகப் பரிமேலழகரை எடுத்தெறிந்து பேசுகின்றீர்கள். மெய்ப்பொருள் காணும் துணிவு இப்பொழுதே வந்துவிட்டது. சொல்லட்டுமா?

**நல்.நாச்** : இப்பொழுதாவது மனம் வந்ததே! சொல்லுங்கள்.

**புவியழ** : தன் மகனைச் சான்றோன் எனக் காணும் அறிவும், திறனும் பெற்ற தாய்க்கு உண்டு. பெற்ற மகனைச் சான்றோன் என அறிந்திருந்த போதிலும் அதனையே பிறர் பாராட்டும்போது பிறக்கும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லையல்லவா? இதனைத்தான் கேட்ட தாய் என வள்ளுவர் கூறுகின்றார்.

**நல்.நாச்** : அருமையான கருத்து.

**புவியழ** : ம்... தங்களுக்குப் பிடித்ததைப் பிறர் வாயாற் சொல்லவைத்து, அதனையே புகழ்ந்தேத்துவது பெண் குலத்தின் பரம்பரைக் குணம்.

**நல்.நாச்** : ஏமாந்தவர்கள் ஆண்கள் என்று சொல்கிறீர்கள்.

**புவியழ** : குற்றம் ஏமாற்றுபவர்களைத்தான் சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்.நாச் :** ஆண்களில் இந்தக் குணம் இல்லையா?

**புலியூழ :** சான்று?

**நல்.நாச் :** 'பிரியேன், பிரியினும் தரியேன்' என்றெல்லாம் உறுதி கூறிய தலைமகன் தலைமகளைத் தவிக்க விட்டுவிட்டுச் சென்றதாகச் சங்கத் தமிழ் நூல்கள் சாற்றுகின்றன.

**புலியூழ :** இளவரசி, தாங்கள் என்னைத் தோற்கடித்து விட்டீர்கள்.

**நல்.நாச் :** இளவரசி என்று என்னை அழைக்காதீர்கள்.

**புலியூழ :** மன்னிக்கவும், இளவன்னிச்சி!

**நல்.நாச் :** அப்படியும் அழைக்க வேண்டாம். வன்னிச்சியென்றால் அரசி என்றுதான் பொருள்.

**புலியூழ :** எப்படித்தான் அழைக்க வேண்டுமென்கிறீர்கள்?

**நல்.நாச் :** எனது பெயரைச் சொல்லி அழைக்கலாமே.

**புலியூழ :** இளவரசியாரே, யானோ ஏழைப் புலவன், தாங்களோ பாராளும் பண்டாரவன்னியனின் அருமைத் தங்கை. தங்கள் அந்தஸ்திற்கு யான் தங்களைப் பெயர் சொல்லி அழைப்பது, அரச குலத்தை அவமதித்ததாகாதா?

**நல்.நாச் :** சுவாமி, எங்கள் குலம், அந்தஸ்து அனைத்துமே தங்கள் அறிவுச் செல்வத்தின் முன் எம்மாத்திரம்? என்னைப் பெயர் சொல்லி அழையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புவியழ** : நல்லநாச்சன்!

**நல்.நாச்** : சுவாமி! (புலவர் புவியழகனின் தோளில் தலையைச் சரித்து வைக்கிறாள்) தாங்கள் என்னைக் கைவிட மாட்டீர்களே?

**புவியழ** : அன்பே, இளவரசிகளை வீரமன்னர்கள் திருமணஞ் செய்வதுதான் முறையானது. அதைத்தான் மகாராஜாவும் விரும்புவார்.

**நல்.நாச்** : சுவாமி, மன்னர்க்குத் தன் தேசமல்லாற் சிறப்பில்லை; கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாஞ் சிறப்பு.

**புவியழ** : இந்தச் சிறப்பெல்லாம் ஏட்டளவிலேதான். இளவரசியின் காதலன் போரிலே புறமுதுகு காட்டாத வீரனாக இருத்தல் வேண்டும்.

**நல்.நாச்** : தாங்கள் கோழையா?

**புவியழ** : கோழையில்லாவிட்டாலும் வீரனல்லன். வாளும் வேலும் என் கரங்கள் தொட்டறியா.

**நல்.நாச்** : கூர்மையான தங்கள் அறிவிற்கு முன் வாளும், வேலும் எதிர் நிற்கமாட்டா.

**புவியழ** : இளவரசி, சாதுரியமாகப் பேசுகின்றீர்கள்! நன்றாகத்தானிருக்கிறது. நிறைவேறாத காதலில் ஈடுபடுவது முறையானதாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்.நாச் :** மனம் ஒன்றிய இடத்திற்தான் காதல் பிறக்கும்; எந்தவித ஏற்றத்தாழ்வும் அதனைச் சிதைத்து விட முடியாது.

**புவியழ :** அன்பே!

**நல்.நாச் :** சுவாமி,

**புவியழ :** உனது மோகனத் திருவுருவம் என்னை இழுக்கின்றது. கவிபாடும் கண்கள், கொவ்வைச் செவ்வாய், கடைந்தெடுத்த சிலை போன்ற மேனி - அத்தனையும் என்னைப் பித்தனாக்குகின்றன.

**நல்.நாச் :** கண்ணாளா, தாங்கள் அருகிலிருக்கும் போது என் இதயத்தில் இன்ப ஊற்றுத் தோன்றி, அன்பெனும் நதியாகப் பாய்கிறது.

(ஒளி மங்குதல்; திரையை ஆறுதலாக மூடுதல்)

**புவியழ :** அன்பே, இனிமேற் சொர்க்க போகங்கூடச் சுவையற்றதாகி விடும்.

**நல்.நாச் :** தாங்களே எனக்குப் பூலோக சொர்க்கம்.

**புவியழ :** கண்ணே! காதல் வானிலே பறந்து திரியும் சிட்டுக் குருவிகள் நாங்கள்.

**நல்.நாச் :** சுவாமி தாங்கள் என் காதல் தெய்வம்!

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 5

### பண்டார வன்னியன் அரண்மனை

**கை.வன் :** அண்ணா, ஒல்லாந்தர் ஆட்சியிலிருக்கும்வரை தொல்லையில்லாமல் இருந்தது. ஆங்கிலேயரோ மண்ணாசை பிடித்தவர்கள். எமக்குத் தொல்லை கொடுக்கவே முனைவார்கள்.

**பண்.வன் :** எமது வன்னிராச்சியத்தை நாம் ஆள்கின்றோம். அந்நியராகிய ஆங்கிலேயர் எம்மை என்ன செய்துவிட முடியும்.

**பெரி.மெயி :** எமது நாட்டைப் பிடிக்க முனையலாந் தானே.

**கை.வன் :** கொம்பனியாரின் ஆட்சி நடைபெறும்போது அவர்கள் வருமானத்தையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஆனால் தேசாதிபதி நோர்த் வந்த பின்னர் நாட்டைப் பிடிக்கவே முயல்கிறார்.

**பெரி.மெயி :** கண்டி மீது படையெடுக்க ஆயத்தம் செய்கிறாராம் ஆங்கிலத் தேசாதிபதி நோர்த்.

**பண்.வன் :** போர்த்துக்கேயரும் ஆங்கிலேயரும் சாதிக்க முடியாததை நோர்த் சாதிக்கவா பார்க்கிறார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கை.வன் :** அண்ணா, வெள்ளம் வருமுன்னர் அணைகோல வேண்டும்.

**பண்.வன் :** ஆங்கிலேயரின் பேராசையை முளையிலே கிள்ளியெறிய வேண்டும்.

**கை.வன் :** அண்ணா, எனக்கொரு யோசனை தோன்றுகின்றது.

**பண்.வன் :** சொல் தம்பி!

**கை.வன் :** வெள்ளைப் படையினருக்கெதிராகக் கண்டியரசனுக்குப் படையுதவி புரிய வேண்டும்.

**பெரி.மெயி :** ஆம் அண்ணா. எமது படைப் பலத்தை வெள்ளையருக்குக் காட்டத் தகுந்த சந்தர்ப்பம்.

**பண்.வன் :** சரியான யோசனை! தேசாதிபதி நோர்த்தின் எண்ணம் நிறைவேறாமற் செய்துவிட வேண்டும்.

(காக்கை வன்னியனின் அதிகாரி வருகிறான்)

**அதிகாரி :** வணக்கம் மகாராஜா!

**பண்.வன் :** என்ன அதிகாரி, என்ன விசேடம்?

**அதிகாரி :** காக்கைவன்னிய மகாராஜா தங்கள் இராச்சியத்துடன் தொடர்பு கொள்ள விரும்புகின்றார். தங்களின் வீரம், தீரம், குணம் - அத்தனையுமே அவருக்கு நன்றாகப் பிடித்திருக்கின்றன. தங்களைப் பற்றிப் புகழாத நாளில்லை. இந்த இரண்டு இராச்சியங்களும் நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு எனக்கொரு யோசனை தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** (புன்முறுவலுடன்) என்ன அதிகாரி பலமான பீடிகை போடுகின்றாய். விஷயத்தைச் சொல்.

**அதிகாரி :** மகாராஜா, தங்களுடைய அந்தஸ்திற்கு நான் தங்களோடு சமதையாகப் பேசவந்துவிட்டேன் என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். ஏதோ என் மனதில் தோன்றியதைச் சொல்கிறேன்.

**பண்.வன் :** சரி சொல் பார்க்கலாம்.

**அதிகாரி :** தங்களுடைய அருமைத் தங்கை இளவன்னிச்சியைக் காக்கை வன்னிய இராஜாவிற்குத் திருமணஞ் செய்துவைத்தால் நன்றாயிருக்கும்.

**பண்.வன் :** அதிகாரி, எனக்கிருப்பதெல்லாம் ஒரே தங்கைதான். அவளுடைய விருப்பப்படிதான் நான் எதையுஞ் செய்ய முடியும். திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்.

**அதிகாரி :** என்ன மகாராஜா, இப்படிச் சொல்லிவிட்டீர்கள். தங்கள் சொல்லை இளவன்னிச்சியார் தட்டவா போகிறார்? தாங்கள் நல்லதைத்தானே செய்வீர்கள்.

**பண்.வன் :** அதிகாரி திருமணஞ் செய்வது நானல்லவே. தங்கையின் விருப்பப்படி நடப்பதுதான் நல்லது. யோசித்து முடிவைத் தெரிவிக்கிறேன்.

**அதிகாரி :** சுமுகமான முடிவாக இருக்கட்டும் மகாராஜா.

(ஒளி மங்குதல்)

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 6

கொழும்பிலுள்ள ஆங்கிலேயக் கோட்டையில் தேசாதிபதி நோர்த்தின் சபை மண்டபம். மண்டபத்தின் பின் புறச் சுவரில் யூனியன் ஜாக் கட்டப்பட்டுள்ளது. தேசாதிபதி உத்தியோக உடையில் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். சிறிது தூரத்தில் தளபதி வொன் டிறிபேக் கையிற் செய்திச் சுருளுடன் நிற்கிறார்.

பக்கத்திலுள்ள இலங்கைப் படத்திற் சில பகுதிகளை வாக்கிங் ஸ்டிக்கினாற் சுட்டிக் காட்டிப் பேசுதல்.

**நோர்த் :** இலங்கையிலே கோட்டை இராச்சியமும் யாழ்ப்பாண இராச்சியமும் எமது கைக்கு வந்துவிட்டன. கண்டி இராச்சியத்தையும் பிடித்து விட்டால் எமக்கு எதுவித இடர்ப்பாடும் இருக்காது. கண்டியைப் பிடிக்க ஏற்கனவே ஒரு படை அனுப்பியிருக்கிறேன். இன்று முடிவு தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிறிபேக் :** தேசாதிபதி அவர்களே! கண்டியை நாங்கள் பிடிப்பது அவ்வளவு சுலபமாகத் தோன்றவில்லை. கண்டியரசனுக்குப் பண்டாரவன்னியன் படைத்துணையனுப்பியிருக்கிறான்.

**நோர்த் :** என்ன! எமது யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழுள்ள வன்னி அரசன்தானே பண்டாரவன்னியன்? அவன் எங்களுக்கெதிராகப் படையனுப்பியிருக்கின்றானா?

**டிறிபேக் :** ஆம் பிரபு, அந்தப் பண்டாரவன்னியன் தான் படை அனுப்பியிருக்கிறான்.

**நோர்த் :** ஒரு சிற்றரசனின் படைக்கு நாம் பயந்து நடுங்க வேண்டுமா?

**டிறிபேக் :** பண்டாரவன்னியனைச் சிற்றரசன் என்று அசட்டை செய்ய முடியாது. ஈழத்தின் வட பகுதியில் மிகப் பரந்த பிரதேசமாக மிளிர்வது வன்னிநாடு. அதன் அரசனாகத் திகழ்பவன் பண்டாரவன்னியன். வன்னிநாடு பெயரளவில் எமக்குக் கீழுள்ளதே தவிர நடைமுறையில் பண்டாரவன்னியனே ஆள்கிறான்.

**நோர்த் :** அப்படியானால் பண்டாரவன்னியன் கப்பஞ் செலுத்துவதில்லையா?

**டிறிபேக் :** அப்படி அவன் பரம்பரையிலேயே இல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோர்த் :** கப்டன்! உங்களுக்கு வெட்கமில்லை? கறுத்தப் பயல் ஒருவன் கப்பங் கட்ட மாட்டானாம்; ஆங்கில இராச்சியத்திற்கே அவமானம் கப்டன்!

**டிறிபேக் :** Your Honour

**நோர்த் :** முல்லைத்தீவிலே கோட்டை ஒன்றைக் கட்ட ஏற்பாடு செய். ஆயுதங்களையும், பீரங்கிகளையும் நிறைத்துவை. ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறட்டும். பண்டாரவன்னியனையும், கண்டியரசனையும் எமது காலடியில் விழச் செய்யலாம்? You understand?

**டிறிபேக் :** அப்படியே செய்கிறேன் பிரபு.

(தூதுவன் வருகிறான்)

**தூதுவன் :** தேசாதிபதி அவர்களே! கண்டியிலே நமது படை படுதோல்வி அடைந்து விட்டது.

**நோர்த் :** என்ன? படுதோல்வியா?

**டிறிபேக் :** பிரபு, இன்னும் நாங்கள் பலப் பரீட்சை செய்வதாற் பயனில்லை. முதலில் நாங்கள் பண்டார வன்னியனைத் தோற்கடிக்க வேண்டும்.

**நோர்த் :** அதற்கு என்ன செய்ய வேண்டும்?

**டிறிபேக் :** படை பலத்தாற் பயனில்லையாயின் மூளைப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோர்த் :** எங்கே, உனது திட்டத்தைச் சொல் பார்க்கலாம்.

**டிறிபேக் :** வன்னி அரசர்களுக்கு மத்தியிலே பகையை வளர்த்துவிட வேண்டும். சூழ்ச்சியாலே பிரித்து விட்டு நீதிபதிகளாக நாம் போவோம்.

**நோர்த் :** சபாஷ் கப்டன்! எப்படி இத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொல்.

**டிறிபேக் :** பிரபு! இப்பொழுது காக்கை வன்னியன் பண்டாரவன்னியனைப் பகைத்திருக்கிறான். இந்தப் பகையை வளர்த்து நமது காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம்.

**நோர்த் :** அவனும் வன்னியன்தானே எமது எண்ணத்திற்கு இசைவானா?

**டிறிபேக் :** இணங்கச் செய்வதில் தான் எமது கெட்டித் தனம் தங்கியிருக்கிறது. காக்கைவன்னியனுக்கு ஆசையூட்டி வன்னிநாடு முழுவதும் அவனுக்குச் சொந்தம் என எப்படியும் அவனை நம்பச் செய்ய வேண்டும்.

**நோர்த் :** கப்டன், நீ யுத்த வீரன் மாத்திரமல்ல மதிநுட்பம் வாய்ந்த மந்திரியுங்கூட.

**டிறிபேக் :** என்னை அதிகமாகப் புகழாதீர்கள். இத்தனைக்கும் நான் அருகதையற்றவன். ஏதோ பெரிய பிரித்தானிய மன்னரின் பிரஜை என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் மன்னருக்குச் செய்ய வேண்டிய ஒரு தொண்டாக இதைக் கருதுகின்றேன். காக்கை வன்னியன் இப்பொழுது வருவான்.

(காக்கைவன்னியன் வருகிறான்)

**காக்.வன்:** வணக்கம் தேசாதிபதி அவர்களே!

**நோர்த் :** வணக்கம் காக்கைவன்னியரே! தங்களைப் பற்றித் தான் இப்பொழுது பேசிக் கொண்டிருந்தோம். தங்கள் வரவு நல்வரவாகட்டும். தங்களின் சிநேகத்தை வேண்டி நிற்கிறோம்.

**காக்.வன்:** ஆங்கிலப் பேரரசின் பிரதிநிதியாகிய தங்களின் சிநேகம் எனக்குக் கிடைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் பிரபு. என்னால் ஆகவேண்டிது யாதுமுண்டோ?

**நோர்த் :** என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? தங்களின் உதவியில்லாமல் நாங்கள் எப்படி இங்கு வாழமுடியும்?

**டிறிபேக் :** காக்கைவன்னிய பூபதியே! ஈழத்தின் வட பகுதியில் மிகப் பரந்த பிரதேசமாக மிளிர்வது தங்கள் வன்னிநாடு. இரண்டாயிரம் சதுரமைல் பரப்புள்ள வன்னிநாட்டில் சந்திரவன்னியன் பரம்பரையில் வந்தவர் தாங்கள்.

**காக்.வன்:** ஆமாம்... ஆமாம் பிரபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிறிபேக் :** சந்திரவன்னியனின் நேரடியான வாரிசு என்ற முறையில் வன்னிநாடு முழுவதுமே தங்களுக்குச் சொந்தம்.

**காக்.வன்:** அப்படியா!...ஆமா... ஆமா... மறந்துவிட்டேன்.

**டிறிபேக் :** சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக இந்தப் பரந்த பிரதேசத்தில் மிகச் சிறிய பகுதியையே தாங்கள் ஆளுகின்றீர்கள்.

**காக்.வன்:** ஆமாம். பண்டாரவன்னியன் எனக்குச் சொந்தமான பிரதேசத்திற் பெரும்பகுதியை ஆள்கின்றான்.

**டிறிபேக் :** பார்த்தீர்களா? வன்னிநாட்டிற்கு உரிமையில்லாத பண்டாரவன்னியன் தங்களுக்குச் சொந்தமான பிரதேசத்திற் பெரும்பகுதியை ஆள்கின்றான்.

**காக்.வன்:** ஆமாம்...ஆமாம்...

**டிறிபேக் :** தங்கள் உரிமையை நிலைநாட்டி வன்னிநாடு முழுவதற்கும் தாங்கள் அரசனாக வேண்டும்.

**காக்.வன்:** ஆம். அதற்குத் தங்களின் உதவி தேவை.

**டிறிபேக் :** காக்கைவன்னிய பூபதி, இந்தச் சிறிய உதவியை நாங்கள் செய்யாதுவிட்டால் எமது சிநேகிதத்தாற் பயனென்ன? தாங்கள் 'ஆம்' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள். எங்கள் படை முழுவதும் தங்கள் சேவையில் நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்.வன்:** தங்களின் மாபெரும் உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

**டிறிபேக்:** நண்பர்கள் பரஸ்பரம் உதவி செய்வது சகசந்தானே! இதையெல்லாம் பெரிதுபடுத்திக் கூறவேண்டாம்.

**காக்.வன்:** நன்றி. இனி நடக்க வேண்டியதைக் கவனிப்போம்.

**நோர்த் :** காக்கைவன்னியா, உன்னுடைய புத்துசாதுரியத்திலேதான் எல்லாந் தங்கியிருக்கிறது. எங்கள் உதவி எப்போதுமே உன் பக்கந்தான்.

**காக்.வன்:** நன்றி, வருகிறேன்.

(காக்கைவன்னியன் போகிறான்)

**நோர்த்:** கப்டன் டிறிபேக், பண்டார வன்னியனுக்கு ஓலையனுப்பி அவனைத் தர்பாருக்கு வரவழைக்கலாமென எண்ணுகிறேன்.

**டிறிபேக்:** நல்ல யோசனை பிரபு. எமது எண்ணத்தை நயமாகவும், பயமாகவும் சொல்லிப் பார்க்கலாம்.

**நோர்த்:** அவன் எமக்குக்கீழ் கப்பஞ் செலுத்தி ஆள மறுத்தால் யுத்தம் எனப் பயமுறுத்தலாம்.

**டிறிபேக்:** ஆம் பிரபு, முடிந்தவரையில் முயன்று பார்ப்போம். தாங்கள் கூறியபடி முல்லைத்தீவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டையொன்றைக் கட்டி முடித்த பின்னர் தான் பண்டாரவன்னியனை அழைக்க வேண்டும்.

**நோர்த் :** அதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெறட்டும்.

**டிறிபேக் :** உத்தரவு பிரபு. முல்லைத்தீவிலே கோட்டையொன்றைக் கட்டிப் பீரங்கிகளை நிறைத்து வைக்கிறேன். பண்டாரவன்னியனைப் பயந்து நடுங்கிச் சரணடையச் செய்வோம்.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 7

### காக்கை வன்னியனது அரண்மனைப் பூங்கா

பலவிதமான மலர்ச் செடிகள், முல்லைச் செடியருகில் அமைக்கப்பட்ட செயற்கை ஆசனம் ஒன்றிற் காக்கை வன்னியன் அமர்ந்தபடி சிந்திக்கிறான்.

**காக்.வன்:** (தனக்குள்) நல்லநாச்சன்... என்ன அழகான பெயர். வார்த்தெடுத்த சொர்ண விக்கிரகம் அவள். மேகக் கூந்தல்; மின்னல் இடை; மாம்பழக் கன்னம்; கவிபாடும் கண்கள்; அரிசிப் பலவரிசை; குமிழ் மூக்கு; கொவ்வை அதரம், அவள் ஒரு அழகான பூஞ்சோலை. அவளை மட்டும் அடைந்துவிட்டால்...

இதில் என்ன சந்தேகம்? எனக்கென்ன அழகில்லையா? அந்தஸ்தில்லையா? எந்தப் பெண்தான் என்னைத் திருமணஞ் செய்யச் சம்மதிக்க மாட்டாள். நல்ல நாச்சன் எனது இதய ராணி... நான் வன்னிநாடு முழுவதற்கும் ஏகச் சக்கரவர்த்தி... வெள்ளையருடன் சேர்ந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு இராச்சியத்தையும் பெறலாம். ஆனால் இதயத்தைப் பறித்த எழிலரசியைப் பெறலாமா?

(தனது மார்பிற் தட்டி உரத்து) அடே காக்கை வன்னியா! நீதான் இந்த வன்னிநாட்டின் ஏகச் சக்கரவர்த்தி.

(அதிகாரி வருகிறான்)

**அதிகாரி :** மகாராஜா, எங்கேயெல்லாம் உங்களைத் தேடுவது?

**காக்.வன் :** போன விஷயம் காயா? பழமா?

**அதிகாரி :** இரண்டுமில்லை.

**காக்.வன் :** என்ன அதிகாரி, நடந்ததைச் சொல் சீக்கிரம், நல்லநாச்சன் என்ற அழகுச் சிலை என்னைத் திருமணஞ் செய்ய மறுத்துவிட்டாளா?

**அதிகாரி :** அவசரப்படக்கூடாது. பண்டாரவன்னியனிடம் நாசூக்காக விஷயத்தை வெளியிட்டேன்.

**காக்.வன் :** என்ன சொன்னார்?

**அதிகாரி :** விருப்பம் இல்லாமலில்லை. தங்கையைக் கேட்டுத்தான் பதில் கூறுவாராம்.

**காக்.வன் :** தங்கை என்ன சீமையிலா இருக்கிறாள்? உடனே முடிவைக் கேட்டுத் தெரிவித்திருக்கலாம் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அதிகாரி :** மகாராஜா, இது திருமண விஷயம்; சட்புட்டென்று பேசிமுடிக்க முடியாது. அப்படிச் செய்வதும் முறையில்லை. ஆறஅமர ஆலோசித்துத்தானே முடிவு கூற வேண்டும். சுமுகமான பதில் கிடைக்குமென்றே நம்புகின்றேன்.

**காக்.வன் :** அதிகாரி, என்னுடைய நிலை உனக்குத் தெரியும். உண்ணும் உணவு, பருகும் பால், தின்னும் வெற்றிலை - அனைத்திலும் அவளேதான்... அவளில்லாமல் அரைக் கணமும் என்னால் உயிர்வாழ முடியாது.

**அதிகாரி :** அப்படியென்றால் நான் ஒன்று கூறுகின்றேன் செய்கிறீர்களா?

**காக்.வன் :** ஒன்றல்ல, ஒன்பதினாயிரம் சொல்; ஒரு நொடியில் செய்கிறேன். நந்திக் கடலைத் தூர்த்து நந்தவனமாக்க வேண்டுமா? மலையைக் கடைந்து மடுவாக்கி அதில் ஓடம் விடவேண்டுமா?

**அதிகாரி :** இப்போதைக்கு இவையொன்றும் வேண்டாம்; பண்டாரவன்னியன் அரண்மனைப் பூங்காவிற்குப் போக வேண்டும். மல்லிகைச் செடியருகில் முல்லைக் கொடிபோன்ற நல்ல நாச்சனைக் காணலாம். முதலில் ஏதிலார் போலப் பொது நோக்கு.... பிறகு காதல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்.வன்:** நல்ல உபாயந்தான்... ஆனால், கொஞ்சம் பயமாகவிருக்கிறது, அனுமதியில்லாமல் அயலவர் பூங்காவில் நுழைவதற்கு...

**அதிகாரி :** அஞ்சா நெஞ்சம் வேண்டும். மானைத் துரத்தி வந்ததாக அல்லது யானையைத் தேடி வந்ததாக ஒரு சாட்டுக்கூற முடியாதா?

**காக்.வன்:** எதுக்கும் நீயும் எனக்குத் துணையாக வர வேண்டும்.

**அதிகாரி :** வருவேன், ஆனால், நந்தவனத்திற்கு வெளியே தான் நிற்பேன். மிகுதி உங்கள் பொறுப்பு. அவள் உள்ளத்தை மட்டும் கவர்ந்துவிட்டால், வன்னி இராச்சியம் முழுவதற்கும் தாங்களே ஏகச்சக்கரவர்த்தி.

**காக்.வன்:** சரியான திட்டம்... இதன்படியே செய்வேன்.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 8

பண்டாரவன்னியன் அரண்மனையைச் சார்ந்த நந்தவனம். இளவரசி நல்லநாச்சன் ஒரு கிளியை வைத்துக் கொண்டு அதற்குப் பேச்சுப் பழக்குகிறாள். அவள் புவியழகன் என்று சொல்லக் கிளி அதைச் சொல்கிறது. பண்டாரவன்னியன் வருவதைக் கண்டவுடன் கிளியின் வாயைப் பொத்துகிறாள்.

**பண்.வன் :** தங்காய்! உன்னிடம் சில விஷயங்கள் பேச வேண்டும்.

**நல்.நாச் :** என்ன அண்ணா, அப்படி ஒருநாளும் இல்லாத இரகசியம் இன்றைக்கு.

**பண்.வன் :** தங்காய், உனக்கு வயதுவந்துவிட்டது. உனது திருமணத்தைக் கண்ணாரக் காண வேண்டுமென்று அம்மாவும் நானும் ஆசைப்படுகின்றோம்.

**பெருவன்னிச்சி :** ஆம் மகளே, அண்ணா சொல்வது போல எங்கள் ஆசையைப் பூர்த்தி செய்ய நீ உதவ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்.நாச் :** அண்ணா, அம்மா, இதற்கேன் இவ்வளவு அவசரம்?

**பெரு.வன் :** பருவத்தே பயிர் செய்ய வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் அவசரப்படுகின்றோம்.

**பண்.வன் :** மறுக்காதே தங்காய்! எனது ஆசைக் கனவுகள் இரண்டு. ஒன்று வன்னிநாட்டின் சுதந்திரம்...

**நல்.நாச் :** மற்றது?

**பண்.வன் :** அருமைத் தங்கையின் நல்வாழ்வு! இவையிரண்டையும் நான் கண்ணாரக் காண வேண்டும்.

**பெரு.வன் :** எனது ஆசையும் அதுதான் மகளே. அண்ணனின் சொல்லைத் தட்டாதே!

**நல்.நாச் :** ஏன் இப்படியெல்லாம் கூறுகின்றீர்கள். நான் இப்பொழுது நன்றாக வாழவில்லையா?

**பெரு.வன் :** இல்லையென்று சொல்லவில்லை. உன் அப்பா இருந்து உன் நல்வாழ்க்கையைக் காணக் கொடுத்து வைக்காமற் போய்விட்டார். உனது அண்ணன் தந்தையைப் போலவே உன்னைக் காப்பாற்றினான்.

**பண்.வன் :** நீ குடியும் குடித்தனமுமாக வாழ்வதைக் காணவேண்டுமென்று நானும் அம்மாவும் ஆசைப்படுகின்றோம். நீயே மனதுக்குகந்த மணாளனைத் தேர்ந்தெடுக்கலாம். உன் மனதில் யாரையாவது நினைத்து வைத்திருந்தால் சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரு.வன் :** ஆம் மகளே, நாம் விரும்புவதெல்லாம் உனது நல்வாழ்வைத்தான்.

**நல்.நாச் :** (ஆனந்தக் கண்ணீர் பொங்க) அண்ணா, சிறுவயது தொடக்கம் எனக்குத் தந்தைபோல் ஆதரவு காட்டினீர்கள்.

**பண்.வன் :** சொல் தங்காய்.

**நல்.நாச். :** நான் ஒருவரை மனதார நேசிக்கிறேன். சொன்னால் கோபிக்க மாட்டீர்களே?

**பண்.வன் :** சொல் தங்காய்; நான் ஏன் கோபிக்க வேண்டும்?

**நல்.நாச் :** அண்ணா!

**பண்.வன் :** தயங்காதே சொல்.

**நல்.நாச் :** எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தாரே புலவர் அவரை நான் மனதார...

**பண்.வன் :** என்ன? அந்த ஏழைப் புலவனையா? பாராள்வோன் .தங்கை வாள் பிடிக்கத் தெரியாதவனையா காதலிப்பது? முடியாது! இதற்கு நான் சம்மதிக்கவே முடியாது. எமது குலம், அந்தஸ்து அத்தனையையும் விட்டுச் சாதாரண புலவனையா காதலிக்கிறாய்? வெட்கம்! அரசபரம்பரைக்கே அவமானம்! (வாளை உருவி) எங்கே அவன்?

**நல்.நாச் :** (பண்டாரவன்னியனின் கையைப் பிடித்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா, அவரையொன்றுஞ் செய்யாதீர்கள். அவர் குற்றமற்றவர். இதோ குற்றவாளி உங்கள் முன்னிலையில் நிற்கிறாள். இவளை உங்கள் வாளுக்கு இரையாக்குங்கள்.

**பெரு.வன் :** வேண்டாம் மகளே. அண்ணனின் விருப்பத்திற்கு எதிராக நடவாதே!

**பண்.வன் :** (வாளைத் தரையிற் போட்டுக் கண்ணீர் வடித்து) தங்காய், என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? உன்னை மன்றாடிக் கேட்கிறேன். குலத்துக்கீனமான செயலைச் செய்யாதே!

**பெரு.வன் :** அண்ணனின் மனதைப் புண்படுத்தாதே. அரசகுலத்துப் பெண் ஓர் இளவரசனைத் திருமணம் செய்வதுதான் முறையானது.

**நல்.நாச் :** அம்மா குலத்திற்கீனமான எதையும் நான் செய்யவில்லை. அவரைப் பார்க்கும் போது அவர் முகத்தில் மன்னனுக்குரிய தேஜஸ் தென்படுகின்றது. ஏழைப் புலவனென்று ஏளனஞ் செய்யாதீர்கள்.

**பண்.வன் :** மன்னர்க்குரிய தேஜஸ் இருந்தாற் போதுமா? உண்மையில் அவன் பாடம் சொல்லித் தரும் புலவன்தானே? வன்னிநாட்டு இளவரசி வீரமன்னன் ஒருவனையல்லவா மணஞ் செய்யவேண்டும்!

**நல்.நாச் :** அண்ணா, அம்மா, உங்களின் விருப்பத்திற்கு மாறாக நான் அவரைத் திருமணஞ் செய்யவில்லை. நான் என்றும் கன்னியாகவே இருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** கன்னியாகவா? தங்காய், உனது முடிவை மாற்றவே மாட்டாயா?

**நல்.நாச் :** பொறுத்தருள வேண்டும் அண்ணா. கற்புள்ள பெண் தன் இதயத்தில் ஒருவருக்குத் தான் இடமளிக்க முடியும்.

**பெரு.வன் :** பிடிவாதம் வேண்டாம் மகளே. தீரச் சிந்தித்து நல்ல முடிவுக்கு வா.

**பண்.வன் :** இப்பொழுது நீயிருக்கும் நிலையில் நான் எதையும் வற்புறுத்தவில்லை. உனது முடிவை நன்கு ஆலோசித்தபின் கூறு.

(பண்டாரவன்னியனும் பெருவன்னிச்சியும் போகின்றனர். நல்லநாச்சன் சோகமே வடிவெடுத்தவளாய்க் காணப்படுகின்றாள். பின்னணியிற் சோக இசை)

(புலவர் புவியழகன் வருகிறார்)

**புவியழ :** இளவரசி, இங்கு நடைபெற்ற அத்தனையும் செவியுற்றேன். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது கூடாது என்றேன்; தாங்கள் கேட்கவில்லை. பாராள்வோன் தங்கை போரறியாப் புலவனைக் காதலிப்பது தவறு என்றேன்; அதையும் தாங்கள் கேட்கவில்லை.

**நல்.நாச் :** அத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புவியழ** : என்னை அத்தான் என்று அழையாதீர்கள்! தமயனார் விருப்பப்படி ஓர் இளவரசரைத் திருமணஞ் செய்து கொள்ளுங்கள்.

**நல்.நாச்** : நிறுத்துங்கள்! பெண்ணின் இதயத்தை நினைத்த பக்கமெல்லாம் திருப்பி விடலாம் என்று நினைக்காதீர்கள். எனது இதயத்தில் ஒருவருக்குத் தான் இடமுண்டு.

**புவியழ** : இது ஏட்டுப் படிப்பு இளவரசி. இதற்கும் வாழ்க்கைக்கும் எதுவித தொடர்புமில்லை.

**நல்.நாச்** : இதைத்தானா இத்தனை நாளும் சொல்லிக் கொடுத்தீர்கள் அத்தான். அறியாமையினாலே தங்கள் மீது ஆசையை வளர்த்ததற்காக என்னை மன்னித்து விடுங்கள். ஒன்று மாத்திரம் கூறுகின்றேன்; தமயனார் எதிர்க்கலாம். ஆனால் தங்கள் உருவத்தை என்மனத் திரையிலிருந்து அகற்றவே முடியாது. திருமணத்திற்குத் தடைவிதிக்கலாமேயன்றி இதயத்தைக் கவர்ந்தவரை மனதில் வைத்துப் பூசிக்க எத் தடையும் விதிக்க முடியாது.

**புவியழ** : வீணாகத் தங்கள் வாழ்க்கையைப் பாழாக்க வேண்டாம். இப்பொழுது ஒன்றுங் கெட்டுப்போகவில்லை. தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்.நாச் :** முடிவை மாற்றுவது முடியாத காரியம். தாங்கள் அதற்காக வருத்தப்பட வேண்டாம்.

**புவியழ :** இளவரசி, நான் எப்படி வருத்தப்படாமலிருக்க முடியும்? எனது வருகையால், தங்கள் வாழ்வு பாழடைந்ததென்றால் அந்தப் பழி என்னைத்தானே சாரும்.

**நல்.நாச் :** அப்படியொன்றும் வராது; தாங்கள் சுகமாக வாழலாம். வன்னி மண்ணின் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். உலகுள்ளளவும் எமது காதல் நிலைத்திருக்கும்.

*(காக்கைவன்னியன் வருகிறான்)*

**காக்.வன் :** ஹக்... ஹக்... ஹா... வன்னிநாட்டு இளவரசி வழிப்போக்கனுடன் காதல்! விந்தையிலும் விந்தைதான்! வாளெடுக்கத் தெரியாதவன் வன்னிச்சியைக் காதலிக்கிறான். வையகம் உள்ளளவும் அவர்கள் காதல் நிலைத்திருக்குமாம். (புவியழகனைப் பார்த்து) போரினைப் பாடிய புறநானூறு உனக்கு மனப்பாடமாக இருப்பதால் புவியாள்வோன் தங்கை உனது உடமையாகிவிட மாட்டாள். வீரமிருந்தால், நெஞ்சிலே துணிவும் தோளிலே வலுவுமிருந்தால் என்னுடன் போர் செய்ய வா.

*(வாளை உருவுகின்றான்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புவியழ** : காக்கைவன்னியா... வாள் பிடித்தவன் எல்லாம் வன்னியன் ஆகிவிட மாட்டான். (காக்கைவனியனின் கையிலே தட்ட வாள் விழுந்து விடுகின்றது. தன் உடைக்குள் மறைத்து வைத்திருந்த வாளை எடுத்து) இப்பொழுது காட்டு உன் வீரத்தை.

(காக்கைவன்னியன் கீழே விழுந்த வாளைக் குனிந்து எடுக்கிறான். சண்டை நடைபெறுகிறது)

**புவியழ** : இப்பொழுது தெரிகிறதா? வழிப்போக்கனைப் பற்றி?

**காக்.வன்:** அற்ப பதரே! உன்னை என்ன செய்கிறேன் பார்.

(சண்டை நடைபெறுகிறது. பண்டாரவன்னியன் மறைந்திருந்து அவதானிக்கிறான்.)

**பண்.வன்** : (முன்வந்து தனக்குள்) புலவர் புவியழகன்! உண்மையில் இவன் ஒரு அரசகுமாரனாகத்தான் இருக்க வேண்டும். சாதாரண புலவன் இப்படிச் சண்டை செய்ய முடியாது.

(சண்டையில் காக்கைவன்னியன் வீழ்ந்து விடுகின்றான். சண்டை நடந்து கொண்டிருக்கும் பொழுது புலவர் வேஷம் கலைய அரச உடை தெரிகிறது.)

**பண்.வன்** : (கிட்டச் சென்று) யார் தாங்கள்? ஏன் இந்த வேஷம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலியழ :** *நான் நுவரவன்னியனின் மகன் குமாரசிங்க வன்னியன்.*

**பண்.வன் :** *(அவனைக் கட்டித் தழுவி) அப்படியா? இது* வரை எமக்குத் தெரியாமற் போய்விட்டது. விழாவிலே உன்னை முதன் முதல் சந்தித்த போது நீ ஓர் அரச குமாரனாயிருப்பாயோ என்றுதான் சந்தேகித்தோம். நானும் உனது தந்தையும் பாலிய நண்பர்கள். உன்னைப் பற்றியெல்லாம் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். மிக்க மகிழ்ச்சி! தங்காய், இங்கே வா அம்மா.

**நல்.நாச் :** *(நாணத்துடன்) என்னண்ணா?*

**பண்.வன் :** யாரென்று தெரியுமுன்பே உங்கள் இதயங்கள் ஒன்றுபட்டுவிட்டன. இதுதான் தெய்வீகக் காதல். இனி எனக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை. *(இருவரின் கைகளையும் பிடித்து ஒன்றாகச் சேர்க்கின்றான்)* வாருங்கள்; உங்கள் திருமணத்தைச் சிறப்புடன் நிறைவேற்றி வைப்பேன்.

*(மூவரும் போகின்றனர். காக்கை வன்னியன் மிகவும் வருத்தத்துடன் எழுகின்றான்.)*

**காக்.வன் :** *(முனகிக் கொண்டு)* புலவனாயிருக்கின்றானே என்று விரட்டிப் பார்த்தேன். அவன் புலிபோலப் பாய்ந்து என்னை வீழ்த்திவிட்டான். இவையெல்லாம் பண்டாரவன்னியனின் சூழ்ச்சிதான். *(நெடுமூச்சுவிட்டு)* எனது எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணாகி விட்டது. காதல் நிறைவேறவில்லை. இனி... வெள்ளையர் பக்கம் சேர்ந்து பண்டாரவன்னியனைத் தொலைக்க வேண்டும். (உரத்து) பண்டாரவன்னியா! உனது வாழ்வு அஸ்தமிக்கப் போகிறதடா. இன்றே போகிறேன் வெள்ளையரிடம், ஹக்...ஹக்...ஹா! காக்கைவன்னியா, நீதான் இந்த நாட்டின் ஏகச்சக்கரவர்த்தி. ஹக்... ஹா... ஹா.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி – 9

ப ண் ட ா ர வ ன் னி ய ன் அ ர ண் ம னை .
பண்டாரவன்னியன், கைலாயவன்னியன், பெரியமெயினார் என்போர் அமர்ந்திருக்கின்றனர்.

**பெரி. மெயி :** அண்ணா, ஆங்கிலத் தூதுவன் ஒருவன் வருகிறான்.

**தூதுவன் :** மகாராஜா, தளபதி யுவெல் ஓலை தந்திருக்கிறார்.

**பண்.வன் :** தம்பி, கைலாயவன்னியா! ஓலையை வாங்கி வாசி.

**கை.வன் :** (ஓலையை வாங்கி) மதிப்பிற்குரிய பண்டார வன்னியனுக்கு, மாட்சிமை தங்கிய தேசாதிபதி நோர்த்தின் தளபதி வரையும் நிருபம்; இலங்கையிலிருந்த டச்சுப் பிரதேசங்கள் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட நாள் தொடக்கம் வன்னி இராச்சியமும் எமது ஆங்கிலப் பேரரசின் கீழ் வந்ததைத் தாங்கள் அறிவீர்கள். வன்னியரின் பரம்பரை வழக்கப்படி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தர்பாருக்கு வரக் கடமைப் பட்டுள்ளீர்கள். வழக்கம் போல் வன்னியருக்குரிய சகல வரிசை வாத்தியங்களுடனும் வரவேற்கப் படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** (ஓலையைப் பறித்து) தர்பார்... அதற்கு நான் போகவேண்டும்? பிழைக்க வந்த வெள்ளையருக்கு இவ்வளவு அதிகாரம்!

**கை.வன் :** அண்ணா, அவசரப்படுவது அவ்வளவு நல்லதல்ல. தகுந்த மரியாதையுடன் அழைக்கப்படும் பட்சத்தில் தர்பாருக்குப் போவதில் எதுவித தவறுமில்லை.

**பண்.வன் :** தூதரே! நீர் போகலாம். பதில் அறிவிக்கப்படும் என உமது தளபதிக்குக் கூறும்.

(தூதுவன் போகிறான்)

**பெரி.மெயி :** அண்ணா, தர்பாருக்குப் போவதுதான் நல்லது. பிரித்தானியப் பேரரசை நாம் ஏன் வீணிற் பகைக்க வேண்டும். அவர்களுக்கு உலகத்தில் எல்லாப் பாகங்களிலும் இராச்சியம் உண்டு.

**கை.வன் :** அவர்களிடம் பயிற்றப்பட்ட நல்ல படையுண்டு. நவீன போர்க் கருவிகள் உண்டு. துப்பாக்கியும் பீரங்கியும் ஏராளமாக உண்டு.

**பண்.வன் :** ஹக்...ஹக்...ஹா... அப்படியென்றால் அவர்களுக்குப் பயந்து நடுங்கிக் குற்றேவல் புரியவேண்டுமென்று சொல்கிறீர்களா?

**கை.வன் :** இல்லை அண்ணா, அப்படி அஞ்சவேண்டிய அவசியம் எமக்கில்லை. எனினும் யுத்தத்தைத் தவிர்க்கும் முறையில் நாம் நடந்து கொண்டால் நமக்கும் நமது நாட்டிற்கும் நன்மையுண்டு.

**பெரி.மெயி :** ஆங்கிலேயர் ஏற்கனவே முல்லைத் தீவிலே கோட்டையொன்றைக் கட்டிவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் நிரப்பி வைத்திருப்பர். பல போர்முனைகளைக் கண்ட போர்வீரரை நிறுத்தி வைத்திருப்பர்.

**பண்.வன் :** (கோபத்துடன்) நிறுத்து வன்னியரின் வீரத்திற்கும், தன்மானத்திற்கும் ஒவ்வாத வகையில் அந்நியரின் வீரத்தைப் புகழ்கிறீர்கள். உங்களால் வன்னியர் பரம்பரைக்கே களங்கம்.

**கை.வன் :** அண்ணா, நமது எதிரிகளின் திறமையையும், அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலையையும் நாம் நன்றாக அறிந்திருந்தால் தான் அவர்களுடன் நாம் வெற்றிகரமாகப் போர் புரியலாம்.

**பண்.வன் :** அவர்களின் வீரத்தையும், வாய்ப்பையும் கண்டு நாம் தாழ்வு மனப்பான்மை கொள்ளக் கூடாது.

**கை.வன் :** நாம் தாழ்வுணர்ச்சியுடன் பேசவில்லை அண்ணா. சமாதானமாக வாழ வழியிருந்தால் அதைப் பின் பற்றுவதே நாட்டுக்கு நல்லது. தவிர, காக்கை வன்னியன் வெள்ளையர் பக்கஞ் சேர்ந்திருக்கிறான். அவனின் குட்டை வெளிப்படுத்தவேணும் தங்கள் விஜயம் பயன்படலாம்.

**பெரி.மெயி :** எதற்கும் முன்னேற்பாட்டுடன் - படையுடன் - போவதுதான் நல்லது.

**பண்.வன் :** பெரியமெயினார்! தர்பாருக்குப் போகப் படைகளை ஆயத்தம் செய்.

**பெரி.மெயி :** உத்தரவு அண்ணா.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 10

யாழ்ப்பாணத்திலுள்ள கோட்டையில் லெப்டினன்ட் யுவெலின் மண்டபம். சுவரில் பிரித்தானிய அரசின் சின்னம் (Lion and the Unicorn) நடுவில் உயர்ந்த பீடமும், பக்கங்களில் உயரம் குறைந்த பீடங்களும் வைக்கப்பட்டுள்ளன. நடுவில் உள்ள பீடத்தில் யுவெல் கம்பீரமாக அமர்ந்திருக்கிறார். அவருக்கு முன் பாண்ட் வாத்தியக்காரர் நிற்கின்றனர். பண்டாரவன்னியன் வருவதைக் கண்டவுடன் யுவெல் சைகை செய்கிறான். வாத்தியம் முழங்குகின்றது. யுவெல் பேசத் தொடங்க வாத்திய ஓசை நிற்கிறது.

**யுவெல் :** கமோன், வாங்க வன்னித் தலைவரே! Sit down. தவிர்க்க முடியாத ஜோலிகளினால் தங்களை ஏற்கனவே அழைக்கவில்லை.

**பண்.வன் :** அதனாலென்ன? இப்பொழுது விஷயத்தைச் சொன்னாற் போதும்.

**யுவெல் :** கரிக்கட்டுமூலையையும், முல்லைத்தீவையும் நாங்கள் காக்கை வன்னியனிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தினாற் பெற்றுக் கொண்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** அப்படியென்றால்?

**யுவெல் :** யாழ்ப்பாண இராச்சியமும், வன்னி இராச்சியத்தின் ஒரு பகுதியும் எமது ஆணைக்குள் வந்துவிட்டது என்பதுதான் அர்த்தம். எல்லோருமே ஆங்கில ஆட்சிக்கு அடிபணியும் போது நீங்கள் மாத்திரம்?

**பண்.வன் :** பணிந்து வாழ்ந்து பழக்கமில்லை.

**யுவெல் :** ஆணவமான பதில்.

**பண்.வன் :** அது எங்கள் பிறவிக் குணம்.

**யுவெல் :** பெருந்தவறு செய்கிறீர்.

**பண்.வன் :** தவறுக்குப் பதில் சொல்லச் சக்தியுண்டு.

**யுவெல் :** பண்டாரவன்னியா! பகற் கனவு காண்கிறாய்.

**பண்.வன் :** கனவு காண்பவர் நீர்தான்.

**யுவெல் :** ஆங்கிலேயரை எதிர்த்தால்...?

**பண்.வன் :** அழிவு அல்லது வாழ்வுதானே?

**யுவெல் :** அதிக நாளில்லை அந்த முடிவிற்கு!

**பண்.வன் :** முடிவு எதுவானாலென்ன? வெற்றி அல்லது வீரசுவர்க்கம்.

**யுவெல் :** விதியுடன் விளையாடுகிறீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** உங்கள் விதியை நிர்ணயிக்கும் காலம் நெருங்கிவிட்டது.

**யுவெல் :** பண்டாரவன்னியா! பின்னுக்கு வருவதைச் சிந்தித்துப் பார். அடங்கி வாழ்ந்தால் அரச பதவி நிலைக்கும், இல்லையேல்?

**பண்.வன் :** அடங்கிவாழ்ந்து அரசோச்சுவதைவிட எம் உடம்பைவிட்டு உயிர்போவதே மேல் என்று நினைக்கிறோம்.

**யுவெல் :** கொடுக்க வேண்டிய வரி?

**பண்.வன் :** வரியென்ற வார்த்தைக்கே இடமில்லை. பகுதிப் பணம் செலுத்தியாள்பவன் பண்டாரவன்னியன் அல்லன். அந்நியருக்கு அடிபணிந்து ஆட்சிபுரிய நாங்கள் அடிமைகள் அல்ல. உங்களுக்கென்ன அதிகாரமிருக்கிறது எங்களிடம் வரி கேட்க?

**யுவெல் :** அதிகாரம் பெற்றிருக்கிறோம் ஏமியன் உடன்படிக்கையின்படி இலங்கை முழுவதும் எங்களுக்குச் சொந்தம்.

**பண்.வன் :** ஏமியன் உடன்படிக்கையில் நாமெல்லாம் கையொப்பமிட்டோமா? எங்கேயோ நடந்த ஏமியன் உடன்படிக்கைக்கு இங்கே சொந்தங் கொண்டாடுகிறீர்களே?

**யுவெல் :** இருக்கட்டும் அப்படியென்றால் கரிக்கட்டு மூலையைக் கொள்ளையடித்தீராமே... அது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** கொள்ளையடிக்கவில்லை. நாட்டைக் காட்டிக் கொடுத்துத் தவறு செய்த துரோகிகளைத் தண்டித்தோம்.

**யுவெல் :** எது தவறு?

**யுவெல் :** கடை வைத்துப் பிழைக்கக் கறுவாவும், கராம்பும் வாங்க வந்த இனத்திற்குக் கரிக்கட்டு மூலையையும், முல்லைத்தீவையும் பங்கிட்டுக் கொடுக்க முனைந்து நாட்டுக்குத் துரோகம் செய்த அயோக்கியரை இந்த மட்டும் விட்டு வைத்தது அவர்களும் எங்கள் இனம் என்ற ஒரே காரணத்தால்!

**யுவெல் :** கதையளக்க வேண்டாம்; கப்பஞ் செலுத்த மறுத்தால் கவலைப்பட நேரிடும்.

**பண்.வன் :** வன்னிநாட்டின் சக்தி, வந்தவர்களாகிய உங்களுக்குத் தெரியாது. வன்னிநாடு அந்நியரை அகற்றவே பிறந்தது. அதற்கே உயிர் வாழ்கின்றது. வன்னியர் கடமைக்காக இரத்தஞ் சிந்தச் சித்தமாயிருக்கின்றனர்.

**யுவெல் :** பண்டாரவன்னியா! நீ பரிதவிக்கப் போகிறாய்.

**பண்.வன் :** அதைப் பற்றிய அக்கறை தங்களுக்கு வேண்டாம்.

**யுவெல் :** அகில இலங்கையும் எமது ஆதிக்கத்திலிருக்க அர்த்தமில்லாது அகங்காரம் கொள்ளும் நீங்கள் அழிக்கப்படுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** அதை நீங்கள் இப்பொழுதே அனுபவிக்கப் போகிறீர்கள். கடைக்கார இனம் கப்பங் கேட்க முடியாது. அண்டிப் பிழைக்க வந்த அந்நியர் ஆட்சி செலுத்த முடியாது. படுகளத்தில் போர் மூண்டு பிணக் குவியல் பெருமலையாய்க் குவிந்தாலும் கடுகளவும் இடங் கொடாதவன் பண்டார வன்னியன்.

**யுவெல் :** பண்டாரவன்னியா! கண்மூடித்தனமாகப் பேசிக் கஷ்டப் படப்போகிறாய், நீ எவ்வளவு வீரனாக இருந்தாலும் வரலாற்று ஏடுகளைப் புரட்டிப்பார். ஆங்கில ஆட்சியை எதிர்த்த அத்தனை நாடுகளும் அழிக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் இந்தச் சின்னஞ் சிறிய வன்னிநாடு மாத்திரம் பிரித்தானிய சம்ராச்சியத்தை எதிர்த்தால்...

**பண்.வன் :** அப்படியொன்றுங் கெட்டுவிடாது. கண்டியிலே மாட்சிமை தங்கிய தேசாதிபதியின் படை மண்ணோடு மண்ணானதை அறிவோம். ஏகாதிபத்திய வெறிக்கு எப்பொழுதுமே வெற்றிகிடைக்காது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தலை வணங்காது தனமானங் காத்த வன்னித் தமிழர் பரம்பரையில் வந்தவர் நாம். வந்தவருக்கு ஏன் வணக்கஞ் செலுத்த வேண்டும்?

**யுவெல் :** இனி, வன்னிநாடு அழியும்வரை போர்க்களம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** வெள்ளையனே! வெறும் பேச்சை நிறுத்து, எந்த ஜாதியாய் இருந்தாலும் வந்தவர்களை மரியாதை செய்து வான் புகழ் கொண்டது வன்னிநாடு. அதனாற் சற்றுப் பொறுத்தோம். பொறுமையின் அருமையைப் புறக்கணித்தால் கருவறுக்கும் வரை கன்னித் தமிழ் வன்னிநாடு கண் விழித்திருக்கும்; வானமே இடிந்து தலையில் விழுந்தாலும், இந்த வையகமே திரண்டு எதிர்த்தாலும், மலை கலங்கினாலும் நிலை கலங்காத வன்னித் தமிழன் பண்டார வன்னியனின் நாட்டுப் புனித மக்களிடம் துப்பாக்கி முனையைக் காட்டிக் கலங்கவைக்க முடியாது.

**யுவெல் :** அப்படியானால் முடிவு?

**பண்.வன் :** முடியாது என்பதே.

**யுவெல் :** முடிவு அதுவானால் நீங்கள் போகலாம்.

**பண்.வன் :** சந்தோஷம்!

(டிறிபேக்கின் முன்னேற்பாட்டின்படி வன்னித் தலைவர்களைக் கைதுசெய்ய முனைகின்றனர். குமாரசிங்க வன்னியன் சிறைப்பட ஏனையோர் தப்பிச் செல்கின்றனர்.)

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 11

முல்லைத்தீவுக் கோட்டை வாயில். பண்டார வன்னியன், கைலாயவன்னியன், பெரியமெயினார் என்போர் போர்க்கோலத்துடன் நிற்கின்றனர்.

**கை.வன் :** அண்ணா, நாம் எதிர்பாராத விதமாக மைத்துனர் குமாரசிங்கவன்னியரை வெள்ளையர் சிறைப்படுத்திவிட்டனர்.

**பண்.வன் :** ஆம், எதிர்பாராதவிதத்தில் மைத்துனர் சிறைப்பட்டுவிட்டார். குமுழமுனையில் முகாமிட்டிருந்த எமது யானைப்படை வருகிறது. (பின்னணியில் யானைப் படை, போர் வீரர் ஒலி) அதைக் கொண்டு அந்நியரின் சின்னமாகிய முல்லைத்தீவுக் கோட்டையைத் தகர்ப்போம்; அடிமைச் சின்னம் அகற்றப்பட்டு விட்டால் மைத்துனரை மீட்பது சுலபம்.

**கை.வன் :** ஆம் அண்ணா, முல்லைத்தீவுக் கோட்டையைத் தகர்த்தெறிந்து வெள்ளையருக்கு நல்ல பாடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பிக்கலாம். எமது தோள்வலியால் ஆங்கிலேயரை அடி பணியச் செய்யலாம்.

**பண்.வன் :** சுதந்திர வீரர்களே! சோதனைப் போர் தொடங்கிவிட்டது. உங்கள் வாள் வீச்சின் வேகம், வில்லின் நாதம், வேலின் பாய்ச்சல், ஈட்டியின் எதிர்ப்பு எதிரிகளை நடுங்கச் செய்யட்டும். துப்பாக்கியின் அலறலையும், பீரங்கியின் அதிர்ச்சியையும் துளைத்து முன்னேறுங்கள்!

*(வன்னிப்படை வீரர் அணிவகுத்துச் செல்லுதல்)*

*பின்னணிப் பாட்டு :*

வெற்றிவாள் வீரவாள் வெற்றிவாள்

வன்னிநாட்டு வீரர் நாங்கள்
மானங் காக்கும் போரிலே
அந்நியர்தம் கோட்டை தன்னை
அடியுடன் நொறுக்கு வோம்
கன்னியான தமிழ ணங்கைக்
காக்கும் வீர வன்னியன்
சென்னியை வணங்கி வீரர்
சென்று போர் புரிகுவோம். (வெற்றி)

முல்லைத்தீவுக் கோட்டை தன்னை
முடியும் வரை தாக்கியே
தொல்லை தந்த வெள்ளையரைத்
துரத்தி வெற்றி பெறுகுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லையில்லா வீரம் எங்கள்
இரத்த மதில் ஊறிடும்
நல்லநா ளதனில் இன்று
நாமும் போரை யாற்றுவோம். (வெற்றி)

கறுவா வாங்க வந்தவர்கள்
கப்ப மென்று கேட்கிறார்
சிறுமையுற்று வாழ நாங்கள்
சிறு மறியின் கூட்டமோ
பெருகு துன்பம் வந்தபோதும்
பெற்ற தாயைக் காத்திட
அருமை மைந்தர் போர்முனைக்கு
ஆர்ப்பரித்து ஏகு வோம். (வெற்றி)

வாளிருக்கு வேலி ருக்கு
வன்னி மன்னர் ஊட்டிய
பாழி லாச்சு தந்திர
உணர்ச்சி பொங்கி வழியுது
காலனாரின் கிங்க ரரைக்
காண வேண்டி வந்துள
மேலை நாட்டு வாணிபரை
விரட்டியே அடக்கு வோம்;

*(பலவிதமான யுத்த ஒலிகள்)*

**பெரி.மெயி.** : *அண்ணா, பகைவரின் முன்னணி தகர்ந்து நொறுங்கிப் படைகள் பின்வாங்குகின்றன. நம்பிமாரின் கைவன்மை கடமையைச்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிட்டது. மைத்துனரை மீட்பதற்குப் படையொன்றை அனுப்ப வேண்டும்.

**பண்.வன் :** ஆம், இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மைத்துனர் குமாரசிங்கவன்னியரை மீட்டு விடுவோம். கைலாய வன்னியா! பெரும்படையுடன் சென்று குமாரசிங்க வன்னியனை மீட்டுவர ஆயத்தம் செய். நானும் வருகிறேன்.

**கை.வன் :** அண்ணா, தங்கள் இலட்சியத்தை நிறைவேறத் தம்பிமார் நாங்களிருக்கிறோம். தாங்களேன் வீணில் போருக்குச் செல்ல வேண்டும்?

**பண்.வன் :** சுத்த வீரனென்பவன் யுத்தமுனையில் முன்னின்றே போரிடுவான். பண்டாரவன்னியன் தம்பிமாரைப் போர்க் களத்திற்கு அனுப்பிவிட்டுத் தான் மட்டும் பஞ்சணை மெத்தையிற் படுத்துறங்கினான் எனப் பகைவர் என்னைப் பழித்துரைக்க வேண்டாம். அதோ கப்டன் டிறிபேக் புறமுதுகு காட்டி ஓடுகின்றார்.

(கப்டன் டிறிபேக் மீது வன்னி வீரனொருவன் ஈட்டி எறிய முனைகிறான். பண்டாரவன்னியன் அவனைத் தடுத்து நிறுத்துகின்றான்.)

நிறுத்து, போரிலே புறமுதுகு காட்டியோடும் தளபதி மீது ஈட்டியெறிவது அழகன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாயிரம் மைல் தூரத்துக்கப்பாலிருந்து இங்கு வந்த ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் கூலிப்படையில் சேவை செய்யும் தளபதியே! உமது வீரத்தைப் பாராட்டுகின்றேன். ஒரு வீரன் கூடத் துணையின்றி ஒண்டியாய் நிராயுதபாணியாய்ப் போர்க்களத்தில் நிற்கும் உம்முடன் யுத்தஞ் செய்வது வன்னியர் வீரத்திற்கு அழகன்று. ஆகவே இன்று போய்ப் போர்க்கு நாளை வருக.

**டிறிபேக் :** உமது நயவுரைக்கு நன்றி; போகிறேன்; திரும்பி வருவேனோ தெரியாது.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 12

யாழ்ப்பாணக் கோட்டை, லெப்டினன்ட் யுவெலின் மண்டபம், யுவெல் ஆசனத்திலிருக்க டிறிபேக்கும், எட்வேட் மெட்சும் நிற்கின்றனர்.

**டிறிபேக் :** லெப்டினன்ட் யுவெல் அவர்களே! முல்லைத் தீவில் எமது படை தோல்வியடைந்து விட்டது. பண்டார வன்னியன் முல்லைத்தீவுக் கோட்டையைத் தாக்கி எம்மைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்துவிட்டான்.

**யுவெல் :** என்ன? பண்டார வன்னியன் எங்கள் படையைத் தோற்கடித்துவிட்டானா? Shame, வெட்கமில்லை. பீரங்கியும், பெரிய படையும் தோல்வி! வாளும் வேலும் வெற்றி!!

**டிறிபேக் :** எதிர்பாராத தாக்குதல் பிரபு. முல்லைத்தீவில் எமது படைப்பலம் போதாது பிரபு. தவிர, வன்னிநாட்டு வீரர் அத்தனைபேருமே சுதந்திர உணர்ச்சியுடையவர்கள். எமது படை கூலிக்கு மாரடிக்கும் கூட்டம் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுவெல்** : அப்படியானால் முடிவு?

**டிறிபேக்** : பலமுள்ள படையொன்று வேண்டும். அத்துடன்...

**யுவெல்** : அத்துடன்?

**டிறிபேக்** : காட்டிக் கொடுக்க ஒரு வன்னியன் அகப்பட்டு விட்டால்...

**யுவெல்** : (சற்றுச் சிந்தித்து) ஏன்? காக்கைவன்னியன் எங்கே? பழைய உரிமையைச் சொல்லி அவனை நம் வசப்படுத்தினால் காட்டிக் கொடுப்பானில்லையா?

**டிறிபேக்** : ஆம் பிரபு. என்றாலும் பண்டாரவன்னியனைத் தோற்கடிக்க ஒரு படை போதாது.

**யுவெல்** : மூன்று பெரிய படைப் பிரிவுகள். யாழ்ப்பாணத்திலிருந்து நான் பத்தொன்பதாவது ரெஜிமென்ட் படைப் பிரிவைக் கொண்டு செல்கிறேன். எட்வேட் மெட்ச்! உனது தலைமையில் திருக்கோண மலையிலிருந்து பெரும்படையொன்று வன்னிநாட்டை நோக்கிச் செல்லட்டும்.

**எட்.மெட்ச்** : அப்படியே செய்கிறேன் பிரபு.

**யுவெல்** : கப்டன் டிறிபேக்! உனது படையை மன்னாரில் இருந்து இட்டுச் செல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிறிபேக் :** திறமான யோசனை பிரபு. வன்னி நாட்டின் மூன்று எல்லைகளிலிருந்தும் மூன்று பெரிய படைகள் சென்றால் பண்டாரவன்னியனின் படையைப் படுதோல்வியடையச் செய்யலாம்.

**யுவெல் :** மும்முனைத் தாக்குதல் நிச்சயம் எமக்கு வெற்றியை ஈட்டித் தரும். இல்லையா?

**டிறிபேக் :** நிச்சயம்; முப்படையும் சேர்ந்தால் முடியாததொன்றில்லை. என்றாலும் காக்கைவன்னியனின் உதவியும் நமக்கு வேண்டும்.

(காக்கைவன்னியன் வருகிறான்)

**யுவெல் :** காக்கைவன்னியரே! உமக்கு ஆயுள் நூறு! உம்மைப்பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம்.

**காக்.வன் :** தளபதி அவர்களே! தாங்கள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்யச் சித்தமாயிருக்கிறேன். உத்தரவு போடுங்கள்.

**டிறிபேக் :** பண்டாரவன்னியன் கொட்டம் அடங்கவேண்டும்; காக்கைவன்னியன் வன்னிநாடு முழுவதையும் அரசாள வேண்டும்.

**காக்.வன் :** அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் பிரபு?

**டிறிபேக் :** பண்டாரவன்னியனுடன் சிநேகங் கொள்ள வேண்டும்.

**காக்.வன் :** என்ன இப்படிக் கூறிவிட்டீர்கள்! அந்தக் கயவனுடன் சிநேகம் கொள்ளச் சொல்கிறீர்களே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிறிபேக் :** எல்லாம் விஷயத்தோடுதான். அவனின் சிநேகிதன் மாதிரி நடித்து அவன் படையிற் சேர வேண்டும்.

**காக்.வன் :** (குறுநகை புரிந்து) அடுத்துக் கெடுக்கும் படலம் என்று சொல்லுங்கள். இதுதானே எனக்கும் எனது மூதாதையர்க்கும் கை வந்த கலை.

**டிறிபேக் :** பண்டாரவன்னியனின் படையில் சேர்ந்து படை இரகசியங்களை எமக்கு அறிவிக்க வேண்டும்.

**காக்.வன் :** கரும்பு தின்னக் கைக்கூலியா வேண்டும்? தாங்கள் எனக்கு எவ்வளவோ உதவி செய்ய முன் வரும் போது நான் மாத்திரம் இந்தச் சிறிய உதவியைச் செய்யாது விடுவேனா?

**யுவெல் :** கப்டன்! ஏற்கனவே பண்டாரவன்னியன் எமது நண்பர் காக்கைவன்னியரைப் பகைத்திருக்கிறான். திடீரென்று அவன்பக்கம் சேர்ந்தால் சந்தேகங் கொள்ள மாட்டானா?

**டிறிபேக் :** நிச்சயம் சந்தேகிப்பான். அதற்கும் நாம் ஓர் உபாயஞ் செய்ய வேண்டும்!

**காக்.வன் :** பிரபு! என்னைத் தங்கள் பக்கம் எப்படிச் சேர்க்கலாம் என்று பண்டாரவன்னியனும் அவன் தம்பிமாரும் ஆலோசனை செய்கிறார்களாம்.

**யுவெல் :** என்றாலும்கூட எங்களைவிட்டுப் பிரிவதற்கு ஏதாவதொரு காரணம் காட்டிப் பண்டார வன்னியனை நம்பச் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிறிபேக் :** காக்கைவன்னியரே, உமக்கும் பண்டார வன்னியனுக்கும் என்ன விஷயத்தில் பகையேற்பட்டது?

**காக்.வன்:** என்னுடைய இராச்சியம் முழுவதையும் அவன் ஆள்வதாகத் தாங்கள்தானே கூறினீர்கள். அப்படிச் செய்தால் எனக்குக் கோபம் வராதா? தன்னுடைய தங்கையைத் திருமணம் செய்யுமாறு தூதுக்குமேல் தூதுவிட்டான்.

**டிறிபேக் :** (குறுநகையுடன்) திருமணப் பிரச்சினை... அப்புறம் தாங்கள் என்ன சொன்னீர்கள்?

**காக்.வன்:** 'முடியாது' என்று ஒரேயடியாக மறுத்துவிட்டேன். நல்லநாச்சன் என்ற அவலட்சணத்தைக் கட்டிக் கொண்டு கஷ்டப்படுவானேன்? நான் ...ம்... என்றால் போதும். வன்னி இராச்சியத்திற்கு இராணியாக - எனது மனைவியாக - ஆயிரம் இளவரசிகள் என் காலடியில் விழுவார்கள்.

**டிறிபேக் :** உண்மைதான். தாங்கள் விரும்பினால் ஒரு ஆங்கில இளவரசியையே கல்யாணம் செய்யலாம்.

**காக்.வன்:** பிரபு... இப்போதைக்கு சம்சார சாகரத்துள் விழுந்து அழுந்தி என் வாழ்நாளை வீண்நாளாக்க விரும்பவில்லை. என் கடன் தங்கள் பணி செய்து கிடப்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவெல் : காக்கைவன்னியரே, எங்களுக்காகத் தங்கள் கொள்கையைச் சற்று விட்டுக் கொடுக்க வேண்டும்.

காக்.வன்: தங்களின் விருப்பப்படி நடப்பதுதானே என்னுடைய கொள்கை. என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்.

யுவெல் : பண்டாரவன்னியன் தங்கையைக் காதலிப்பதாக ஒரு நடிப்பு... அப்படிச் செய்து விட்டால் பண்டாரவன்னியன் சுலபமாக நம்பிவிடுவான்.

காக்.வன்: பிரபு, இதை மாத்திரம் கேளாதீர்கள். வேறு எதை வேண்டுமானாலும் கூறுங்கள்.

டிறிபேக் : ஏனிப்படித் தயங்குகின்றாய். நடிப்புத்தானே.

காக்.வன்: அதற்கில்லைப் பிரபு, அவள் ஏற்கனவே ஓர் ஏழைப் புலவனைக் கல்யாணம் செய்துவிட்டாள்.

யுவெல் : என்ன காக்கைவன்னியரே, கல்யாணம் செய்தால் பிறகு காதலிக்கக்கூடாதா?

காக்.வன்: பிரபு, இது தமிழ்நாடு. இங்கு திருமணஞ் செய்த பெண் தன் கணவனைத் தவிர வேறெவரையும் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பைக் காக்க வேண்டுமென்பதே இங்கு வாழ்பவரின் கொள்கை.

யுவெல் : அப்படியா? வேறென்ன செய்வது?

டிறிபேக் : பிரபு, எனக்கு இப்படியொரு யோசனை தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுவெல் :** எங்கே சொல் பார்க்கலாம்!

**டிறிபேக் :** நாங்கள் காக்கைவன்னியரை வெறுத்துத் துரத்திவிட்டதாகவும், காக்கை வன்னியர் எங்கள் மீது வஞ்சந் தீர்க்க முனைந்திருப்பதாகவும் கதை கட்டி விட வேண்டும்.

**யுவெல் :** நாங்கள் கட்டிவிடும் கதை பண்டாரவன்னியன் செவிக்கெட்ட வேண்டும். அவன் அதை நம்ப வேண்டும்.

**காக்.வன் :** அதைத் தொடர்ந்து நான் போய்ச் சேர்ந்து விடுகிறேன், மிகுதி என்னுடைய பொறுப்பு.

**யுவெல் :** காக்கைவன்னியரே, உம்முடைய புத்தி சாதுரியத்திலும், நடிப்பிலும்தான் எல்லாம் தங்கியிருக்கின்றது. வன்னிநாட்டின் மணிமுடி உமது தலையிலேறும் நாள் அதிக தூரத்திலில்லை.

**டிறிபேக் :** ஏதோ உம் தயவு இருந்தால் எல்லாம் நிறைவேறும்.

**யுவெல் :** எங்கள் உதவி எப்போதுமே உம் பக்கந்தான். புத்தியைக் கூர்மையாக்கிக் கொள்; புவியாளும் பேற்றைப் பெறுவீர்.

**காக்.வன் :** உத்தரவு பிரபு. பண்டாரவன்னியனின் தோல்வி நிச்சயம்! வருகிறேன்.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 13

பண்டார வன்னியன் அரண்மனை, பண்டாரவன்னியன் இருக்கிறான். தம்பிமார் இருவரும் நிற்கின்றனர்.

**பண்.வன் :** தம்பிமாரே! முல்லைத்தீவிலிருந்து நாம் வெள்ளையரை விரட்டியதற்கு வெற்றி விழாக் கொண்டாடுகிறோம். இந்த வெற்றி எமக்கு மாத்திரமல்ல இந்நாட்டின் சுதந்திர உணர்ச்சியுடைய வீரமிகு பிரஜைகள் அத்தனை பேரையும் சாரும். வன்னி நாடு சின்னஞ் சிறியது; அது அந்நியருக்கு அடிபணிந்து விடும் என்று அங்கலாய்த்த வெள்ளையரின் கொட்டத்தை நாம் அடக்கி விட்டோம். இது நமது திட்டத்தின் முதலாவது படி. இத்துடன் எமது வேலை முடிந்துவிடவில்லை. வெள்ளையர்கள் என்று ஈழத்து மண்ணைவிட்டு அகற்றப்படுகின்றார்களோ அன்றுதான் எமது வன்னித் திருநாட்டின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருநாளாகும். அதுவரை நாம் அஞ்சாது போரிட வேண்டும். பதுங்கியிருந்து பாயவரும் பகைவர் கூட்டத்தைப் படுகளத்திற் சந்திக்க நமக்குச் சக்தியுண்டு. புலியெனப் பாயும் போர் வீரரைப் புறமுதுகிடச் செய்யப் போர் வீரருண்டு. வெள்ளைப் படையின் இடிமுழக்கப் பீரங்கிகளைக் கண்டு அஞ்சாது முன்னேற வேண்டும்.

**கை.வன் :** அண்ணா, எத்தனை பீரங்கிகள் இருந்தாலும் ஆங்கிலப் படை கூலிக்கு மாரடிக்கும் கூட்டந்தானே. ஆயிரம் ஆயிரமாய் அவர்கள் வந்தாலும் நம்மவருள் ஒரு சிலர் அவர்களைப் பூண்டோடு நாசமாக்கி அழித்து விடமாட்டார்களா?

**பெரி.மெயி :** அண்ணா, வெள்ளையரின் கொடுமையை நினைக்கும்போது நெஞ்சம் வேகிறது. முல்லைத்தீவுப் போரிலே எமக்கு உதவி புரிந்ததற்காகக் குமாரசேகர முதலியாரையும் இன்னும் முப்பது பேரையும் வெள்ளையர்கள் தூக்கிலிட்டுக் கொன்றுவிட்டனர்.

**பண்.வன் :** தம்பி! கலங்காதே. சுதந்திரப் போரிலே குமாரசேகர முதலியார் மாத்திரமல்ல நாங்களும் நாளை இறந்து போகலாம். வன்னி மாதாவின் சுதந்திரத்திற்காக எத்துணைத் தியாகம் செய்யவும் சித்தமாயிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கை.வன் :** காக்கைவன்னியன் வெள்ளையர் பக்கம் இருக்கும்பொழுதுதான் நாம் சற்றுப் பயந்தோம். இப்பொழுது வெள்ளையர் காக்கைவன்னியனைத் துரத்தி விட்டார்களாம்.

**பண்.வன் :** நேருக்கு நேர் போர் செய்பவர்களுக்கு நாம் அஞ்சத் தேவையில்லை. சூழ்ச்சிக்காரரர்களுக்குத் தான் நாம் சற்று அஞ்ச வேண்டும்.

**பெரி.மெயி :** அண்ணா, எதிரிகளின் பலக் குறைவில் நாம் அளவற்ற நம்பிக்கை வைப்பது தவறு. நாமும் வெள்ளையரைப் போல இராஜ தந்திர முறைகளைக் கையாள வேண்டும். எமது எதிரிகளோ ராஜ்ய விவகாரங்களிலும், ஆக்க வேலைகளைத் திட்டமிட்டு ஆட்சியை ஸ்தாபிதம் செய்வதிலும் உலக மக்களிடையே முதலிடம் வகிப்பவர்கள். அவர்களை அவர்கள் பாதையில் சென்று தான் முறியடிக்க வேண்டும். முல்லைத் தீவுப் போரிலே தளபதி டிறிபேக்கின் படை பின் வாங்கி ஓடிவிட்டது. வெள்ளையர்கள் இந்த அளவில் விட்டுவிட மாட்டார்கள். இன்னொரு படையுடன் வரலாம். இடைக் காலத்தில் எமது படையைப் பலப்படுத்த வேண்டும். நாம் வெற்றிப் போதையில் மயங்கியிருந்தால் படுகுழியில் வீழ்வது நிச்சயம்.

**பண்.வன் :** ஆம். வன்னிநாட்டுப் பிரஜைகள் அத்தனை பேருமே வாளெடுத்துப் போர்செய்தால் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களை விரட்டலாம். வீட்டுக்கொரு வீரன் நாட்டைக் காக்க முன்வந்தால் ஓட்டமெடுப்பர் வெள்ளையர்.

(காக்கைவன்னியன் வருகிறான்)

**காக்.வன்:** (பண்டாரவன்னியனின் காலடியில் விழுந்து) வணக்கம் மகாராஜா! என்னுடைய துரோகச் செயலுக்குப் பிராயச் சித்தம் தேடவே இங்கு வந்தேன். என்னை மன்னித்தேன் என்று சொல்லுங்கள்.

**பண்.வன் :** காக்கைவன்னியா, எழுந்திரு. நான் எதற்கு உன்னை மன்னிக்க வேண்டும்?

**காக்.வன்:** மகாராஜா! வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பினேன். வெள்ளையருடன் சேர்ந்தேன். அவர்கள் வன்னிநாடு முழுவதையும் தாங்கள் ஏப்பம்விடத் திட்டம் தீட்டுகிறார்கள்.

**பண்.வன் :** அவர்கள் அப்படித்தானே செய்ய முனைவார்கள். அதனால் உனக்கென்ன?

**காக்.வன்:** மகாராஜா! வெட்கத்தை விட்டுச் சொல்கிறேன். எனது பேராசைக்குத் தகுந்த பலன் கிடைத்துவிட்டது. என்னை வன்னிநாடு முழுவதற்கும் அரசனாக்குவதாக ஆசை காட்டினார்கள். இப்பொழுது திட்டம் நிறைவேறும் தருணத்தில் என்னை விரட்டிவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** இப்பொழுதேனும் புத்தி வந்ததா?

**காக்.வன்:** மகாராஜா! எனக்கு இராச்சியமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். பேராசை கோடி தரித்திரம். உள்ளது போதும். வெள்ளையரை வன்னி மண்ணிலிருந்து விரட்ட என்னாலான உதவியைச் செய்கிறேன்.

**கை.வன் :** அண்ணா, போதிய படை பலம் எம்மிடம் உண்டு. எமக்கு வேறெவரின் உதவியும் வேண்டாம்.

**காக்.வன்:** கைலாயவன்னியா, என்னை மன்னித்துவிடு. நான் அறியாமல் ஏதும் குற்றம் செய்திருப்பேன். அதை மனதில் வைத்து என்னைப் புறக்கணிக்காதே.

**பெரி.மெயி :** கரிக்கட்டுமூலையையும், முல்லைத்தீவையும் வெள்ளையரிடம் அடகு வைத்தாயாமே?

**காக்.வன்:** அவ்வளவும் கலப்பற்ற பொய்! இந்த வன்னி மண்ணின்மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். கயவர்களின் ஆசைவார்த்தையை நம்பி மோசம் போனதைத் தவிர வேறெவ்வித குற்றமுஞ் செய்யவில்லை.

**கை.வன் :** அண்ணா, நிலைதரமான கொள்கை இல்லாத எவரையும் நாம் சேர்த்து வைத்திருந்தால் எமக்கு ஆபத்துத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** தம்பி, சரணடைந்தவர்களுக்குத் தஞ்சம் கொடுப்பது வன்னியரின் பண்பு. மனிதன் பிழைவிடுவது இயற்கை. அதை எப்பொழுது உணர்கிறானோ அப்பொழுது திருந்தி விடுகிறான். காக்கை வன்னியன் எமது வன்னிநாட்டைச் சேர்ந்தவன். அதனால் அவனுக்குத் தஞ்சம் கொடுப்பது நமது கடமை.

**காக்.வன்:** மகாராஜா, இந்த ஏழையையும் ஒரு பொருட்டாக மதித்துத் தஞ்சம் தந்ததற்கு எனது மனப்பூர்வமான நன்றி! இனி நான் தங்கள் அடிமை.

**பண்.வன் :** காக்கைவன்னியரே, வன்னி மண்ணின் சுதந்திரத்தைக் காப்பாற்ற நீர் எம்முடன் தோளோடு தோள் நின்று போராட வேண்டும்.

**பெரி.மெயி :** அண்ணா, நாம் அதிக காலந் தாழ்த்தக் கூடாது. போருக்குரிய ஆயத்தங்கள் செய்ய வேண்டும். வன்னிநாட்டை நோக்கி மூன்று பெரிய படைகள் முன்னேறிக் கொண்டு வருவதாகச் செய்திகள் கிடைத்திருக்கின்றன.

**காக்.வன்:** பெயரளவில் மூன்று பெரிய படைதான். அவர்களோடு நெருங்கிப் பழகிய எனக்கல்லவோ தெரியும் அவர்களுடைய பலவீனத்தை. பண்டாரவன்னிய மகாராஜா என்றால் தளபதி யுவெலுக்குக் குலை நடுக்கம். கப்டன் டிறிபேக்கிற்கு நாலாம் முறைக் காய்ச்சல் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** சூடுகண்ட பூனையல்லவா?

**காக்.வன்:** அது அடுப்பங்கரையை நாடாது. வன்னி நாட்டின் மீது படையெடுப்பது எப்படியென்று ஆலோசனை செய்கிறார்கள். அடுத்தடுத்துத் தோல்வியென்றால் அவர்கள்தான் என்ன செய்வார்கள்? கண்டியிலே தோல்வி, முல்லைத்தீவிலே தோல்வி, கொட்டியாரத்திலே தோல்வி.

**கை.வன் :** ஆமாம், வெள்ளையருக்கு அடுத்தடுத்துத் தோல்விதான். அரிப்புக் கோட்டையை நாம் பிடித்து விடுவாமோ என்ற பயங்கூட அவர்களுக்கிருக்கிறதாம்.

**பண்.வன் :** எது எப்படியிருந்தாலும், நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். பகைவர் முல்லைத்தீவைத் தாக்கக்கூடும். அங்கு நாம் எமது படையை வைத்திருக்க வேண்டும்.

**காக்.வன்:** மகாராஜா! திட்டத்தை விபரமாகச் சொன்னால் நானும் உதவிபுரிய வாய்ப்பாயிருக்கும்.

**பண்.வன் :** சந்தர்ப்பத்தைப் பொறுத்து நாம் திட்டத்தை வகுத்துக் கொள்ளலாம். நீர் என்னுடன் நின்றால் போதும்.

**காக்.வன்:** தாங்கள் எதைச் சொன்னாலும் செய்யச் சித்தமாயிருக்கிறேன். நான் இப்பொழுது போய் எனது படைவீரரை ஆயத்தஞ் செய்யட்டுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** வேண்டாம். எங்களிடம் போதிய படை வீரர் உண்டு. நீர் வீணாகச் சிரமப்பட வேண்டாம். எம்முடன் எப்பொழுதும் நின்றால் போதும், உமது ஆலோசனைதான் எமக்குத் தேவை.

**காக்.வன் :** சரி மகாராஜா, தங்கள் சித்தம் என் பாக்கியம்.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 14

பண்டாரவன்னியன் அரண்மனையைச் சேர்ந்த பூசை மண்டபம். கொற்றவைத் தெய்வத்தின் சிலைக்கு முன்னால் வாள்களும் வேல்களும் வைக்கப்பட்டுள்ளன. சிலையின் இரு பக்கங்களிலும் குத்து விளக்குகள் ஒளி விடுகின்றன. கண்ணை மூடிக் கைகூப்பிக் கொண்டு இளவரசி நல்ல நாச்சன் நிற்கிறாள். தூரத்தில் போர் முரசு கேட்கிறது. குமாரசிங்கவன்னியன் போர்க் கோலத்துடன் நுழைகின்றான்.

**குமா.வன் :** கண்ணே, போர் முரசம் கேட்கிறது. போர் முனை என்னை அழைக்கிறது. போய்வா என்று விடைதா.

**நல்.நாச் :** சுவாமி, வெற்றி அல்லது வீரசுவர்க்கம் என்னும் தாரக மந்திரத்துடன் அன்னை பூமியைக் காத்த வீரபரம்பரையில் உதித்தவர் தாங்கள். தங்களைப் போருக்குப் போக விடையளிப்பதே எனது கடமை. என்றாலும்...

**குமா.வன் :** என்ன கண்ணே? உன் இதயக் கிடக்கையை எடுத்துச் சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்.நாச் :** இனந் தெரியாத பயமொன்று என் இதயத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. சிந்தை குழம்புகின்றது.

**குமா.வன் :** அன்பே! வீணாக ஏன் கலக்கமடைகின்றாய்? எனது வீரத்திலே உனக்கு நம்பிக்கையில்லையா?

**நல்.நாச் :** சுவாமி, தங்களின் வீரத்தில் அவநம்பிக்கைப் படுவேனா? திக்கெட்டும் புகழ்பரப்பி நிற்கும் தங்கள் வீரம் உறுதி அத்தனையும் நானறிவேன்.

**குமா.வன். :** பாராளும் பண்டாரவன்னியன் தங்கை நீ. நான் போருக்குப் போகும்போது கண்கலங்கலாமா?

**நல்.நாச். :** அதற்கில்லை. இன்றைக்குத் தங்கள் பிறந்த நாள். அதை நினைக்கும்போதுதான் எனக்குக் கலக்கமாயிருக்கிறது.

**குமா.வன். :** கண்ணே, அர்த்தமற்ற கலக்கம் வேண்டாம். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பதை அறியாயோ? அஞ்சினர்க்குச் சதமரணம். அஞ்சாத நெஞ்சத்து ஆடவருக்கொரு மரணம். அவனிமிசைப் பிறந்தோர் துஞ்சுவர் என்றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குவானேன்.

**நல்.நாச். :** (குமாரசிங்கன் வாயில் கைவைத்து) சுவாமி, திருமணஞ் செய்து ஆறுமாதங்கூட ஆகவில்லை. அதற்கிடையில் சாவைப்பற்றிப் பேசாதீர்கள். (கண்ணீர் வடிக்கிறாள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமா.வன்.** : கண்ணே! கடமை என்னை அழைக்கிறது. கணமேனும் தாமதியாது விடைகொடு.

**நல்.நாச்.** : சுவாமி! தாங்கள் வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்று என் தெய்வமாகிய தங்களைப் பிரார்த்திக்கிறேன். நானும் போர்முனையில் குதிக்க ஆயத்தம் செய்கிறேன்.

**குமா.வன்.** : கண்ணே, உனது மறக்குலப் பண்பு இப்பொழுதுதான் தலைகாட்டுகின்றது. வயிற்றில் வளரும் சிசுவிற்காகவேனும் பாதுகாப்பான இடத்தில் வாழவேண்டும். ஒரு சமயம் நாங்கள் எல்லோருமே போரில் வீரசுவர்க்கம் எய்திவிட்டால் அந்நியர் அடிமைப்படுத்தும் நாட்டை மீட்டுத்தர நீ ஆண் மகவொன்றை ஈன்று தரவேண்டும்.

**நல்.நாச்.** : சுவாமி, ஒல்லாந்தரை எதிர்த்து அஞ்சாது போரிட்ட பனங்காமத்தரசி நல்லநாச்சியாரின் பரம்பரையிலே தோன்றிய நான் தாங்களும் தமயனாரும் தத்தளிக்கும்போது உதவிக்கேனும் வரவேண்டாமா? அதற்கு அனுமதி தாருங்கள்.

**குமா.வன்.** : கண்ணே, உன் எண்ணம்போல் செய்ய அனுமதியளிக்கிறேன். நெற்றியில் திலகமிட்டுப் போர் வாளைக் கையில் கொடுத்து விடைதா.

**நல்.நாச்.** : (அப்படியே செய்து) போய் வாருங்கள் சுவாமி, போய் வாருங்கள்; பொன்னான எம் நாட்டைக் காக்கப் போய் வாருங்கள்.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 15

போர்க்களம். இருபக்கத்து வீரர்கள் பலர் களத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். பலவிதமான துயர ஒலிகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

திரை உயர்கிறது.

இளவரசி நல்லநாச்சன் வந்து தேடியபின் தனது கணவனின் உடலைக் கண்டு தழுவிக்கொண்டு புலம்புகிறாள்.

**நல்.நாச். :** ஆ!... அத்தான் வன்னிநாட்டின் சுதந்திரம் அஸ்தமிக்கப் போகிறதா? சுவாமி! தங்கள் பொன்போலும் திருமேனி பொடியாடிப் பூமியிலே புரள்கிறதே. மாற்றாரை வென்று வாகை சூடுவீர்களென்று போருக்குப் போகும்போது பொட்டிட்டு அனுப்பினேனே. இப்பொழுது வேற்றூராம் எமலோகத்திற்கே போய்விட்டீர்களே! அத்தான்!... கன்னித் தமிழ் மீதும் வன்னி மண்ணின் மீதும் தாங்கள் வைத்த கரையிலாப் பற்றினைப் போற்றுவார் இல்லை யென்பதாலா வானுலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுந்தீர்கள்? அத்தான்! அத்தான்! (தலையைப் பிணத்தின்மீது மோதி அடித்தல்) மண்ணாசை பிடித்த வெள்ளையர் தங்கள் பொன்னான மேனியிலே துப்பாக்கிக் குண்டுகளைத் துளைக்கவிட்டனரே. தங்களைக் கொன்று விட்டால் வன்னிமண்ணைக் கவர்ந்துவிடலாம் என்ற வீணாசையாலா இப்படிச் செய்தார்கள்? பார்புகழும் பண்டார வன்னியன் இருக்கும்வரை அவர்கள் எண்ணம் பலிக்காது என்பதை அறியாததேனோ? வளமிகு வன்னி மன்னரின் வலக்கரமே! பலர் புகழ் பண்டார வன்னியரின் பண்புடை மைத்துனரே!!... அத்தான்! (அழுகிறாள்; சிறிது நேரத்தின் பின் எழுந்து போர் வாளைக் கையிலெடுத்து) சுவாமி, இதுதான் தங்கள் போர்வாள். (மீண்டும் அழுதுகொண்டிருக்கத் தாய் வருகிறாள்.)

**பெருவன் :** (மகளைக் கட்டித் தழுவி அழுதல்) மகளே! விதி வலிமையுடையது. எழுதிய எழுத்தை மாற்றியமைக்க யாராலும் முடியாது. நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். கலங்காதே. வன்னிமண்ணின் சுதந்திரத்திற்காகப் போராடி மார்பிலே குண்டுபட்டு மருமகன் இறந்துவிட்டார். வீரசுவர்க்கமடையும் அவர் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்.

**நல்.நாச். :** அம்மா! பொன்னாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடி உயிர் துறந்த அவர் நிச்சயம் வீரசுவர்க்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவார். வன்னிமண்ணை அந்நியர் அடிமைப்படுத்த விடாது காக்கவேண்டியது எமது கடமை. நானே போர்க்களத்தில் குதிக்கப் போகிறேன்.

**பெருவன். :** வேண்டாம் மகளே.

(பண்டாரவன்னியன் வருகிறான்)

**பண்.வன். :** (குமாரசிங்கவன்னியன் மேல் விழுந்து) மைத்துனரே! வன்னிமண்ணைக் காப்பதற்காக நும்முயிரை விட்டீரா? இனி என்ன செய்வேன்? குமார சிங்கவன்னியரே! நும் புலமையும் வீரமும் மண்ணோடு மண்ணாக மறைந்துவிட்டனவா? வன்னியரின் பலத்தில் அரைவாசி போய்விட்டதே. போர்முனையில் புலியெனப் பாய்ந்த தாங்களா இன்று புழுதியில் புரள்கின்றீர்கள்? சிங்கம்போலச் சீறியெழுந்து போர் செய்த தாங்களா இன்று செயலற்றுக் கிடக்கிறீர்கள். மைத்துனா... மைத்துனா! (அழுகிறான்; சிறிது நேரத்தின்பின் எழுந்து) அம்மா, தங்காய்.

**பெருவன். :** மகனே! போரிலே மருமகன் இறந்துவிட்டார். மற்ற இருவரின் செய்தியும் தெரியவில்லை. நீயாகிலும் உயிர் தப்பி உயிர் வாழ வேண்டுமென்பதுதான் எனது ஆசை.

**பண்.வன். :** அம்மா! உனது இதயம் எனக்குப் புரியாமல் இல்லை. என்றாலும் நான் உயிருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்வரை அன்னை பூமியைக் காப்பதற்கு அரும்பாடுபட வேண்டும். பாராண்ட பண்டாரவன்னியன் பதுங்கி வாழ்ந்தான் என்ற அவப்பெயர் எனக்கு வேண்டாம்.

**பெருவன். :** செல்வா! பெற்ற மனம் கேட்குதில்லையடா. தம்பிமாரும் மைத்துனரும் இருக்கும்போது மனந்தளராது போருக்கு அனுப்பி வைத்தேன். இப்பொழுது நீ தன்னந்தனியனாய்ப் போர் செய்யப் போகிறாய்.

**பண்.வன். :** அம்மா! உன் மைந்தன் ஆயிரம் வெள்ளையருக்குப் பதில் சொல்வான். வெள்ளையர் முள்ளியவளையிலுள்ள கர்ப்பூரப் புல்வெளியில் முகாமிட்டிருக்கின்றனர். அவர்கள் அத்தனை பேரையும் இந்தக் கை வாளினால் வெட்டி வீழ்த்திவிடுவேன்.

**பெருவன். :** வேண்டாம் மகனே, வேண்டாம். தனியொருவன் நீ; உன்னால் என்ன செய்யமுடியும்?

**பண்.வன். :** எதுவும் முடியும் அம்மா. பண்டாரவன்னியன் என்னும் பெயரைக் கேட்டவுடனேயே பறங்கிகள் பதைபதைக்கின்றனர். நாட்டை ஆளவேண்டும் என்று பாலூட்டும்போதே வீரத்தையும் தியாகத்தையும் ஊட்டி வளர்த்த தாங்களா இப்படிச் சொல்வது? தடுக்காதே அம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்நாட்டைக் காக்க மீண்டும் போருக்குப் போக விடை கொடு.

**பெருவன். :** மகனே! என் நெஞ்சம் பதறுகிறது. உடல் வியர்க்கிறது. எனது குலக்கொழுந்துகளில் எஞ்சியிருக்கும் உன்னையும் எமனிடம் எப்படியடா அனுப்புவேன்? ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரா! நீதான் என் மகன் பக்கம் நிற்கவேண்டும்.

**பண்.வன். :** தான்தோன்றி ஈஸ்வரனும், காட்டுவிநாயகனும் என்றும் எனக்குத் துணையாக நிற்பார்கள். தாயே, விடை கொடு. திருக்கோணமலையிலிருந்து வந்த வெள்ளைப் படையினர் வெடிவித்த கல்லில் இருக்கிறார்கள். அவர்கள் இன்றிரவே கர்ப்பூரப் புல்வெளிக்கு வந்துவிடுவார்கள். விடை கொடு தாயே.

**பெருவன். :** (கட்டித் தழுவி) போய் வா மகனே! வெற்றியுடன் திரும்பி வா!

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 16

புதுக்குடியிருப்பை அடுத்துள்ள ஒரு கிராமம். பாசறைக்கு முன் பண்டாரவன்னியனும், காக்கைவன்னியனும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

**காக்.வன்:** மகாராஜா! தாங்கள் ஒரே வாள்வீச்சில் அறுபது வெள்ளையரைக் கர்ப்பூரப் புல்வெளியில் வெட்டி வீழ்த்தி விட்டீர்கள். அதன் பின்பும் எட்வேட்மெட்சின் படை முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றி விட்டது.

**பண்.வன். :** முல்லைத்தீவுக் கோட்டையைக் கைப்பற்றி விட்டால் வன்னி இராச்சியம் முழுவதையும் கைப்பற்றிவிடலாம் எனப் பகற்கனவு காண்கின்றனர் வெள்ளையர். அவர்கள் எண்ணம் ஈடேறாது.

**காக்.வன். :** ஆம் மகாராஜா, தங்களின் வீரத்தைப் பற்றி அவர்கள் அறியவில்லை. அதனால்தான் இவ்வளவு கொட்டமடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன்** : காக்கைவன்னியா! இப்பொழுது வன்னிநாடு முழுவதையும் காக்கவேண்டும். மைத்துனர் மாண்டுவிட்டார். தம்பிமார்களின் செய்தி எதுவுமே தெரியவில்லை. தனியொருவன் என்றாலும் என் போர்வாள் வெள்ளையரின் தலையைச் சீவியெறியும்.

**காக்.வன்.** : ஏன் மகாராஜா, 'தனியொருவன்' என்று கூறுகின்றீர்களே? தங்களுக்குத் துணையாக நான் இருக்கும்போது வெள்ளையர்கள் வன்னிநாட்டைப் பிடித்துவிட முடியாது.

**பண்.வன்.** : காக்கைவன்னியா! இப்பொழுது புதுக் குடியிருப்பில் படை திரட்ட வேண்டும். வன்னிநாடு எனது உயிர்; அதனைக் காப்பது எனது உயிர்மூச்சு. நான் உயிருடனிருக்கும் வரை வன்னிமண்ணை எவரும் அடிமைப்படுத்த முடியாது.

**காக்.வன்.** : மகாராஜா! இதைத் தாங்கள் சொல்லியா தெரியவேண்டும்? தங்களின் இலட்சியத்திற்கு உதவியாயிருப்பதே எனது கடமை. புதுக் குடியிருப்பிலிருந்து நாம் ஒட்டுசுட்டான் செல்லவேண்டும்.

**பண்.வன்.** : காக்கை வன்னியரே, முல்லைத் தீவுக் கோட்டையை நாம் கைப்பற்றியபோது கப்டன் டிறிபேக் புறமுதுகு காட்டி ஓடிவிட்டார். அவர் இப்பொழுது படையுடன் வரக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்.வன். :** டிறிபேக்காவது படையுடன் வருவதாவது; தங்கள் பெயரைக் கேட்டவுடனேயே பயந்து நடுங்கும் டிறிபேக் நிச்சயமாக வரமாட்டார். தங்களின் வீரத்திற்குமுன் இந்தச் சில்லறைகள் என்ன செய்ய முடியும்.

**பண்.வன் :** எதற்கும் படையொன்றைத் திரட்ட வேண்டும். புதுக்குடியிருப்புக்கு அப்பாலுள்ள சிறிய கிராமம் ஒன்றில் நாம் இருந்துகொண்டே படையைத் திரட்டலாம். மேலும் ஒட்டுசுட்டான் மார்க்கமாக ஒரு படை வருவதாக அறிகிறேன்.

**காக்.வன். :** படையென்ற பெயரிலே நாலைந்து நோஞ்சான்கள் வருவார்கள். அவர்களைத் தோற்கடிப்பது மிகவுஞ் சுலபம்.

(கண்ணால் சைகை செய்கிறான். கப்டன் டிறிபேக், எட்வேட்மெட்ச் என்போர் பண்டாரவன்னியனை வளைத்துப் பிடித்துக் கொள்கின்றனர்) ஹக்... ஹக்... ஹா... வகையாக மாட்டிக்கொண்டாயா பண்டாரவன்னியா? காக்கை வன்னியனை அலட்சியம் செய்தது ஞாபகமிருக்கிறதா?

**பண்.வன். :** துரோகி! நீயா என்னைக் காட்டிக் கொடுத்தாய்? குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே! நச்சுப் பாம்பே! நயவஞ்சகப் பேயே! தூ!... (காறி உமிழ்கிறான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்.வன். :** ஆம். நானேதான்! உன் வாய்க் கொழுப்பு இன்னும் அடங்கவில்லையா? சூரியனே அஸ்தமிக்காதது பிரித்தானிய சாம்ராஜ்யம். அதனை எதிர்க்கிறார் பண்டாரவன்னியன் என்ற துரும்பு.

**பண்.வன். :** அந்நியன் புகழ்பாடும் அறிவிலியே! வன்னி மண் அடிமையாவதுதான் உனக்குச் சம்மதமா? நீ இன்றைக்கு என்னை மாத்திரமல்ல, வன்னிநாட்டை - அதன் வீர சுதந்திரத்தை - பிறப்புரிமையைக் காட்டிக் கொடுத்து விட்டாய். சுயநலத்திற் பிறந்த சோம்பேறியே! என்னை அடுத்துக் கெடுத்த அறிவிலியே! உன்னை வன்னி மண் உள்ளளவும் காறியுமிழும்.

**காக்.வன். :** பாவம்... வாள் வீரம் பலிக்கவில்லை. வாய் வீரம் பேசுகின்றான்.

**பண்.வன். :** நிறுத்தடா நெறி கெட்டவனே! வாளெடுத்துப் போர் செய்யத் தெரிந்திருந்தால் இன்று நீ தாள் பணிந்து வெள்ளையருக்குக் குற்றேவல் புரிந்திருக்க மாட்டாய்.

**காக்.வன். :** பித்தம் தலைக்கேறிவிட்டதா?

**பண்.வன். :** ஆம். அது உன் தலையிலே நிரந்தரமாகத் தங்கிவிட்டது. குலத்துரோகி! எச்சில் இலைக்காக என்னருமைப் பொன்னாட்டைக் காட்டிக் கொடுத்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்.வன். :** என்னைவிட ஊர்பேர் தெரியாத குமாரசிங்கன் வீரனென்று நினைத்து உன் தங்கையைத் திருமணஞ் செய்து கொடுத்தாயே. இப்பொழுது அந்த வீரன் எங்கே?

**பண்.வன். :** அற்பபதரே! குமாரசிங்கவன்னியன் தாய் நாட்டிற்காக மார்பிலே குண்டேந்தி வீரசுவர்க்கம் அடைந்துவிட்டானடா! உன்னைப் போல அந்நியருக்கு அடிபணிந்து கைகட்டிச் சேவகம் செய்யவில்லையடா.

**காக்.வன்:** (நகைசெய்து) முட்டாள்தனமாக உயிரை விடுபவனுக்குப் பெயர் வீரன்; தியாகி. பண்டார வன்னியா! இப்பொழுதாவது உன் வாய்ப் பந்தலை நிறுத்திவிட்டு மன்னிப்புக் கேள். கப்பங் கொடுத்து ஆள உடன்படு. துரைகள் இரக்கசிந்தை உடையவர்கள்; உன்னை மன்னித்து விடுவார்கள்.

**பண்.வன். :** (உரக்கச் சிரித்து) நான் உன்னைப் போல் கோழையாகவிருந்தால் உனது எண்ணப்படி நடந்திருப்பேன். காக்கை வன்னியா! வெள்ளையருக்காகப் பரிந்து பேசி அதற்குரிய கூலியைப் பெற்றுக் கொள். உன்னைப் போன்றவர்கள் வேறு விதமாகப் பிழைக்க முடியாது.

**டிறிபேக் :** போதும் நிறுத்து, நாளை நீதிமன்றத்தில் நீ சொல்ல வேண்டியதைச் சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன்.** : (உரக்கச் சிரித்து) உங்களுக்கும் ஒரு நீதியிருக்கிறது.

**டிறிபேக்** : ஆங்கில இராச்சியத்தை அவமதிக்காதே. மதித்து நடந்தால் உன்னை மன்னித்துவிடுவோம்; இவனை இழுத்துச் செல்லுங்கள்.

**பண்.வன்.** : என்னை இழுத்துச் செல்ல இவர்களால் முடியாது. ஏனிந்தச் சிரமம்? நானே வருகிறேன். என்ன தான் விசாரிக்கப் போகிறீர்கள் என்று பார்ப்போமே.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 17

வெள்ளையரின் பாசறை நீதிமன்றம்.

நடுவிலுள்ள ஆசனத்தில் லெப்டினென்ட் யுவெல் அமர்ந்திருக்கிறார். அவரின் ஒரு பக்கத்தில் தளபதி டிறிபேக்கும் மறுபக்கத்தில் காக்கைவன்னியனும் நிற்கின்றனர். சிறிது தூரத்தில் வாளேந்திய வீரர்கள் நிற்கின்றனர். பண்டாரவன்னியன் சங்கிலியால் கட்டப்பட்டு இழுத்துவரப்படுகிறான்.

**யுவெல் :** மிஸ்டர் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் தாங்கள்தானே?

**பண்.வன். :** (மௌனம்)

**யுவெல் :** மௌனம் சாதிப்பது எம்மை அவமதிப்பதாகும். உன்மேல் பல குற்றங்கள் உண்டு man.

**பண்.வன். :** நீதியை மறைத்து வஞ்சகத்தை முன்னிறுத்தி நாடகம் ஆடும்போது எப்படிப் பேசவரும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுவெல்** : முல்லைத்தீவுக் கோட்டையை இடித்தது ஒரு குற்றம்; கர்ப்பூரப்புல்வெளியில் ஆங்கில வீரர் அறுபது பேரை ஒரே வாள்வீச்சில் கொலை செய்தது இன்னொரு குற்றம்; ஆங்கில அரசாங்கத்தையும், தளபதியையும் அவமதித்தது வேறொரு குற்றம்; ஆங்கிலேயரை இலங்கையிலிருந்து அகற்றுவதற்குக் கண்டியரசனுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தது மற்றொரு குற்றம் - இத்தனை குற்றங்களுக்கும் என்ன பதில் சொல்கிறாய்?

**பண்.வன்.** : ஏன் இந்த அளவில் நிறுத்திவிட்டீர்கள்? முல்லைத்தீவுப் போரிலே கப்டன் டிறிபேக் வெறுங்கையனாய் நின்றபோது, இன்று போய்ப் போர்க்கு நாளை வா என்று கூறியது ஒரு குற்றம்; வன்னித் திருநாட்டின் சுதந்திரத்தைக் காக்க முனைந்தது இன்னொரு குற்றம்; கறுவா வாங்க வந்த கயவர்களுக்கு அடிபணியாதது வேறொரு குற்றம்; இப்படி அடுக்கிக் கொண்டே போகலாமே.

**யுவெல்** : சட்டப்!... நாவை அடக்கிப் பேசு. இது நீதி மன்றம் என்பது ஞாபகமிருக்கட்டும்.

**பண்.வன்.** : இதை நீதிமன்றமென்று எப்பொழுதாவது நினைத்து அதை மறந்தாலல்லவோ ஞாபகப்படுத்துவது? இங்கே நீதியுமில்லை. இது நீதியை நிலைநிறுத்தும் மன்றமுமில்லை. நேர்நின்று போர் செய்து பழக்கமில்லாமல் மறைந்திருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கும் மானங்கெட்டவரின் கண்துடைப்பு மன்றம்.

**யுவெல்** : அதிகம் பேசாதே. உன்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களுக்கு என்ன பதில் சொல்கிறாய்?

**பண்.வன்.** : பதில்... யாரை யார் கேட்க வேண்டிய கேள்வி? நான் கேட்பதற்கு நீர் பதில் சொல்லும். மனிதனின் பிறப்புரிமையை மதியாது ஏகாதிபத்திய வெறிபிடித்துழலும் உமது அரசாங்கம் குற்றஞ் செய்யவில்லையா? என்னுடைய பிரதேசத்திற் கோட்டை கட்டிப் போர் வீரரை நிறுத்தியது குற்றமில்லையா?

**யுவெல்** : (மேசைமேல் அடித்து) நிறுத்து. இப்பொழுது உன்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களுக்குப் பதில் சொல். கப்பங் கொடுக்க மறுத்தது குற்றமில்லையா?

**பண்.வன்.** : நாவை அடக்கிப் பேசும். கப்பம்... யார் யாருக்குச் செலுத்த வேண்டும்? சொந்தக்காரன் வந்தவனுக்குக் கப்பம் செலுத்த வேண்டுமா? பண்டார வன்னியன் வரலாற்றிலே கப்பம் என்ற வார்த்தைக்கே அர்த்தமில்லை. உங்களுக்கு ஏதும் தேவையென்றால் இரந்து கேளுங்கள்; கேட்டிருந்தால் செந்நெல்லும், தேனும், தேக்கும், யானைத் தந்தமும் தாராளமாகக் கொடுத்திருப்பேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுவெல்** : என்ன செருக்கு? கர்ப்பூரப் புல்வெளியில் ஆங்கில வீரர் அறுபது பேரை ஒரு வாள் வீச்சில் கொலை செய்ததேன்?

**பண்.வன்.** : அப்பொழுது என்கையிலிருந்தது ஒரேயொரு போர் வாளாக இருந்ததால்! இன்னுமொரு வாள் இருந்திருந்தால் இன்னும் அறுபது பேரைக் கொன்றிருப்பேன்.

**யுவெல்** : கேலிக்கு இது இடமன்று. ஆங்கில வீரரைக் கொலை செய்தது குற்றம்!

**பண்.வன்.** : உங்களைப் போல மறைந்திருந்து கொல்லவில்லை. நேரே சென்றுதான் கொன்றேன். யுத்தத்திலே எதிரியின் படையைக் கொல்வதற்கும் காரணம் காட்ட வேண்டும் என்றால் இப்பொழுது இறந்துவிட்ட அத்தனை வன்னி வீரருக்கும் நீங்கள் காரணம் காட்ட வேண்டும்.

**யுவெல்** : ஆங்கிலேயரை இலங்கையிலிருந்து அகற்றச் சூழ்ச்சி செய்தது?

**பண்.வன்.** : இதற்குச் சூழ்ச்சி செய்ய வேண்டியதில்லை. நேருக்கு நேர் சொல்கிறேன்; உங்களை இலங்கையிலிருந்து அகற்றினால் தான் எனக்கு நித்திரை வரும்.

**புவெல்** : நீ இப்பொழுது ஆங்கில அரசை அவமதிக்கிறாய்.

**பண்.வன்.** : மதிப்பதற்கேதும் இல்லாதபோது வேறென்ன செய்வது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யுவெல்** : உலகிலேயே ஆங்கில இராச்சியந்தான் நீதிக்குப் பெயர் போனது.

**பண்.வன்.** : அயலான் வீட்டிலே எஜமானாயிருப்பது நீதியென்றால் அந்த நீதி இந்த நாட்டிற்கு வேண்டவே வேண்டாம்.

**யுவெல்** : சாதுரியமாகப் பேசிக் குற்றத்தை மறைக்கப் பார்க்கிறாய்.

**பண்.வன்** : அப்படி மறைத்துப் பல்லிளித்துத் தப்பிப் போகும் எண்ணம் எனது வரலாற்றில் இல்லை.

**யுவெல்** : நீ இப்பொழுது குற்றவாளி.

**பண்.வன்** : இது ஏற்கனவே தீர்மானித்ததுதானே.. அதற்கேன் இத்தனை ஆர்ப்பாட்டமும்? 'ஆங்கில அரசு நீதியானது, நேர்மையானது' என உலகத்தின் கண்ணில் பொடி தூவத்தானே.

**யுவெல்** : இப்பொழுதாவது மன்னிப்புக் கேள்.

**பண்.வன்** : நீ மன்னிப்புக் கேட்டால் உனது அரசாங்கத்திற்கு நன்மையுண்டு.

**யுவெல்** : அதிகம் பேசவேண்டாம். உன் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றங்களுக்குப் பதில் சொல்லத் தவறியதற்காகவும், ஆங்கில அரசையும் - விசாரணை மன்றத்தையும் அவமதித்ததற்காகவும் உன்னைக் குற்றவாளி எனக் கண்டு தூக்குத் தண்டனை விதிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்.வன் :** (சங்கிலியை அறுத்துக் கொண்டு வாளை உருவி) பண்டாரவன்னியனைத் தூக்கிலிட உன் பாட்டனாலும் முடியாது. பண்டார வன்னியன் இறப்பதாயிருந்தால் யுத்தம் செய்து தான் இறப்பான். வீரர்கள் இங்கிருந்தால் வாருங்கள் வாட் போருக்கு.

(கப்டன் வொன்டிறிபேக் எழுந்து பண்டாரவன்னியனுடன் வாட்போர் புரிகிறான். தூர இருந்து ஓர் ஆங்கில வெறியன் துப்பாக்கியாற் சுடுகிறான். துப்பாக்கிக் குண்டு பண்டாரவன்னியனின் மார்பிற் பாய்கிறது.)

**பண்.வன் :** மார்பிலே குண்டு! ஹக்...ஹக்...ஹா... நேர் நின்று போர் செய்யத் தெரியாத கோழைகள் கொடுத்த பரிசு. வளமிகு வன்னிநாடே! நீ இனி அடிமையாகி அந்நியரின் காலடியில் மிதிபடப் போகிறாயா? வந்தாரை வாழவைக்கும் வன்னித் திருநாடே! இன்று உன் சொந்தச் சுதந்திரம் பறிபோகும் திருநாளா? அஞ்சினர்க்குச் சதமரணம்; அஞ்சாத நெஞ்சத்து ஆடவருக்கொரு மரணம். அவனிமிசைப் பிறந்தோர் துஞ்சுவர் என்றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும் துன்மதி மூடரைக் கண்டால் புன்னகை செய்பவன் யான். வெள்ளையர்களே! பண்டாரவன்னியன் இறந்துவிட்டால் வன்னி மண்ணை அடிமைப்படுத்திவிடலாம் என்ற எண்ணமா? இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பண்டாரவன்னியன் சிந்தும் இரத்தத்திலிருந்து ஆயிரம் ஆயிரம் பண்டாரவன்னியர்கள் தோன்றுவார்கள். அவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்? தாயகத்து மண்ணே! உன் வீடகத்துத் திருவிளக்கைப் பார். வன்னி மாதா! உன் வளமார் திருப்புதல்வனைப் பார். சாவதற்கு நான் அஞ்சவில்லை. தாய் மண் அடிமையாகப் போகிறதேயென்றுதான் கலங்குகின்றேன்.

காட்டிக் கொடுத்த காக்கைவன்னியா! உன் உடலைக் கிழித்து உன் இரத்தத்தால் வன்னிமாதாவிற்கு அபிஷேகம் செய்ய முடியவில்லையே என்றுதான் கவலைப்படுகிறேன். உன் குடலை எடுத்துக் குருதியால் குளிப்பாட்ட முடியவில்லையே என்று தான் வருந்துகின்றேன். உன் மண்டையைப் பிளந்து, மூளையைப் பிய்த்து மலராகத் தூவ முடியவில்லையே என்று தான் கவலை. பிறந்த பொன்னாடே! உன் புதல்வன் இன்று மரணத்தை அரவணைக்கிறான். மகிழ்ச்சியுடன், பெருமையுடன் அன்னை பூமியின் மானங்காக்க அல்லும் பகலும் பாடுபட்டதற்கு வெள்ளையர் கொடுத்த பரிசாம் மரண தேவதையின் மடியிலே தவழப் போகிறான்.

வன்னிப் பெருங்குடி மக்களே! உங்கள் மதிப்பிற்குரிய காவலன் மறைந்துவிட்டபோதும் தாய் நாட்டின் சுதந்திரத்தைக் காக்கத் திரண்டெழுங்கள். வன்னிநாட்டின் ஓர் அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணைக்கூட மிதிக்கவிடாதீர்கள். தீயவர்களை அகற்றித் திக்கெட்டும் புகழ் பரப்பி வாழுங்கள். காக்கை வன்னியன் மீது காறியுமிழுங்கள். ஐயோ! அம்மா!! (வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதறுகிறான்) அன்னை பூமியே! உன்னை நான் மறவேன், வன்னி மாதா! உன் அருந்தவப் புதல்வன் விடைபெறுகிறான்.

(வீழ்ந்து மடிகிறான். வெள்ளையர் ஆர்ப்பரிக்கின்றனர்.)

**டிறிபேக் :** பிடிபட்டது வன்னிநாடு! அடங்கிவிட்டது அடங்காப்பற்று!!

(பின்னணியில் சோக இசையுடன்)
ஒளி மங்குதல்

திரை ஆறுதலாக விடுதல்

உன்னிறுதி மூச்சுவரை நாட்டின் மானம்
ஒன்றனையே காப்பதற்குச் சபதம் பூண்ட
மன்னவனே! போர்க்களத்தில் வீரம் காட்டி
வானுலகம் புகுந்துபுகழ் மண்ணில் விட்டாய்
இந்நிலத்தில் பிறர்க்கடங்காப் பற்றை எங்கள்
இரத்தத்தில் ஊட்டியநீ பிரிந்தா லும்எம்
வன்னிநிலம் அந்நியருக் கடங்கா தென்னும்
வாய்மைதனை அடக்கிவிட முடியா தையா.

திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் வாழ்க்கை வரலாறு

கலாநிதி முல்லை மணி வே. சுப்பிரமணியம் அவர்கள் இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முள்ளியவளையில் வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் மகனாக 3.5.1933இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். மகரகமை அரசினர் ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெற்று விஞ்ஞான ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணி சிறப்புப் (B.A. Hons) பட்டம் பெற்றார். 1973 தொடக்கம் 1986 வரை மட்டக்களப்பு, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் சேவையாற்றினார் பின்னர் பிரதம கல்வி அதிகாரியாகவும் முல்லைத்தீவு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 1993இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக கலை இலக்கியப் பணியில் ஈடுபட்டு உழைத்துவரும் இவர் இதுவரை 14 நூல்களை வெளியிட்டுள்ளார். நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை இலக்கிய விமர்சனம் என்னும் பல்வேறு துறைகளிலும் காத்திரமான பங்களிப்புச் செய்துள்ளார். இவரது சிறுகதைத் தொகுதியான அரசிகள் அழுவதில்லை, வரலாற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலான வன்னியர் திலகம் என்பன இலங்கை அரசின் தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றன. வன்னியர் திலகம், கமுகஞ்சோலை என்னும் நாவல்கள் வடக்கு கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் சாகித்திய விருதுகளைச் சுவீகரித்துள்ளன. கொழும்பு வீரகேசரி நாவல் போட்டியில் பரிசுபெற்ற 'மல்லிகை வனம்' நாவல் தமிழகத்தில் சோமு புத்தக நிலையத்தால் வெளியிடப்பட்டது.

கலைஞர் திலகம், தமிழ்மணி, கலாபூஷணம், இலக்கியச் செல்வர், தமிழ் அறிஞர், இலக்கிய ஜோதி என்றும் கௌரவப் பட்டங்களை இவர் பெற்றுள்ளார்.

இவரது கலை இலக்கிய சேவையையும், ஆராய்ச்சித் திறனையும் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப் (முனைவர்) பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆளுநர் விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது. சிறந்த சமூக சேவையாளராகிய இவருக்கு இலங்கை அரசு அகில இலங்கை சமாதான நீதவான் பதவியை வழங்கியுள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலை வேட்கையின் குறியீடாகவும், அடையாளமாகவும் நிகழும் பண்டாரவன்னியன் நாடகம் அமெரிக்க, ஐரோப்பிய, ஆசிய, ஔஸ்திரேலிய நாடுகளில் வாழும் தமிழர்களால் நடிக்கப்பட்டு வருகிறது. இந்த நாடகத்தை அடியொற்றி கலைஞர் மு. கருணாநிதி பாயும் புலி பண்டாரக வன்னியன் என்னும் நாவலையும் கவிஞர் ஜின்னாஹ் ஷரிபுத்தின் பண்டார வன்னியன் காவியத்தையும் யாத்துள்ளனர்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இந்நூலாசிரியர்
முல்லைமணி
வே.சுப்பிரமணியம்

நல்ல தலைவர்களை மக்கள் இனங்கண்டுகொள்ளவும் நல்ல தலைவர்கள் தோன்றவும் பண்டாரவன்னியன் போன்ற நாடகங்கள் உதவும். நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், சொந்தக் கலாச்சாரப் பற்றும் வளரவும் இவ்வரலாற்று நாடகம் உதவும். வன்னிப் பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும் இலங்கைத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும் தேசப் பற்றும் உரிமைக்குரலும் ஓங்க இந்நாடகம் பயன்படும்.

பேராசிரியர்
சு. வித்தியானந்தன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org